ட்ராஃபிக் டிக்கெட்
Small Claims Court
"ட்ராஃபிக்" குமார் எனும்
வினோத் குமார்
Mobile: 647-667-6034
Landline: 1-866-541-3966
Precision

29 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 29 | பாலம்: 16 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 15, 2019

# ஜம்மு காஷ்மீரின் சிறப்பு நிலை நீக்கம்!

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்பு நிலை வழங்கிவந்த இந்திய அரசியல் சட்டப்பிரிவு 370ஐ நீக்குவதாக இந்தியாவை தற்போது ஆளும் பாரதிய ஜனதா அரசு அறிவித்துள்ளது.

இந்திய அரசின் மத்திய உள்துறை அமைச்சர் அமிர்த் ஷா இந்திய நாடாளுமன்றத்தில் காஷ்மீர் மாநிலத்திற்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்பு நிலையை நீக்குவதற்கான சட்டமூலத்தை 2019 ஒகஸ்ற் 5இல் அறிவித்தார். இதில் காஷ்மீர் மாநிலம், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் மற்றும் லடாக் யூனியன் பிரதேசம் என இரண்டாகப் பிரிக்கப்படும். ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்குத் தனியாகச் சட்ட மன்றம் இருக்கும். லடாக் யூனியன் பிரதேசத்திற்குத் தனியாகச் சட்ட மன்றம் இருக்காது. அது நேரடியாக மத்திய அரசின் ஆளுமைக்குக் கீழ்வரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காஷ்மீர் மாநிலம் இந்திய அரசியலமைப்பில் அதற்கு வழங்கப்பட்டிருந்த சிறப்புரிமைச் சட்டப்பிரிவுகள் 370 மற்றும் 35Aஐ இழப்பதுடன் மாநில அந்தஸ்தையும் இழக்கிறது. இத்தீர்மானத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் அளித்திருந்தார்.



இந்திய நாடாளுமன்றத்தில் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களாக காஷ்மீர் மாநிலத்தைப் பிரிக்கும் சட்டமூலம் 2019 ஒகஸ்ற் 6இல் 64 அதிகப்படியான வாக்குகளால் மாநிலங்கள் அவையில் (மேலவை) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலத்திற்கு ஆதரவாக 125 வாக்குகளும் எதிராக 61 வாக்குகளும் பதிவாகியிருந்தன. இதைத் தொடர்ந்து இச்சட்டமூலம் 2019 ஒகஸ்ற் 7இல் 300 அதிகப்படியான வாக்குகளால் மக்களவையில் (கீழவை) நிறைவேற்றப்பட்டது. இச்சட்டமூலத்திற்கு ஆதரவாக 370 வாக்குகளும் எதிராக 70 வாக்குகளும் பதிவாகியிருந்தன.

2019 ஒகஸ்ற் 9இல் காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கும் சட்டமூலத்திற்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் கையெழுத்திட்டு அதிகாரபூர்வமாக அமலுக்குக் கொண்டு வந்தார். 2019 ஒக்ரோபர் 31இலிருந்து ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசமும் மற்றும் லடாக் யூனியன் பிரதேசமும் உத்தியோக பூர்வமாகச் செயற்பட ஆரம்பிக்கின்றன.

இந்திய அரசியலமைப்பின் சிறப்புரிமைச் சட்டப்பிரிவு 370இன் கீழ் காஷ்மீர் மாநிலம் இந்தியாவின் மற்றைய மாநிலங்களை விட அதிகளவில் மாநில சுயாட்சியைக் கொண்டிருந்தது. இராணுவம், வெளியுறவுத்துறை, நிதி மற்றும் தகவல் தொடர்புத் துறையைத் தவிர ஏனைய துறைகளில் இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் அனைத்துச் சட்டங்களும் காஷ்மீர் மாநில சட்ட சபையில் ஒப்புதலைப் பெற்றால் மட்டுமே காஷ்மீர் மாநிலத்தில் அமல்படுத்த முடியும். வேறு மாநிலத்தைச் சேர்ந்தோர் ஜம்மு காஷ்மீரில் காணி, நிலம் வாங்க முடியாது. காஷ்மீர் மாநிலப் பெண்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரை மணம் முடித்தால் காஷ்மீரில் காணி நிலம் வாங்கும் உரிமையை இழப்பர். ஆனால் காஷ்மீர் மாநில ஆண்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரை மணம் முடிந்தாலும் அவர்களுக்குக் காஷ்மீரில் காணி, நிலம் வாங்கும் உரிமை உண்டு. ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குத் தனி அரசியல் சாசனம் உண்டு. அங்கு சட்ட மன்றத்தின் பதவிக்காலம் 6 ஆண்டுகள். ஆனால் ஏனைய இந்திய மாநிலங்களின் சட்ட மன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

Lexus of Richmond Hill
LEXUS
குமார் ஜெகசோதி
Tel. 905.883.8812
Cell: 416.451.0565
Kumar Jegasothy
Sales Consultant
11552 Yonge Street
Richmond Hill, ON L4E 3N7
www.lexusrh.com

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN
MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
HomeLife/Future Realty Inc.

DENTAL OFFICE
3351 Markham Road, Unit #129
Markham & Steeles
Tel: 416.609.2022
3150 Eglinton Ave East, Unit #5
Markham & Eglinton
Tel: 416.264.3232
Dentistry for children, adults and seniors
Dr.Iru Vijayanathan
BDS, FAGD, MFDS RCPS(Glasg.)
Monday to Saturday
10am to 8pm
Dr.Rashmi Jenojan
BDS, University Of London, UK

உவகை
மணமக்கள் இணைப்பு
Uvakai
Marriage Broker
Valvai Zagara
647.885.6104
email: uvakai100@gmail.com

Beauty By Pirasha
Makeup & Hair Artist
• Bridal Makeup
• Reception Makeup
• Ceremony Makeup
• Makeup & Hair for all occasion
• Saree pleats & drape
416.400.7189

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
Toll Free: 1-844-878-2721 Fax: 647-351-3099
mortgage@nesan.ca www.nesan.ca
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
SUBRA MORTGAGES INC

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Dir: 647.839.0079
rathiga24@hotmail.com
HomeLife/Future



$312,900
Kennedy & Sheppard
Only 10% Down until 2022
$1,289,900
Brand New 3 Units to choose in Markham Hwy 7 & 9th Line 2 Bed Room / 2 Wash Room Low Maintanance fee
Just Listed Midland & Eglinton All Utilities Included Low Maint Fee BR: 2 WR: 1
Pre Constuction Condos & Townhouses at VIP Price Over 20 Projects in Hand
CALL FOR PROMOTIONS & DISCOUNT
Just Listed in Markham Box Grove / HWY 407 Open House Everyday Call for appointment 4+2 Bed Rooms / 5 Wash Rooms Finished Basement
Price Reduced
$99,000
Double Double PIZZA & CHICKEN
2 Units to Choose
$1,190,000
Corner Lot/Double Garage
Bayview/Finch BR:2 WR:2 649 SF
Oshawa BR:4 WR:4
Franchise Opportunity Oshawa
Oshawa-Brand New 1900 SF BR:4 WR:3 Listed below Builder Price
Markham BR:4 WR: 3
Attention Sellers
Free Home Staging
Over $100,000 Staging Furniture
Certified Stager
Interest Free Renovation Loan
Only the Best Deals in Real Estate
BUILDERS' APPROVED PLATINUM / VIP AGENT
Thas Thirunavukkarasu
Sales Representative - Dip-in-Eng (Hons)
416-388-4333
thasremax@gmail.com
RE/MAX ACE REALTY INC., BROKERAGE
3-1286 Kennedy Road, Scarborough ON
Not intented to Solicit buyers/ sellers under contract.




GOOD SHEPPARD PHYSIOTHERAPY REHAB CLINIC
தமிழ்நாட்டிலும் கனடாவிலும் பத்து வருடத்துக்கு மேலாக அனுபவமுள்ள பிசியோத்திரபிஸ்டுகளால் ஆரம்பிக்கப்பட்ட
REHAB CLINIC IN SCARBOROUGH
( Markham & Lawrence )
OUR SERVICES
• PHYSIOTHERAPY
• LASER THERAPY
• CHIROPRACTIC
• MASSAGETHERAPY
• ORTHOTICS
• VESTIBULAR REHAB (DIZZINESS)
• PELVIC HEALTH PHYSIOTHERAPY
• COMPRESSION STOCKINGS,
• BRACES
CONDITIONS TREATED
• SPORTS INJURIES, LIGAMENT INJURIES
• NECK PAIN
• BACKPAIN
• SHOULDER PAIN
• HEEL PAIN
• JOINT PAIN
• DIZZINESS
• PELVIC PAIN- PROLAPSE, INCONTINENCE
• POST-OPERATIVE REHAB EXERCISES
சகல விதமான காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்...
சகல காப்புறுதி நிறுவனங்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டு உங்கள் கட்டணங்களை பெற்றுக்கொள்வோம்
LIVING WITH PAIN? CALL FOR 15 minutes FREE consultation.
15 நிமிடம் தமிழில் இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Opening Hours
Monday - Friday 10 AM - 7 PM
Saturday 10 AM - 5 PM
Sunday Closed.
Phone: 416.431.3200 | Fax: 416.431.3202
3340 Lawrence ave East. Unit 2B Scarborough, M1H 1A7
email: goodsheppardphysio@gmail.com | web: www.goodsheppardphysio.ca


அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
ரொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.
உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்
நம்பிக்கை
நாணயம்
உத்தரவாதம்
உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை
416-757-0034, 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.
Shankar & Co. விற்கு அருகாமையில்


Closing Problem !!!!!!
You need secured Loan from $200* per month for
Cottage
Farm
BUY & SELL REAL ESTATE
Business
New Condo
Taunton Rd E/ Salem Road
$839, 900
4 bm 3 Wsrm
Scarborough town centre
Condo 2bm + den 2 bath Large can be 3 bm
Sheppard n markham
$370,900
Excellent Condo Apt 2 bm 2 wash-room
Scarbourough $1,110,000
Approx 3200 Sqft + Bsmt. Deep Lot! 5 bedroom basement apartment
Salem N. Of Rossland
Salem N. Of Rosslandinground Salt Water Pool 4 bm 4 Wsrm Hardwood Thru-Out
brimley/ellesmere
A Must See 5+1 Bedrooms 54 Feet Large lot finished basement
Scarborough /Sheppard east
$649,900
3 BM W/ Fin W/O / Sep Entrance-Move In And Enjoy!
Brimley/Eglinton
$749,900
3 BM HOME sep entrance veto basement
BUY OR SELL THROUGH PAT in 2019 &WIN 1WEEK TRIP FOR TWO in CARIBBEAN**
WIN
WIN
HOME SWEET LOAN
Century 21
Affiliate Realty Inc.
Brokerage*
80 Corporate Dr 208 Toronto On
416-290-1200
Pat Pushpakanthan
Broker
416-894-1187
MASTERS
HALL OF FAME
5% Mortgage TJT financial Interest rate from 2.79% 416-894-1187

# நாமும் நமது இல்லமும் - 540

## அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிப்பு



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

அண்மைக்காலமாக அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிப்பு ஆதனம் வாங்குவோரை வீடு வாங்குவதனை நோக்கித் தள்ளுவதனைக் காணக் கூடியதாக உள்ளது. மனைகளின் விலையும் வீடுகளின் விலையும் அண்மித்து வருவதே காரணமாகலாம்.

2017, 2018 மற்றும் இந்தாண்டின் (2019) முதற்பகுதியில் (இன்றுவரை) அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் மிகவும் ஆரோக்கியமாகக் காணப்படுகிறது. இதனால் அடுக்குமாடி மனைகளின் விலையும் வேகமாக அதிகரித்து வருகிறது. மற்றவகை ஆதனங்களைவிட அடுக்குமாடி மனைகளின் விலை அதிகரிப்பு அதிகமே.

உதாரணமாக GTA பகுதியில் ஜூலை 2019இல் தொடர்மாடி வீடுகளின் (Town house) சராசரி விலை $660,251. இது சராசரி அடுக்குமாடி மனைகளின் விலையைவிட 13% ஆகும். 2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இதுவே குறைந்த விலை வித்தியாசமாகக் காணப்படுகிறது. இதற்கு காரணம் ஜூலை 2016இலிருந்து தொடர்வீடுகளின் விலை குறைந்து வருவதே ஆகும். இதே நிலைமைகளே தனி வீடுகளிற்கும், இரு சேர்ந்த வீடுகளிற்கும் காணப்படுகிறது.

தனி வீடுகளினதும், அடுக்குமாடி மனைகளினதும் விலை வித்தியாசம் 13 வீதம் அதிகமாக 2016இல் காணப்பட்டது. இன்று 70%ஆக குறைந்துள்ளது. விலை வித்தியாசம் குறைவதால் மக்கள், அடுக்குமாடி மனையை தவிர்த்து இருசேர் வீடுகள் (Semi detached) அல்லது தொடர் வீடுகளை (Attached house) நாடுகின்றனர்.

ரொறொன்ரோ ஆதன சபையின் ஜூலை 2019இன் கணக்கின்படி

| GTA பகுதியில் (முதல் 7 மாதங்களில்) விலை அதிகரிப்பு | |
|---|---|
| தனி வீடு | 19% |
| தொடர் வீடு | 14% |
| அடுக்குமாடி மனை | 0.9% |

பொதுவான ரீதியில் தனி வீடுகளின் விலை சிறிது சிறிதாகக் குறைந்து வருகிறது. அத்துடன் தனி வீடுகளிற்கும் இருசேர் விடுகளிற்கும் இடைப்பட்ட வித்தியாசம் குறைந்து வருவதனைக் காணக் கூடியதாக உள்ளது. எனினும் ரொறொன்ரோவில் ஜூலை 2019இல் 1,617 அடுக்குமாடி மனைகள் கைமாறியுள்ளது. ஆனால் 328 தொடர் வீடுகள் கைமாறி உள்ளது. இதற்கு ஒரு காரணமாக போதியளவு தொடர்வீடுகள் சந்தைப் படுத்தப்படாததும் ஒரு காரணமாகலாம்.



தொடர் வீடுகள், இருசேர் வீடுகள் அல்லது தனி வீடுகள் வாங்குதல் என்பது ரொறொன்ரோ மத்திய பகுதியில் அவ்வளவு இலகுவாக இருக்க முடியாது. இதற்குக் கூடியளவு ரொறொன்ரோவுக்கு வெளியே சந்தர்ப்பங்கள் அதிகம். ஆனால் மில்லெனியல் (1981-1996இன் இடையில் பிறந்தோர் அல்லது Generation y) இவர்களின் வாழ்க்கை முறை முந்திய சந்ததியை விட வித்தியாசமானது. இவர்கள் 500 சதுர அடியில் ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் வாழ்வதனையே விரும்புகின்றனர். தொழில் புரிவதற்கு நடந்து செல்ல முடியும். சகல விதமான ஆடம்பரங்களும் இந்தப் பகுதியிலேயே காணப்படுகிறது. தொடர்ச்சியான அடுக்குமாடி மனை விலை அதிகரிப்பு, மில்லெனியலை எந்தப் பக்கம் தள்ளும் என்பதை எதிர்காலம்தான் விடை தரும்.



Mahindan Mailvaganam
Insurance Advisor
Life and Living Benefits

RBC Insurance Company
111 Grangeway Ave., Suite 400
Scarborough, ON M1H 3E9
Mahindan.mailvaganam@rbc.com

Cell: 416-262-4973

Insurance can seems confusing
It doesn't have to be.

We'll help you get it.

Talk to an RBC Insurance® advisor in your neighbourhood today

We take the time to make choosing the right insurance plan less confusing for you. Whether it's life, health, car, home, travel or wealth, we'll help you to choose the right coverage to protect what's important to you.

RBC Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth


## அன்னை தெரசா



உலகத்தில் உள்ள வார்த்தைகள் எல்லாவற்றிலும் அன்னை என்ற வார்த்தை அழகு நிறைந்தது. அதைவிட இந்த அன்னை என்ற வார்த்தை சிலரின் வாழ்க்கைக்கு அடைமொழியாக நிற்கும் போது அந்த வார்த்தைக்கு இன்னும் வனப்பு அதிகமாகிறது. அந்தப் புனிதமான வார்த்தையை அர்த்தமுள் ளதாக அழகு படுத்த முயற்சி செய்ய வேண்டும். மெசடோனியா நாட்டில் எங்கோ ஒரு மூலையில் அல்பேனியா இனத்தில் பிறந்த அக்னஸ், பின்னாளில் தெரேசாவாக உருவெடுத்த போது அவருக்கு இந்த அன்னை என்ற அடைமொழி அழகாகப் பொருந்தி யிருந்தது. அன்னை திரேசா என்று உச்சரிக்கும் போதே சாந்தமே உருவான ஒரு கருணை பொங்கிய முகம் நம் மனக்கண் முன்னால் ஒரு கணம் நிழலாடி செல்வது உண்டல்லவா?

அன்பு செலுத்துவது ஒவ்வொரு இனத்தின் நான்கு சுவர்களுக்குள்ளும் மத்தியில்தான் முதலில் ஆரம்பிக்கின்றது, என்பதுதான் உண்மை. வேற்றுமைகளையும் மீறி, நம் அனைவரையும் கட்டிப்போடும் சக்தி அன்னையின் அன்புக்கு மட்டும்தான் உண்டு. ஒருவருக்கொருவர் ஒவ்வொரு சூழலிலும் வெவ்வேறு முடிவுகள் எடுக்க வேண்டிய நிலைமை எழுவது இயற்கை. அன்னை என்னும் அன்புத் தெய்வம்தான் இவற்றை எல்லாம் ஒன்றுபடுத்தி தீர்வு காணுவர். குடும்பத்தவரின் மனங்கள் காயப்படும்போது அதை மறக்க வைப்பதற்கும், மன்னிப்பதற்கும், எமது அன்னை தயாராக இருப்பாரேயானால் கடவுளின் அன்பை நாம் உணரமுடியும். அன்பு செலுத்துவது எல்லா நேரத்திலும் சாத்தியமான செயல் அல்ல. அதுவும் குடும்பத்தினரிடையே அன்பு எப்போதும் தொடரும் என்பது மிகவும் சிரமமான செயல்தான், ஆனாலும் இல்லத்தை தலைமை தாங்கும் பெண்ணால் அன்பு செலுத்தும்போது, அந்த அன்பை சுற்றி உள்ளவர்கள் மீது நாம் செலுத்த ஏதுவான சூழல் உருவாகும். நம்மை காயப்படுத் துபவர்களை மன்னிப்பதும், நம்மை ஏமாற்றுபவர்களை மறப்பதும், நமக்கு துரோகம் இழைப்பவர்களை திருத்த முயற்சிப்பதும், அன்பு செலுத்துவதின் அடிப்படைத் தேவைகள். இதைப் புரிந்துகொண்டு, அன்னையர்களாக இருக்கும் பெண்கள் செயற்படுவார்களேயானால், எங்கும் அன்பு நிறைந்து, அமைதி பெருகி, வாழ்கை வளம் பெறும்.

எஸ். பூபாலசிங்கம்

# MORTGAGE

நல்ல ரேட்ல மோட்கேஜ்(OAC*)

லைன் ஒப் கிரெடிட்(HELOC)

ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

Private 1st Mortgage (No Income Verification)

2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**And For All Your Real Estate Services**

MORTGAGE CLINIC



நீங்களும் வெல்லலாம்

$100,000*

எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.



www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

416-613-2788 / 416-816-9011

Cell : 416 - 624 - 4843

RIGHT AT HOME REALTY INC.

1504 Markham Road,
Toronto ON M1B 2V9
(Markham Road & HWY 401)

MORTGAGE ALLIANCE Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes

# என்னடா நல்லூருக்கு வந்த சோதனை!




## - ஆதித்தன் -

"என்னடா இந்த மதுரைக்கு வந்த சோதனை..?" என்பது பழைய திரைப்படம் ஒன்றில் வந்த வசனம். இதனை பல்வேறு சந்தர்ப்பங்களிலும், இப்போதும் சிலர் நகைச்சுவையாகப் பயன்படுத்துகின்றமையை காணமுடியும். இப்போது இதனை மாற்றி "என்னடா இந்த நல்லூருக்கு வந்த சோதனை" என்று பேசுகின்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. சோதனை மேல் சோதனை போதுமடா சாமி.. என்று பாட வேண்டியுள்ளது நல்லூர் கந்தனைப் பார்த்து.

உள்நாட்டுப் போர் ஆரம்பமான காலம் தொட்டு தமிழ் மக்கள் பல சோதனைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர். போர் முடிந்த பின்னரும் இந்தச் சோதனைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல்களை அடுத்து, எந்த அசாதாரணமான சம்பவமும் நடக்காத வட மாகாணத்தில் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்தன. தெற்கிலிருந்து வவுனியா வரும் வரையில் கூடப் பயணிகள் வாகனங்கள் அதிகளவில் சோதனைக்கு உட்படுத்தப்படவில்லை. ஆனால், வவுனியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பல இடங்களில் சோதனை இடப்பட்டன.

அதேபோல் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகளும் சோதனைக்குள்ளாகினர். ஒரே வாகனம் ஐந்திற்கும் அதிகமான இடங்களில் வழிமறிக்கப்பட்டு, பயணிகள் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு சோதனையிடப்பட்டனர். இது தமிழ் மக்களுக்கு சிரமங்களையும், அதே வேளையில் எரிச்சலையும் உண்டாக்கியது. பின்னர் இந்த சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு விட்டன. இப்போது நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா ஆரம்பமாகியுள்ள நிலையில் அப் பகுதியை சூழப் பல்வேறு சோதனை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இதில் மோசமான சோதனை ஆலயத்திற்கு வரும் பக்தர்களை உடற் சோதனையிட்டு உள்ளே அனுப்புவது. நல்லூர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களில் ஆண்கள் பொதுவாகவே மேலுடையை கழற்றிவிட்டு வேட்டியுடனேயே வருவது வழக்கம். அவர்களையும் பொலிஸார் தொட்டுத் தடவி சோதனையிடுகின்றனர்.



நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழா கடந்த 06ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இத்திருவிழா ஒரு மாத காலத்திற்கு நடைபெறுவது வழக்கம். வட மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமின்றி, நாட்டின் சகல பிரதேசங்களில் இருந்தும் மக்கள் இத்திருவிழாவிற்கு வருகை தருவர். புலம்பெயர்ந்து வாழும் மக்கள் கூட நல்லூர் திருவிழாவிற்கு வந்துவிடுவர். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கும் மகிழ்ச்சியளிக்கும் காலம் இந்த நல்லூர் திருவிழாக் காலம்.



நல்லூரைச் சுற்றிவளைத்து நிற்கும் வீதிகள் அனைத்திலும் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொலிஸார், விசேட அதிரடிப்படையினர் எந்நேரமும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றைக் கூட சகித்துக்கொள்ள முடிகின்றது. ஆலயத்திற்கு வரும் பக்தர்களை உடற்பரிசோதனைக்கு உட்படுத்துவது தான் சகித்துக்கொள்ள முடியாததாக உள்ளது. ஆலயத்தினுள் சென்று நிறைவடையும் தூக்குக் காவடிகளுக்குக் கூட இம்முறை தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தக் காவடிகள் சோதனைச் சாவடியுடன் நிறுத்தப்படுகின்றன.

மாமிச உணவைத் தவிர்த்து, குளித்து சுத்தமாக ஆலயத்திற்கு வரும் தங்களை மாமிசம் சாப்பிடும் சீருடையணிந்த பொலிஸார் தடவி சோதனையிடுவது தவறான நடவடிக்கை என்று பக்தர்கள் முறையிட்டு வருகின்றனர். இந்த விவகாரம் இப்போது நாடாளுமன்றத்திலும் பேசப்பட்டுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இதனை நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பாதுகாப்புக் கெடுபிடிகளை உடன் நிறுத்தவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நல்லூர் திருவிழாவிற்கு வரும் பக்தர்களை உடல் ரீதியாக பரிசோதனை செய்வது வரலாற்றில் ஒருபோதும் நடைபெற்றதில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏப்ரல் மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளையடுத்து நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்து வருகின்றது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எவ்வித அச்சமுமின்றி இயல்பாக இலங்கைக்கு வரலாம் என்கின்ற அறிவிப்புக்கள், பரப்புரைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறிருக்கையில் வடக்கில் பிரபலமான, வரலாற்றுப் புகழ்பெற்ற ஆலயமான நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவில் மட்டும் ஏனிந்த கெடுபிடி?

ஆலயத்திற்கான பாதுகாப்பினை வழங்குமாறு, சோதனை நடவடிக்கைகளைச் செய்யுமாறு ஆலய நிர்வாகமோ, யாழ். மாநகர சபையோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ அரசாங்கத்திடம் கோரவில்லை. எனவே, இந்தப் பாதுகாப்பு நடைமுறைகளை நீக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



நாட்டினதும், நாட்டு மக்களதும் பாதுகாப்புக் கருதி சில பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும், இதற்கு யாரினதும் அனுமதியைப் பெற வேண்டியதில்லை என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். ஆனாலும், எந்த இடத்திற்கு எவ்வாறான பாதுகாப்பு முறைகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்கின்ற முன்கூட்டிய திட்டமிடல் எதுவும் பாதுகாப்புத் தரப்பினரிடம் இல்லை என்கின்ற குற்றசாட்டு முன்வைக்கப்படுகின்றது.

மக்களின் எதிர்ப்பினையடுத்துத் தடவல் சோதனைக்குப் பதிலாக சோதனை இயந்திரங்களைப் பொருத்த முடியும் என்று வட மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். ஆனால், "எவ்வித சோதனைகளும் வேண்டாம், நல்லூரானை சுதந்திரமாகச் சென்று தரிசிக்க விடுங்கள்" என்பதே மக்களின் கோரிக்கை.




CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 55



குரு அரவிந்தன்

ஈழத்தமிழருக்குத் தாயகத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றி விளம்பரம் வாசகர்கள் சிலர் தொலைபேசி மூலம் கேட்டிருந்தனர். பல நிகழ்வுகளில் நேரடியாகச் சந்தித்தோரும் ஆவலோடு எனது பயணத்தைப் பற்றி விசாரித்தனர். வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக எல்லோருடனும் பகிர்ந்து கொள்கின்றேன். நான் அங்கு நின்றபோது பல விடயங்களை அவதானித்திருந்தேன். நான் பிறந்து வளர்ந்த மண்ணைப் பார்க்க வேண்டும் என்ற விருப்பமும் இதற்கு ஒரு காரணமாகும். அங்கே இப்போது இருக்கும் சூழ்நிலையில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டால் அல்லாமல் எதையுமே செய்ய முடியாத நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றனர். பிரித்தாளும் தந்திரத்தை 1947ஆம் ஆண்டு முதற்கொண்டு பெரும்பான்மை இனத்தவர் எம்மீது பிரயோகித்துக் கொண்டே இருக்கின்றனர். எம்மவர்களும் பதவி, பணத்திற்கு ஆசைப்பட்டு அதற்கு எடுபட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

இதற்கு முதற்காரணம் தான், தன் குடும்பம் என்ற எம்மவரின் சுயநலம்தான். இந்த அடக்கு முறைச் செயற்பாட்டை செயற்படுத்துவதற்குப் புலம்பெயர்ந்த வெளிநாடுகளில் உள்ள எம்மவர்கள் சிலர் மிகவும் உதவியாக இருப்பதையும் அங்கே சென்ற போதுதான் அறிந்துகொள்ள முடிந்தது. அங்கே நடப்பதில் இவர்கள் கவனம் செலுத்தாமல் இருப்பதற்காகப் புலம் பெயர்ந்த மண்ணில் தமிழ் மக்களின் கவனத்தை வேறு வழியில் திசை திருப்புவதற்கு என்றே ஏராளமான பணச்செலவில் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுவது பலருக்குத் தெரியாது. யுத்த காலத்தில் செலவிட்ட பணத்தோடு பார்க்கும்போது இது அவர்களுக்குப் பெரிய விடயமல்ல. உண்மைதான், பணம் பத்தும் செய்யும் என்பதற்கு அர்த்தம் என்ன என்பதையும் அவர்கள் சொன்ன விடயங்களில் இருந்து தெரிந்து கொண்டேன். மொழி மீது கொண்ட எழுச்சியைப் பணத்தாலும், தந்திரத்தாலும் உடைத்து எறிந்து விட்டனர். இப்போது அடுத்த கட்டமாக மதம் மீது ஒடுக்கு முறையைப் பிரயோகிக்கத் தொடங்கி விட்டதை அவதானிக்க முடிந்தது.

சின்னதாக ஒரு குட்டி நாடகத்தை அரங்கேற்றித் தாம் நினைத்ததைச் சாதித்து விட்டனர். பாதுகாப்பு என்ற போர்வையில் துப்பாக்கிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் துருத்திக் கொண்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. வெளிப்பார்வைக்கு மீண்டும் சுதந்திரமாய் எம்மவர் இருப்பது போலக் காட்டிக் கொண்டாலும், திறந்த வெளிச் சிறைச்சாலையில் எம்மவர் வைக்கப்பட்டிருப்பது பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. மொழி ஆர்வலர்களை வெளிநாட்டவரின் துணையுடன் துப்பாக்கி முனையில் அடக்கியாகி விட்டபடியால், இப்போது மதவாதிகளின் குறிப்பாகச் சிறுபான்மை மதத்தவர்களின் வழிபாட்டுத் தலங்கள் திட்டமிடப்பட்ட முறையில் குறி வைக்கப்பட்டிருக்கின்றன. எதைச் செய்தாலும் இவர்கள் வாய்மூடிக் கொண்டுதான் இருப்பர் என்று அவர்கள் தெரிந்து வைத்திருப்பதால், மதவழிபாட்டுத் தலங்கள் எல்லாம் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன. தனக்குத், தன்னுடையது என்று வந்தால்தான் எம்மவர் வாய் திறப்பர், இல்லாவிட்டால் நடப்பதை வேடிக்கை பார்ப்பர். நினைத்துப் பாருங்கள், அன்று சிறுபான்மை இனத்தவரின் தேவாலயங்களில் நடத்தப்பட்ட தாக்குதல் தவறுதலாக பெரும்பான்மை இனத்தவரின் வழிபாட்டுத் தலங்களில் நடத்தியிருந்தால் இவர்கள் சும்மா இருந்திருப்பார்களா? அங்கு எல்லாமே அரசியல் நாடகம் தான் நடக்கிறது, இதன் பின்னணியில் யாரெல்லாம் இருக்கின்றனர் என்பதை உணர்ந்தோர் தான் மௌனம் காக்கின்றனர்.

இலங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள இந்துக்களின் புனித தலமான கதிர்காமத்திற்கு என்ன நடந்ததோ அதே சூழ்நிலைதான் இப்போது பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான மாத்தறைப் பகுதியில் உள்ள தொண்டீஸ்வரத்திற்கு நடக்கின்றது. எம்மவரில் இந்தத் தலைமுறையில் இருக்கும் பலருக்கு இப்படி ஒரு வரலாற்றுப் புகழ் பெற்ற சிவன் ஆலயம் இலங்கையின் அதிதெற்கே தெய்வேந்திர முனையில் இருப்பது தெரியாது. கலைமகள் பத்திரிகை நடத்திய ராமரத்தினம் குறுநாவல் போட்டியில் பரிசுபெற்ற எனது குறுநாவலான 'தாயுமானவர்' என்ற குறுநாவலில் நான் முக்கியமாகப் பஞ்சஈஸ்வரங்கள் பற்றியும், அதன் தொன்மை பற்றியும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் குறிப்பிட்டிருந்தேன். அதன் பின்புதான் தமிழகத்தில் இருந்த பலரும் இலங்கையில் இருக்கும் பஞ்ச ஈஸ்வரங்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர். திட்டமிட்டு எப்படிக் கதிர்காமத்தில் இருந்த இராம கிருஷ்ண மடத்தை அகற்றி இந்துக்களின் வருகையை அங்கே குறைத்தனரோ அதேபோலத்தான் இந்துக்களின் பஞ்ச ஈஸ்வரங்களான: தொண்டீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னீஸ்வரம், நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் போன்ற சிவன் கோயில்களுக்கு இப்போது நடக்கின்றது. புத்தளம் பகுதியில் உள்ள முன்னீஸ்வரத்திற்குச் சென்றபோதும் இதேநிலமையை அங்கேயும் காண முடிந்தது. இப்போது உள்ள தலைமுறைக்குத் தெரியாமல் இருக்கலாம், நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகள் பரம்பரையாகத்



தமிழர் வாழ்ந்த பிரதேசங்களாகும். இதற்கான ஆவணங்கள் நிறையவே இருக்கின்றன. அப்பகுதி மக்களிடையே மொழியும் மதமும் மாற்றப்பட்டதாலும், பாரம்பரிய நிலங்களை விட்டுத் தமிழர் விரட்டப்பட்டதாலும், இன்று எம்மினம் பல இழப்புக்களைச் சந்திக்க வேண்டி இருக்கின்றது. குறிப்பிட்ட ஒரு சிலரின் இன, மத வெறியால் மொத்த நாடே இன்று அவலப்படுகின்றது.

இலங்கைத் தீவின் தெற்குப் பகுதியில், அதாவது இலங்கையின் மிகத்தெற்கில் இந்துமா கடலில் தெய்வேந்திரமுனை அமைந்துள்ளது. இம்முனையில்தான் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான தொண்டீஸ்வரம் அமைந்திருக்கின்றது. காலாகாலமாய் இந்துக்கள் இந்தக் கோயில்களில் வழிபட்டு வந்தனர். போத்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது, ஏனைய இந்து ஆலயங்களுக்கு நடந்தது போலவே, இங்கே காணப்பட்ட இந்துக்களின் ஆலயமான தொண்டீஸ்வரத்தையும் அவர்கள் உடைத்து அழித்து விட்டனர். இங்கு பரம்பரையாக வாழ்ந்த இந்து தமிழர் விரட்டப்பட்டதால், இவர்களைத் தொடர்ந்து நீண்டகாலமாக, அதாவது ஒல்லாந்தர், அதன்பின் ஆங்கிலேயர் காலத்திலும் இந்த இந்து ஆலயம் கவனிப்பார் அற்று இருந்தது. இலங்கை பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரமடைந்த போதுதான் அங்கிருந்த மதம் மாறிய கத்தோலிக்க மதத்தவர்களிடம் இந்த ஆலயம் ஒப்படைக்கப்பட்டது. அப்பகுதியில் தமிழ் மொழி பேசிய இந்துக்கள்தான் மதம் மாறியிருந்தனர். அதன்பின் இந்த ஆலயத்தைச் சுற்றுவட்டாரத்தில் உள்ள பௌத்த மதத்தினர் விஷ்ணுவையும் வழிபடுவதால், சிவனை ஓரம் கட்டிவிட்டு விஷ்ணுவின் வழிபாட்டுத் தலமாக்கி விட்டனர்.

புத்தபெருமான் பிறப்பால் ஓர் இந்து என்பதால், பௌத்தர்களும் இந்து தெய்வங்களை வழிபடுகின்றனர். எது எவ்வாறாக இருந்தாலும் விஷ்ணுவை வழிபட்டாலும் சிவனை வழிபட்டாலும் ஒன்றுதான் 'அரியும் சிவனும் ஒன்னு அறியாதவன் வாயில் மண்ணு' என்று ஆன்மீக ஈடுபாடு கொண்டோர் மட்டுமல்ல, காஞ்சிப் பரமாச்சாரியார் சுவாமிகள் கூறியதையும் குறிப்பிடுவதில் இருந்து உருவங்கள் வேறுபட்டாலும் கடவுள் ஒன்றே என்பதை உண்மையான இந்துவால் உணரமுடியும். இந்துவால் மட்டுமல்ல மதவெறி பிடிக்காதோராலும் புரிந்து கொள்ள முடியும். இந்த ஆலயத்தில் ஈசனே விஷ்ணுவாக வடிவம் தாங்கி இருப்பதாகப் பக்தர்கள் குறிப்பிட்டனர். சிவபெருமான், மகாவிஷ்ணு ஆகிய இரு தெய்வங்களுக்கும் ஒரே இடத்தில் கோயில்களைக் கொண்டு அமைந்திருந்தது தொண்டீஸ்வரத்தின் சிறப்பு அம்சமாகும். இதேபோல தமிழகத்தில் தில்லைச் சிதம்பரத்தில் சிவன் திருக்கோயிலிலும் மகாவிஷ்ணுவுக்கும் ஆலயம் அமைந்துள்ளது. சிதம்பரத்திற்குச் சென்றபோது இதை நான் அங்கு அவதானித்திருந்தேன். ஆனாலும் அரசியல்வாதிகள் என்னதான் சொன்னாலும், எங்களிடம் இருந்து பறிபோய் விட்டவை ஒருபோதும் எங்களுக்குத் திரும்பக் கிடைக்கப் போவதில்லை! மதநம்பிக்கை




அற்றவர்களுக்குத் தொடர்ந்து கொண்டிருக்கும் இத்தகைய இழப்புப் பெரிய விடயமாகத் தெரியப் போவதில்லை, அவர்களும் வேடிக்கை பார்ப்போராகவே இருக்கின்றனர். இவர்கள் ஒன்றுபட்டுக் குரல் கொடுப்பதைத் தடுப்பதற்கான திட்டமும் அங்கே அவர்களிடம் தயாராக இருக்கின்றது.

Struggling with 2nd Mortgage...Too much Credit Card debts..?
MORTGAGE ALLIANCE
Get Approved & payoff high interest debts!
• One Mortgage to combine 1st & 2nd mortgage
• Debt Consolidation Mortgage
• Debt Consolidation Credit Line
Call for free consultation
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487



# ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய வெற்றிபெறுவாரா?

**- விகிர்தன் -**

தனது சகோதரன் கோட்டாபய ராஜபக்ஸ வையே மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பார் என்பது ஏற் கனவே எதிர்பார்க்கப்பட்டதுதான். மஹிந்த ஆதரவாளர்களில் சிலர் கோட்டாபயவை விரும்பாத போதும் கட்சியிலுள்ள கடும் போக்காளர்களின் விருப்பத்தை மஹிந்த நிறைவேற்றியிருக்கின்றார். கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முதலாவது மாநாட்டில் வைத்து கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபயவின் பெயரை அறிவித்தார் மஹிந்த ராஜபக்ஸ.

கோட்டாபயவே ஜனாதிபதி வேட்பாளர் என்பதை ஏற்கனவே தீர்மானித்து வைத் திருந்தாலும் மஹிந்த ராஜபக்ஸ அதனை வெளிப்படையாக அறிவிக்காமலிருந்தார். ஊடகங்களிடமோ பொதுக்கள் மத்தியில் கலந்துகொள்ளும் நிகழ்வுகளிலோ கூட இதனை அவர் வெளிப்படுத்தவில்லை. ஆனால், பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்களிடம் அவர் தனது முடிவினை தெரிவித்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

பொதுஜன பெரமுனவுடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி அமைப்பது குறித்த பேச்சுவார்த்தைகளின் போது, தற் போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை ஜனாதிபதி வேட்பாளராக அறி விக்க வேண்டும் என்று பேரம் பேசப்பட்டது. இதற்கு மஹிந்த இணங்காததால் அந்தக் கூட்டணி முயற்சி தோல்வியடைந்தது. இதனால், மைத்திரி, மஹிந்த பேச்சு வார்த்தைகள் இடையில் நின்றுபோனது. எனவே, சிறிலங்கா சுதந்திரக் கட்சி யினருக்கும் கோட்டாபயவையே ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த அறிவிப்பார் என்பது உறுதியாகத் தெரியும்.

ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் கோட்டாபயதான் மஹிந்தவின் ஜனாதிபதி வேட்பாளர் என்பது முன்னரே தெரியும். ஊடகங்களும் இதனை எதிர்வுகூறி யிருந்தன. பொதுமக்களுக்கும் இது முன்னரே தெரிந்த விடயம்தான். அதனால் இந்த அறிவிப்பு தொடர்பில் எவரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால், அவருக்கு வெற்றிவாய்ப்புள்ளதா என்பதே தற்போது எழும்பும் கேள்வியாகவுள்ளது. இராணுவத்தில் இருபது வருடங்கள் பணி யாற்றியவர் கோட்டாபய ராஜபக்ஸ. 1971



ஆம் ஆண்டு இராணுவத்தில் இணைந்த அவர் பல்வேறு பதவிகளை வகித்தவர். 1983ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையான காலப் பகுதி யில் உள்நாட்டு யுத்தத்தில் பங்கு கொண்டு செயற்பட்டவர். 1992ஆம் ஆண்டு இலங்கை இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அவர், அமெரிக்காவில் குடி யேறி அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டார்.

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஸ வெற்றி பெற்றதும் கோட்டாபய மீண்டும் இலங் கைக்கு வந்தார். அந்த ஆண்டு நவம்பர் மாதம் கோட்டாபயவை பாதுகாப்புச் செய லாளராக நியமித்தார் மஹிந்த ராஜபக்ஸ. விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தை கொடூரமான முறையில் கையாண்டவர் கோட்டாபய.

இறுதி யுத்தத்தில் இராணுவத்திடம் சரண டைந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர்களை கொலை செய்ய உத்தரவிட்டதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸ மீது குற்றம் சுமத்தப்பட்டது. அத்துடன், வெள்ளை வானில் பலர் கடத்தப்பட்ட சம்பவத்திற்கும், கோட்டாபய ராஜபக்ஸவே காரணம் எனவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டா பய ராஜபக்ஸவிற்கு எதிராக அமெரிக் காவில் இருவேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப் பட்டமைக்குக் கோட்டாபயவே பொறுப்பேற்க வேண்டும் எனத் தெரிவித்து லசந்த விக்ரமதுங்கவின் மகளான அஹிம்சா விக்ரமதுங்கவினால் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தமிழ் இளைஞர் ஒருவரும், அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளதாக சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு தெரிவித்திருந்தது. அமெரிக்காவின் கலி போர்ணியா நீதிமன்றத்திலேயே இந்த இரண்டு சிவில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. மேலும், அவரது தந்தை யான டி.ஏ.ராஜபக்ஸவின் பெயரில் அமைக் கப்பட்ட அருங்காட்சியக நிதியில் மோசடி இடம்பெற்றதாக கூறப்படும் வழக்கொன்றும் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்தில் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் கோட்டாபய மாத்திர மல்ல, மஹிந்த ராஜபக்ஸவின் குடும்பத் தினர் மீது பல குற்றச்சாட்டுக்களை 'நல்லாட்சி' அரசாங்கம் சுமத்தியிருந்தது. ஆனால், கடந்த ஐந்து வருடங்களாக அவற்றை நிரூபிக்க முடியவில்லை. குற்றம் சுமத்தப்பட்டோர் நீதிக்கு முன்னால் தண்டிக்கப்படவில்லை. இது 'நல்லாட்சி' அரசாங்கத்தின் இயலாமை அல்லது தோல்வி என்றே குறிப்பிட வேண்டும். குற்றச்சாட்டுக்கள் யாவும் பொய்யானவை என்று மக்கள் நினைக்குமளவிற்கு 'நல்லாட்சி' அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்தன. இன்று மஹிந்த ராஜபக்ஸ தரப்பு மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கை அதிகரித்துள்ளமைக்கு இதுவே காரணமாகும்.

ஆரம்பத்தில் மஹிந்த ராஜபக்ஸ அவரது மூத்த சகோதரரான சமல் ராஜபக்ஸவை தங்கள் அணியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு அவரது அணியினருக்குள்ளும் ஆதரவு இருந்திருக்கும். ஆனால், ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதல் சம்பவம், நாட்டின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவமளிக்கும் தலைமை தேவை என்ற கருத்தோட்டத்தை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்தது. இதற்குக் கோட்டா பய சஹ்ரானுக்கு மானசீகமாக நன்றி கூற வேண்டும்.

இப்போது பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகக் கோட்டாபய நியமிக்கப்பட்டதன் பின்னர் அவர் ஆற்றிய உரையில் நாட்டின் பாதுகாப்பிற்கே முன்னு ரிமை வழங்கப்போவதாகத் தெரிவித் துள்ளார். புரட்சிகரமான மாற்றம் ஒன்றைக் கொண்டு வருவதற்காகத் தான் நியமிக் கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் நாட்டின் இறையாண்மையில் கைவைக்க யாரிற்கும் இடமளிக்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் என்னதான் கூறினாலும் மக்களின் வாக்குகளிலேயே அவரின் வெற்றி தங்கி யுள்ளது. தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவின்றி எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் யாரும் வெல்ல முடியாது என்கின்ற கருத்து பொதுவாகவே வெளிப்படுத்தப் பட்டுள்ளது. சிறுபான்மையினரின் ஆதர வின்றி ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல முடியும் என பொதுஜன பெரமுன கருது வதாகவும், குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஸ இந்தக் கருத்தைக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், தான் அவ்வாறு கூறவில்லை என மஹிந்த மறுத்துள்ளார். சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரும் வெல்ல முடியாது என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப் பினர்கள் சிலரை கோட்டாபய அண்மையில் சந்தித்தபோது, தான் சிங்கள மக்களின் வாக்குகளின் மூலமாகவே வெல்ல முடியும் எனவும், ஆனால், சிறுபான்மை மக்களின் ஆதரவும் தேவை என்றும் தெரிவித்திருக் கின்றார். நாட்டின் அனைத்து மக்களின் ஆதரவுடனும் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக் கின்றார். இந்தத் தகவலை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியுள்ளார். சித்தார்த்தன் தலைமையில் கூட்டமைப்பின் உறுப்பினர் சிலரை கோட்டாபய சந்தித்திருந்தார்.

இச்சந்திப்பின்போது, தாம் ஆட்சிக்கு வந்தால் 13ஆவது திருத்தச் சட்டம் செயற்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்று அவர் உறுதியளித்தார் எனவும் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களிடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என அறிவுறுத்த முடியாத நிலையில் உள்ளது. தமிழ் மக்கள் தாங்களாகவே தீர்மானமெடுக்கும் நிலையில் தான் உள்ளனர். அவர்கள் யாருக்கு வாக்களிப் பரோ இல்லையோ நிச்சயமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஸவிற்கு வாக்களிக்க மாட்டார்கள். 2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகாவிற்கு வாக்களிக்குமாறு தமிழ் தேசியக் கூட்ட மைப்பு தமிழ் மக்களிடம் கேட்டுக் கொண்டது. அதனை தமிழ் மக்கள் ஏற்று நடந்தனர். அதுவும் மஹிந்தவிற்கு எதிரா கவே பொன்சேகாவிற்கு வாக்களித்தனர். இம்முறை அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை.

சிறுபான்மை மக்களின் அதுவும் தமிழ் மக்களின் ஆதரவின்றி சிங்கள மக்களின் ஆதரவுடன் மட்டும் கோட்டாபய வெற்றி பெற்றால் அது ஆச்சரியமானதாகவே இருக்கும்.


நுணாவில் - கனேடியன் அபிவிருத்திச்சங்கம்

**கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும்**

கனடாவாழ் நுணாவில் மக்களின் கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டிகளும் ஆவணி (August) மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:00 மணியிலிருந்து மாலை 6:00 மணிவரை நடைபெறவுள்ளது. அனைத்து நுணாவில் மக்களின் வருகையை அன்போடு எதிர்பார்க்கின்றோம்.

இடம்:- Adams Park – Area C – 2 Rozell Road Scarborough, ON M3C 2L1.

தொடர்புகளுக்கு:- அருள் - (416) 709-2783 துரைராஜா - (647) 829-4044

கேதா- (416) 677-4707 சதஷ் - (647) 505-1560



29வது ஆண்டு கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
நட்பக: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிவு: Canyon Press Inc.

**Vlambaram Publications Inc.**
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# பாடசாலை ஒன்று மூடப்படுவது சிறைச்சாலை ஒன்று திறக்கப்படுவதற்குக் காரணமாக அமையக்கூடாது



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

## நாடும் நடப்பும் - 15

கல்வி என்பது வாழ்க்கை வாய்ப்புக்களை வழங்கும் ஒரு வலிமையான வழியாகும். மேலும் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு முதலீடாகவும் மானிட மேம்பாட்டுக்கான ஒரு திறவுகோலாகவும் கல்வி கருதப்படுகின்றது. இந்தக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் களமாகப் பாடசாலைகள் விளங்குகின்றன. மனிதவள அபிவிருத்தியின் மையங்களாக விளங்கும் பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு கற்றலுக்கு வழிகாட்டுவதே பாடசாலைகளின் நோக்கமாகும். மாணவர்களின் எதிர்காலக் கற்றல் முயற்சிகளை ஊக்குவித்து அவர்கள் தாமே சிந்தித்து தாமே நியாயம் கண்டு தமக்கெனப் பொருத்தமான தீர்மானங்களை எட்டுவதற்குரிய செயற்திறன்கொண்ட மனித வளங்களாக மாற்றுவது பாடசாலையாகும்.

கற்றல் என்ற விடயமானது நீண்ட காலமாக மனித வாழ்வோடு பிணைந்து காணப்படும் ஒரு செயற்பாடாகும். மனித வாழ்க்கையின் மையப் பொருளாகக் கற்றல் அமைந்துள்ளது. கல்வியின் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படுவதன் மூலம் கற்றலை ஊக்கிவிக்க முடியும். மாணவர்கள் வரவு ஒழுங்கீனம், இடைவிலகல்கள் என்பன மேலோங்கிக் காணப்படுவதால் மாணவர்



களில் ஒரு பகுதியினர் கல்வியில் அக்கறை இன்றிப் பாடசாலையை விட்டுத் தூரவிலகிச் செல்கின்றனர். இதற்குப் பெற்றோர் மட்டுமல்ல பாடசாலைகளும் பங்குவகிக்கின்றன.

பிள்ளைகள் கற்க மறுப்பதில் குடும்பச் சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது. தமது பிள்ளைகள் படிக்கவேண்டும் என நினைக்கின்றனரே ஒழிய கற்றலுக்கான சூழலைப் பெரும்பாலானோர் வீட்டில் ஏற்படுத்திக் கொடுப்பதில்லை. சில பெற்றோர் மாணவப் பருவத்திலேயே இளைய கூலிப் படைகளாகக் கூலிவேலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றனர். பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகள் முன்னிலையில் குடும்பத் தகராறில் ஈடுபடுதல், தந்தை தனது வருமானத்தின் பெரும் பகுதியை மது பாவனைக்கு ஒதுக்குதல், இதனால் பிள்ளையின் கற்றல் தேவைகளை ஈடுசெய்ய முடியாமை, பிள்ளையின் அன்பு, பாதுகாப்பு, கவனிப்பைக் கொண்டிராமை, பிள்ளைகளை உளநெருக்கீட்டுக்கு உட்படுத்துதல், பெற்றோர்-பிள்ளைகளுக்கு இடையிலான நல்லுறவில் விரிசல் காணப்படல், பிள்ளைகளுக்கு வீட்டில் ஒழுங்கான கட்டுப்பாடின்மை, அளவுக்கு மிஞ்சிய சுதந்திரம் கொடுத்தல், பிள்ளைகளிடத்தில் காணப்படும் மிதமான இயல்பூக்கத்தை இனங்காணாமை இவற்றின் காரணங்களாக மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து தூர விலகிச் செல்கின்றனர்.

பாடசாலைகளின் செயற்பாடுகள் சிலவும் மாணவர்களது கற்றல் ஈடுபாட்டில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பாடசாலைகளிலும் அன்பு, கவனிப்பு ஆகிய தேவைகள் நிறைவேறாத சந்தர்ப்பங்களில் மனஎழுச்சித் தாக்கங்களினின்றும் தப்புவதற்கு மாணவர்கள் பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். மாணவர்களை விரும்பிக் கற்கக்கூடிய வகையிலான தூண்டுதலை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும். அதைவிடுத்து வற்புறுத்தி எந்தவொரு மாணவரையும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த முடியாது. கற்றல் சுயமாக மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். அத்துடன் ஆசிரியர்கள் அறிவு மட்டத்தை உயர்த்துவதில் அதிக அக்கறை காட்டுகின்றனரே தவிர, சமூகத் திறன்களை விருத்தி செய்வதில் அதிக நேரத்தை செலவிடுவதில்லை. ஆபத்து விளிம்பில் நின்று கற்போரில், ஆசிரியர்கள் கூடிய கவனத்தைச் செலுத்துவது குறைவு. எனவே இவர்களுக்குப் பாடசாலைகள் வெறுக்கத்தான் செய்யும். இவர்கள் நெறிபிறழ்வான நடத்தைக் கோலங்களில் அதிகம் ஈடுபடுகின்றனர். இந்த விருப்பு மேலோங்கி உள்ளதால் பாடசாலை செல்லும் விருப்பு குறைவடைந்து இடைவிலகல்கள் நடைபெறு

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)


JOBS! JOBS! JOBS!

TEMP EMPLOYMENT AGENCY



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator




Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4

# ஜம்மு...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்திய அரசியலமைப்பின் சிறப்புரிமைச் சட்டப்பிரிவு 35Aஇன் கீழ் காஷ்மீர் மக்களுக்குப் விசேட சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன. காஷ்மீர் மாநில மக்கள் மட்டுமே அம்மாநிலத்தின் நிரந்தர குடி மக்கள். ஏனைய இந்திய மாநிலங்களில் வாழ்வோர் காஷ்மீரில் எந்தவொரு அசை யாச் சொத்தையும் வாங்க முடியாது. அத்துடன் காஷ்மீரில் மாநில அரசின் நலத்திட்டங்களால் பயனடைய முடியாது.

இந்திய அரசியலமைப்பின் சிறப்புரிமைச் சட்டப்பிரிவு 370இன் கீழ் காஷ்மீர் மாநிலத்திற்குச் சிறப்புரிமைகள் வழங்கப் பட்டதுபோல் சிறப்புரிமைச் சட்டப்பிரிவின் 371இன் கீழ் இந்தியாவின் ஏனைய சில மாநிலங்களுக்குச் சிறப்புரிமைகள் வழங்கப் பட்டுள்ளன. ஆனால் அவை அம்மாநிலங் களின் தேவைகளுக்கு ஏற்ப வழங்கப்பட்ட சிறப்புச் சலுகைகள் ஆகும். அவை ஒன்றும் காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப் பட்டவை போல் வராது. உதாரணமாக 371Dஇன்படி ஆந்திரப் பிரதேசத்திற்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் இட ஒதுக்கீட உறுதி செய்யப்பட்டுள்ளது.

1947இல் இந்தியா, பாகிஸ்தான் பிரிக்கப் படும் போது ஜம்மு காஷ்மீர் தனியாகச் சுதந்திரமாக இருக்க வேண்டும் என அப்போது ஜம்மு காஷ்மீரை ஆண்டு கொண்டிருந்த கடைசி மகாராஜாவான ராஜா ஹரி சிங் விரும்பினார். பின்னர் தனது ஜம்மு காஷ்மீர் சமஸ்தானத்தின் மக்களின் நலம் விரும்பி, மன்னர் சில நிபந்தனைகளுடன் ஜம்மு காஷ்மீர் சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைக்க 1949இல் சம்மதித்தார். அப்போதுதான் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் 370 ஆவது பிரிவு உருவாக்கப்பட்டு அதன்கீழ் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு நிலை வழங்கப்பட்டது.

கடந்த 70 ஆண்டு காலமாக இந்திய அரசியலமைப்புச் சிறப்புரிமைச் சட்டப்பிரிவு 370இன் கீழ் பலவகையான சலுகைகளைப்




பெற்றுவந்த ஜம்மு காஷ்மீர் மாநிலம் தற்போது அவற்றை இழந்து இந்தியாவின் ஏனைய யூனியன் பிரதேசங்களுக்கு உரிய உரிமைகளையும் சலுகைகளையும் மட்டுமே பெற்று ஒரு யூனியன் பிரதேசமாக மாறியுள்ளது.

இந்திய அரசியலமைப்பில் இதுவரை காலமும் 29 மாநிலங்களும் 7 யூனியன் பிரதேசங்களும் இருந்தன. இந்த மாற்றத் தின் பின் 28 மாநிலங்களும் 9 யூனியன் பிரதேசங்களும் உருவாகியுள்ளன. இந்தியா வில் தற்போது 9 யூனியன் பிரதேசங்கள் இருந்தாலும் அவற்றில் மூன்றிற்கு மட்டுமே (புதுச்சேரி, டெல்கி மற்றும் ஜம்மு காஷ்மீர்) தனியாக சட்டசபைகள் இருக்கின்றன. ஏனைய ஆறும் இந்தியாவின் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் நிர்வாக அதிகாரியால் ஆளப்படும்.

நாடாளுமன்றத்தில் காஷ்மீர் மாநிலத்தை ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கும் சட்டமூலத்தின் விவாதத்தின் போது உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அமிர்த் ஷா "அரசியலமைப்புச் சட்டத்தின் 370ஆவது பிரிவு காரணமாக காஷ்மீர், இந்தியாவின் ஓர் அங்கம்தானா என்ற சந்தேகம் மக்கள் மனதில் இருந்து வந்தது. அத்துடன் அச்சட்டத்தை 1949இல் உருவாக்கிய நோக்கமும் நிறைவேறவில்லை. மாறாக தீவிரவாதச் செயல்களே அதிகரித்து வந்தன. 1989இல் இருந்து இன்றுவரை 41,500இற்கும் மேற்பட்டோர் தீவிரவாதத்தால் உயிரிழந்துள்ளனர். இந்த 370ஆவது பிரிவு காஷ்மீருக்கும் இந்தியாவுக்கும் இடையே ஒரு சுவர் போல இருந்து வந்தது. இப்போது அந்தச் சுவர் உடைக் கப்பட்டுள்ளது. காஷ்மீரில் இயல்பு நிலை திரும்பும்போது ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து வழங் கப்படும். அதேபோல் பாகிஸ்தான் ஆக் கிரமிப்பு காஷ்மீருக்கும் மற்றும் சீன ஆக்கிரமிப்புப் பகுதிக்கும் இந்தியா தொடர்ந்தும் உரிமை கொண்டாடும்" என்றார்.





இது தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள ருவிற்றரில் "நாம் ஒன்றாக இருப்போம். ஒன்றாக எழுவோம். ஒன்றாகச் சேர்ந்து 130 கோடி இந்தியர்களின் கனவுகளை நனவாக்கு வோம். ஜம்மு காஷ்மீர் தொடர்பாக வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதர வுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் காஷ்மீரின் ஒற்றுமை, ஒருங் கிணைப்பு அதிகரிக்கும். உள்கட்டமைப்பு மேம்படும். வளர்ச்சி வேகமெடுக்கும். காஷ் மீர் இளைஞர் இந்திய சமுதாய நீரோட்டத் தில் இணைவர். அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஏராளமான வாய்ப்புகள் கிடைக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

2019 ஒகஸ்ற் 8இல் இந்திய மக்களுக்கு 40 நிமிட சிறப்புரையாற்றிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி "லடாக் பிரதேசம் மூலிகை, பயிர்கள் செழிப்பாக வளரும் பிரதேசம். அங்கு சூரிய ஒளிச் சக்திமூலம் மின்சாரம் தயாரிக்கும் வாய்ப்புகள் உண்டு. காஷ்மீர் ஒரு காலத்தில் மிகப்பெரிய சுற்று லாத்தளமாக விளங்கியது. அங்கு திரைப் படத் தயாரிப்புகள் நடைபெற்றன. அதே போல் மீண்டும் காஷ்மீர் மாறும். தற்போது காஷ்மீரில் வாழும் பல்லாயிரக்கணக்கா னோர் அந்த மாநில மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வாக்களிக்க முடி யாது. இனிமேல் அது நடைபெற மாட்டாது. இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் இனிமேல் சம உரிமை உண்டு. ஜம்மு காஷ்மீரை யூனியன் பிரதேசமாக்கியது தற்காலிகமான முடிவு. அங்கு விரைவில் சட்ட சபைத் தேர்தல் நடத்தப்படும். அங்கு இயல்பு நிலை திரும்பியதும் ஜம்மு காஷ்மீரிற்கு மாநில அந்தஸ்து வழங்கப்படும். இனிமேல் மத்திய அரசின் மருத்துவமனை, நீர்பாசனத் திட்டங்கள், சாலை வசதி, தொடருந்து வழித்தடங்கள், விமான நிலையப் புனரமைப்பு என்பனவும் ஜம்மு காஷ்மீரில் சாத்தியப்படும்" என்று கூறினார்.

காஷ்மீருக்கான சிறப்பு நிலையை நீக்கம் செய்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்தியாவுடனான தனது உறவை முறித்துக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது. இந்தியா உடனான அனைத்துவிதமான தூதரக உறவுகளையும் பாகிஸ்தான் முறித்துக் கொண்டுள்ளது. இரண்டு நாட்டுத் தூதரக அதிகாரிகளும் தத்தமது சொந்த நாட்டிற் குத் திருப்பி அனுப்பப்படுவர் எனவும் பாக்கிஸ்தான் அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைப் பிரித்து லடாக் தனி யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வர வேற்றுள்ளார். இது இந்தியாவின் உள் விவகாரம் என பல்வேறு நாடுகள் அமைதி காத்து வருகின்றன. பாகிஸ்தான் மட்டுமே மத்திய அரசின் நடவடிக்கைக்கு எதிராகச் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது ருவிற்றர் பக்கத்தில், இந்தியாவின் நடவடிக்கையை வரவேற்பதாகப் பதி விட்டுள்ளார். அப்பதிவில் ரணில் "யூனியன் பிரதேசமாக லடாக் பிராந்தியம் உரு வாகிவிட்டது. 70%க்கும் அதிகமான பௌத்தர் பெரும்பான்மையாக வாழும் முதல் மாநிலமாக லடாக் உருவாகி



உள்ளது. லடாக் யூனியன் பிரதேசம் உரு வாக்கம், மறுசீரமைப்பு ஆகியவை இந்தி யாவின் உள்விவகாரம். லடாக் பிராந்தியத் துக்கு பலமுறை நானும் பயணம் செய்து உள்ளேன். இவ்வாறு ரணில் கூறியுள்ளார்."

துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு எழுதிய "கவனித்தல், கற்றல் மற்றும் தலைமையேற்றல்" என்ற புத்தகம் 2019 ஒகஸ்ற் 11இல் சென்னையில் வெளியிடப் பட்டது. துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு கடந்த இரண்டு வருடங்களாக செய்த பணிகள் குறித்த ஆவணப் புத்த மாக இது வெளியிடப்பட்டது. மத்திய உள் துறை அமைச்சர் அமிர்த் ஷா இந்தப்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)



# GtaMath

## Early Start

## Aug. 2019

## All Grade

SCORE 90's & ABOVE

29 yrs of experience

**416 666 5515**

visit **GTAmath**.com

# இன்னல் நீக்கும் இயற்கை - 55



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

படிகக் கற்கள் சோதிடத்திலும் பேசப்படும் பொருளாக உள்ளது. ஒவ்வொரு வகையான படிகக் கற்களிலும் உள்ள நன்மை, தீமைகள், அவற்றில் உள்ள சிறப்பியல்புகள் என்பவற்றிற்கேற்ப அவற்றைப் பயன்படுத்தப்படுவது ஒரு புறம் இருக்க ஒவ்வொரு இராசிக்காரர் களுக்கும் பொருத்தமான படிகக்கற்கள் எவையென்ற விதத்திலும் பட்டியலிடப்படு வது வழக்கமாகவுள்ளது. இந்த விபரங்களையும் நாம் அறிந்து கொள்வது பயனுள்ள விடயம் என்று நினைக்கின்றேன். சோதிடத்தைப் பற்றி வேறுபட்ட கருத்துக்கள் நம்மிடைய இருக்கலாம். சோதிடம் என்பது முழுமையான கணிதம், விஞ்ஞானம் சார்ந்த துறையாகவுள்ளது. அதன் நுண்ணிய கணிப்புத்தன்மை, கடினமான விடயங்களால் எல்லா நேரங்களிலும் சரியாக அமையாவிட்டாலும், வியாபார ரீதியில் களங்கப்படுத்தப்பட்டு இருந்தாலும் சோதிடம் பொய்யானது என்று கூறிவிடமுடியாது என்பது எனது தாழ்மையான கருத்து. சோதிட ரீதியில் நமக்குப் பொருத்தமான படிகக்கற்கள் பற்றிய விபரத்தை அறிந்து கொள்வது பயனுள்ளதாகவிருக்கும் என்று நம்புகின்றேன்.

மேஷம் ராசிக்காரர்களுக்கு பவளம் (Coral) அணிவது நல்லது. இதை அணிவதால் அதிர்ஸ்டமும், தெய்வ அனுகூலமும் கிடைக்கும். ரிஷபம் இராசிக்காரர்கள் அணிய வேண்டியது வைரம். இதை அணிவதால் நல்ல மகிழ்ச்சியும், வசீகரமான தோற்றமும் இந்த இராசிக்காரர்களுக்கு கிடைக்கும். வெற்றி, செல்வம், அதிர்ஷ்டம் போன்றவற்றைக் கொடுக்கும். மிதுன இராசிக்காரர்கள் அணியவேண்டியது மரகதம். (Emerald Green Stone). இது தொழில் விருத்தியையும், அதிர்ஸ்டத்தை யும் கொடுக்கும். கல்வியையும், கற்பனை வளத்தையும் கொடுக்கும். கடக இராசிக்காரர்கள் அணியவேண்டியது முத்து. இது செல்வ விருத்தி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றைக் கொடுக்கும். உறவுகளை வலுப்படுத்தி, ஆயுளைக் கொடுக்கும். சிம்ம இராசிக்காரர்கள் அணியவேண்டியது மாணிக்கம். வாழ்வில் உயர்வையும், அதிர்ஷ்டத்தையும் கொடுக்கும். நீண்ட ஆயுள், புத்தி சாதுர்யம், மனவுறுதி, நீண்ட ஆயுள் என்பவற்றை இந்த இராசிக்காரர்களுக்கு கொடுக்கும். கன்னி இராசிக்காரர்கள் அணிய வேண்டியது மரகதம். இது இந்த இராசிக்காரர்களுக்கு தொழில் விருத்தி, அதிர்ஷ்டம், காதல் உணர்வு, கல்வி ஆகியவற்றைக் கொடுக்கும். துலாம் ராசிக்காரர்கள் அணியவேண்டியது வைரம். இந்த ராசிக்காரர்களுக்கு இது மகிழ்ச்சி, யோகம் ஆகியவற்றைக் கொடுக்கும். இது உறவை வலுப்படுத்தும்.




நெஞ்சுறுதியைத் தரும். விருட்சிக ராசிக்காரர்கள் அணியவேண்டியது பவளம். இதை அணிதால் இந்த இராசிக்காரர்களுக்கு தெய்வ அருள், அதிர்ஷ்டம், துணிச்சல் போன்றவை கிட்டும். இதனால் தொழில் வாய்ப்புக்கள் கிட்டும். தனுசு இராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஸ்பராகம். இந்த ராசிக்காரர்கள் இதை அணிவதால் மனநிம்மதி, செல்வம் கிடைக்கும். இதனால் பொருளாதார மேன்மை, புகழ் ஆகியவை கிட்டும். மகர ராசிக்காரர்கள் அணிய வேண்டியது நீலக்கல். இந்த இராசிக்காரர்கள் அணிவதால் தெய்வீக சிந்தனையும், செல்வமும் கிடைக்கும். இதனால் உடற்பலமும், ஆழ்மனத் தெளிவும் கிடைக்கும். கும்ப இராசிக்காரர்கள் அணியவேண்டியது நீலக்கல். இந்த ராசிக்காரர்கள் இதனை அணிவதால் செல்வ வளமும், சமூக அந்தஸ்தும் கிடைக்கும். இதனை அணிவதால் உறவை மேம்படுத்தும், நல்ல ஆரோக்கியத்தைக் கொடுக்கும். மீன இராசிக்காரர்கள் அணிய வேண்டியது கனக புஸ்பராகம். (Yellow Sapphire) இதனை அணிவதால் செல்வ விருத்தி கிடைக்கும். இதை அணிவதால் பொருளாதார முன்னேற்றம், நல்ல நட்பு ஆகியவை கிட்டும்.

நவமணிகள் என்றழைக்கப்படும் ஒன்பது இரத்தினங்கள் பற்றிப் பார்ப்போம். மாணிக்கம் (Ruby) இளம் சிவப்பு அல்லது அடர்ந்த சிவப்பாக இருக்கும். அடுத்ததாக முத்து (Pearl). இது சிப்பிக்குள் தோன்றுவது. அடுத்ததாக வைரம் (Diamond). இது படிக நிலையில் உள்ள ஒரு கரிமக்கல். அடுத்ததாக கோமேதகம் (Sardonyx) இது பெக்மைட் என்ற பாறைகளிலிருந்து கோமேதகம் கிடைக்கிறது. அடுத்ததாக வைடூரியம் (Cat Eye). இது பூனையின் கண் நிறத்தைப் போன்று இருக்கும்.

அடுத்ததாக மரகதம் (Emerald). இது பெரில் வகையைச் சார்ந்த கனிமம். அடுத்ததாகப் பவளம் (Corel). அடுத்ததாக நீலக்கற்கள் (Sapphire). அடுத்ததாக கனக புஸ்பராகம் (Topaz) இது மஞ்சள் நிறமானது.

மரகதக்கல் இது பூமியிலிருந்து கிடைக்கக் கூடிய தாதுப்பொருளாகும். கடுமையான சுத்திகரிப்புக்களைச் செய்த பின்னர் இது சித்த வைத்தியத்தில் மருத்துவப் பயன்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கல் பச்சை நிறமுடையது. இதில் சூரியவொளி படும்பொழுது அயல் முழுவதும் பச்சை நிறமாகும். ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் நீரை அல்லது பாலை ஊற்றி இந்தக் கல்லைப் போட்டால் பால் அல்லது நீர் முழுவதும் பச்சை நிறமாகத் தோன்றும். அற்புதமான ஆற்றல் பொருந்திய கல்லாக மரகதம் உள்ளது. இது கொலம்பியா, இந்தியா, இலங்கை, பிரேசில், அவுஸ்திரேலியா. பர்மா போன்ற நாடுகளில் கிடைக்கின்றது. இது மிகவும் மென்மையான கல். கோயிற் சிலைகளும் மரகதத்தில் செய்யப்படு கின்றது. புதன் புத்தி நடக்கும் பொழுது இந்தக் கல்லை அணியலாம். பொருத்த மில்லாத இரத்தினக் கற்களை அணியும் பொழுது தீமையும் ஏற்படலாம் என்பதால் கற்களை அணியும்பொழுது அவதானம் தேவை.

அமெதிஸ்ட் (Amethyst) கற்கள் ஊதா நிறம் கொண்டது. தியானம் செய்யும் பொழுது மிகவும் உதவியாகும். தலை யணைக்கு கீழே வைத்துப் படுக்கும் பொழுது தூக்கத்தில் உள்ளுணர்வுகளை மேம்படுத்துகிறது. மனதை அமைதிப் படுத்துகிறது. கணினித்துறை சார்ந்தோர் இதனை அருகில் வைத்திருந்தால் கதிர்வீச்சால் வரும் பாதிப்புக்கள் குறையும். மனக்குழப்பத்திற்கு நல்ல தீர்வு. கையில் வைத்திருக்கும்பொழுது கற்பனை வளங்களை அதிகரிக்கச் செய்யும். இந்தக் கற்களை அணியும் பொழுது பல்வேறு நன்மைகளை ஏற்படுத்தும். இந்தக் கற்களை வைத்துக்கொண்டு Crystal Therapy செய்யும் பொழுது அதிக பலன் ஏற்படும். இந்தக் கற்களை கையில் வைத்துக் கொண்டு தியானம் செய்யும் பொழுது தியானம் செய்ய இலகுவாக இருக்கும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக் கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங் கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வை யும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

அடுத்த இதழிலும் எனது தேடலில் கிடைக்கும் புதிய தகவல்களுடன் தொடர்ந்து உரையாடுவோம். உங்கள் எண்ணங்களையும் தெரியப்படுத்துங்கள். மீண்டும் சந்திப்போம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

இரண்டு வயது ஆவதற்குள் நாம் பேசக் கற்றுக்கொள்கிறோம்.
ஆனால்
எத்தனை வயது ஆனாலும் "எப்படி பேச வேண்டும்" என்பதை நாம் கற்றுக்கொள்வதில்லை.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL
• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat



Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca


# கழுத்துப் பயிற்சி தரும் பலன்கள்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy( India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)



வஜ்ஜிராசனத்தில் நிமிர்ந்து உட்கார்ந்த நிலையில் கழுத்துப் பகுதியை நேராக வைத்துக்கொண்டு, தலையை மட்டும் வலது தோள்பட்டையிலிருந்து இடது தோள்பட்டைவரை மெதுவாக இயல்பான சுவாசத்தில் கொண்டுவர வேண்டும். பின் சாதாரணமாகப் பழைய நிலைக்கு வர வேண்டும். இப்பயிற்சியையும் 5 முறை செய்ய வேண்டும். மேலும் இடது தோள் பட்டையிலிருந்து வலது தோள்பட்டை வரை மெதுவாக இயல்பான சுவாசத்தில் கொண்டுவர வேண்டும். பின் சாதாரணமாகப் பழைய நிலைக்கு (இடப்பக்கத் திற்கு) வர வேண்டும். இதையும் 5 முறை செய்ய வேண்டும்.



வஜ்ஜிராசனத்தில் (பிருஷ்டபாகம் - தரையில் அமர்ந்து முதுகை நேராக நிமிர்த்த) இரு உள்ளங்கைகளையும் அந்தந்த முழங்கால் மேல் வைத்து இயல்பான சுவாசத்தில் தலையைக் குனிந்து கீழ் மோவாயினால் நெஞ்சைத் தொட்டு மெதுவாக நேராகத் தலையைக் கீழ் இருந்து மேலாகக் கொண்டுவந்து முடிந்தவரை பின்னால் கொண்டுபோக வேண்டும். இப்பயிற்சி செய்யும்போது முன்கழுத்து, தொண்டைப் பகுதி, பிடரிப் பகுதிகளை இயல்பாக இலகுவாக வைத்துக்கொண்டு கண்மூடிய அல்லது அரைக்கண் மூடிய நிலையில் 5 முறை செய்யவும், இயல்பான நிலையில் பழைய நிலைக்குத் திரும்ப வேண்டும்.

மேற்படி வஜ்ஜிராசனத்தில் உட்கார முடியாதோர் சுகாசனத்தில் சாதாரணமாய்ச் சம்மணமிட்டு உட்கார்ந்த நிலையிலும் இதைச் செய்யலாம். முடிந்தவரை தலையைப் பின்னால் கொண்டுபோய் பிறகு நிமிர்த்தி மெதுவாக முன்னோக்கிக் கொண்டுவந்து மோவாயால் நெஞ்சைத் தொடவும். இயல்பான சுவாசத்திலேயே 5 முறை செய்ய வேண்டும். பின் இயல்பான நிலைக்கு வந்து சில விநாடிகள் ஓய்வு எடுப்பது பொருத்தமாக இருக்கும்.


வஜ்ஜிராசனத்தில் உட்கார்ந்த நிலையில் முதுகுத் தண்டை நேராக நிமிர்த்தி தலையை மட்டும் குனிந்து (கீழ் மோவாய் நெஞ்சில் தொட வேண்டும்) அடுத்துத் தலையை வலமிருந்து இடமாக (கூடுமான வரை) தலை உடலோடு ஒட்டியவாறு மெதுவாக இயல்பான சுவாசத்தில் கண்கள் மூடியவாறு இயன்றவரை கஷ்டப் படாமல் கழுத்துப் பகுதியை மட்டும் உப யோகித்து கடிகாரமுள்ளைப் போல் ( clock wise) 5 முறை சுற்றவும். அடுத்து தலையை மட்டும் இடமிருந்து வலப் பக்கமாக (கூடுமான வரை) தலை உட லோடு ஒட்டியவாறு மெதுவாக இயல்பான சுவாசத்தில் கண்கள் மூடியவாறு இலகு வான மனநிலையில் உடலை வருத்திக் கொள்ளாமல் கழுத்துப் பகுதியை மட்டும் உபயோகித்துக் கடிகாரமுள் எதிர்திசை யில் சுற்றுவதைப் போல் (Anti Clock wise) 5 முறை சுற்றவும்.

கழுத்துப் பயிற்சிகளை மட்டும் செய்துவர தண்டுவட முதுகு எலும்புப் பிரச்சனை (Cervical Spondylosis) பிடரி வலி, தைரொய்ட், பாரா தைரொய்ட், தொண்டைப் பிரச்சனைகள், கண், காதுப் பிரச்சினைகள், ஒற்றைத் தலைவி, பல் நோய்கள், மூக்கடைப்பு, சைனஸ் பிரச்சனை போன்ற பற்பல நோய்கள் குணமாகும். உடலில் கழிவுப்பொருள் சேர்வதினால் முதுகு (இடுப்பு) வலியும் மன அழுத்தத்தினால் ஏற்படும் படபடப்பு (Tension ) பிடரிப் பகுதியில் ஏற்படும் வலி போன்றவை அகலும். இப்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வந்தால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.

## அறிந்திருக்க.

காய்கறிகளை கொண்டு அனைத்து நோய்களையும் குணப்படுத்தமுடியும்

Kidney Failure - கத்திரிக்காய்
Paralysis - கொத்தவரங்காய்
Insomnia - புடலங்காய்
Hernia - அரசாணிக்காய்
Cholesterol - கொவ்வங்காய்
Asthma - முருங்கைக்காய்
Diabetes - பீர்கங்காய்
Arthritis - தேங்காய்
Thyroid - எலுமிச்சை
High BP - வெண்டைக்காய்
Heart Failure - வாழைக்காய்
Cancer - வெண்பூசனிக்காய்

மருந்தில்லா வர்ம மருத்துவம்
மூட்டு வலிக்கு முடிவு


• முழங்கால் வலி – Knee Pain
• முதுகு வலி – Back Pain
• தோள்பட்டை வலி – Shoulder Pain
• கீல் வாதம் – Arthritis Pain
போன்றவற்றை நீக்கும் வர்ம சிகிச்சை
தனிப்பட்ட சிகிச்சைகளுக்கும் பயிற்சிகளுக்கும் தொடர்புகொள்ளவும்
YOGA CLASSES

Tapscott & Finch
• Saturday: 8:30am & 10:30am
• Sunday: 8:00am, 9:30am & 11:00am
• Monday: 9:30am & 7:00pm
Markham & Ellesmere
• Wednesday: 7:00pm
• Thursday: 7:00pm
More info:
N. செல்வசோதி மாஸ்ரர் (யோகாசன ஆசிரியர், வர்மக்கலை நிபுணர்)
416.617.5721 416.289.2033

# சமூக வலைத் தளங்களில் ஊதிக் கெடுக்கப்படும் ஒழுக்கம்

- செ.மனுவேந்தன் -
s.manuventhan@hotmail.com

நவீன உலகில் முகநூல் (facebook), புலனம் (whatsapp), வலையொளி (you tupe), படவரி [instagram ], அளாவி (wechat), பற்றியம் (messanger), கீச்சகம் (twitter) எனப்பல வகைகள் ஊடகத் துறையுள் நுழைந்து விட்டன மட்டுமல்ல எல்லோர் கையிலும் கையாளக்கூடிய முறையில் அவை நெருங்கியும் வந்து விட்டன. ஆனால் அவை ஒரு பொழுது போக்காகப் பயன்படுத்தும் அதேவேளையில் அவை உலகம் முழுவதும் பார்க்கப்படுபவை என்பதனை சிலர் உணரத் தவறிவிடுகின்றனர். பார்ப்போர் முகம் காட்டும் கண்ணாடி போல், அவை தங்களை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் என்பதனை மறந்து விடுகின்றனர். அதனால் வார்த்தைகளை வரம்புகள் ஏதுமின்றிக் கொட்டி விடுகின்றனர்.

ஆத்திரம் கண்களை மறைக்கும் என்பது போல் ஊர்ச்சண்டை, ஜாதிச் சண்டை, அரசியல் பிணக்கு, மதவாதம் மட்டுமல்ல குடும்ப சண்டைகளையும், உடனே எந்த வித முன்பின் யோசனையு மின்றி தங்கள் ஆத்திரத்தைத் தீர்ப்பதாக எண்ணி இப்பெருவெளிகளில் அக் குப்பைகளைக் கொட்டிக் கிளறி மற்றவர்களுக்கு முன் தங்களை நாறச் செய்கின்றனர்.

அனைவருக்கும் கருத்துச் சுதந்திரம் உண்டு. அதை நாம் என்றும் மதித்திருக்கிறோம். ஆனால் அவற்றினைத் தெரியப்படுத்துவதற்கும் நாகரிகமான மொழி ஒன்று உள்ளது. அதனை நாம் முதலில் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் உபயோகிக்கும் ஒவ்வொரு அநாகரிகமான சொற்களும் கூறுபவரின் அல்லது எழுதுபவரின் ஒழுக்கத்தையே அது உலகிற்கு உணர்த்தும் என்பதனை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் உங்கள் சொற்களைப் பலரும் படிக்கின்றனர். படிக்கும்போது அவர்கள் அதில் நீங்கள் உபயோகப்படுத்தும் சொற்களை வைத்து உங்களைப் பற்றி உணர்ந்து கொள்கின்றனர், விளங்கிக் கொள்கின்றனர். அதனை நாம் முதலில் புரிந்துகொள்ளல் அவசியம்.



குடும்பப் பிரச்சனைகளை நீதிமன்றம் கொண்டு சென்றாலே அவமானம் என்று கருதிய காலம் ஒன்று முன்பு இருந்தது. அன்று வளவினுள் நின்று கணவன் மனைவி சண்டையிட்டாலும் பக்கத்திலுள்ள ஒரிரு வீட்டிற்கே தெரியவரும்.

ஆனால் இன்று ஒரு கணவன் மனைவிக்கிடையில் சிறு பிரச்சனை வந்து விட்டாலே அதை கணவன் பக்க உறவினர், மனைவி பக்க உறவினர் முகநூல் வாயிலாகத் தாக்குதல் நடத்த ஆரம்பித்து விடுகின்றனர். அதிலும் அநாகரிகமான, கேவலமான வார்த்தைகள் பிரயோகிக்கப்படுகின்றன. மாறிமாறி ஒருவரை மற்றவர் தாக்குவதாகத் தங்களைத் தாங்களே கேவலப்படுத்தி சம்பத்தப்பட்ட இருபகுதியினரையும் பார்த்து உலகம் சிரிக்கச் செய்கின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் பிரச்சனை உலகத்தினைப் பொறுத்தவரையில் இன்னொரு தொலைக்காட்சி நாடகமே அல்லாமல், அவை உங்களுக்கு நீதி வழங்கும் நீதிமன்றமல்ல. அவற்றினை வாசிப்போர் அல்லது கேட்போர் உங்கள் மேல் கருணை கொள்வதனைவிட உங்கள் எண்ணத்திலிருந்து உங்கள் உறவினை நீங்கள் தாக்கி எறிந்த ஏவுகணைகள் மட்டும் ஏனையோரால் பொறுக்கி சேகரிக்கப்பட்டு அதனை உங்கள் மேல் எறியத் தருணம் பார்த்து வைத்திருப்பர் என்பது உலகறிந்த உண்மை.

இச்சந்தர்ப்பத்தில் இவர்கள் தமக்குள், தனக்குள் தங்கள் அடையாளங்களை அழுக்காக்கிக் கொள்வதுடன் கேவலப்படுத்துத்தி வாழவேண்டிய தம்பதிகளையும் நிரந்தரமாகப் பிரித்து விடுகின்றனர்.

பொய்மையான பதிவு - இதுமட்டுமல்ல பொதுவான தகவல்கூட தவறான கருத்துக்களில் உதாரணமாகக் கனடா, அவுஸ்திரேலியா 'தமிழினை தேசிய மொழியாக அறிவித்தது' போன்ற உண்மைக்குப் புறம்பான பல்லாயிரக் கணக்கான தகவல்கள் இவ்வூடகங்களூடாகப் பகிரப்பட்டு தமிழ் வாசகர்களின் பொது அறிவு மழுங்கடிக்கப்பட்டு வருவதுடன், அவர்கள் ஏமாற்றப்படுகின்றனர் என்பதுவும் கவலைக்குரிய விடயமாகும்.

மேலும் கனடாவில் கியூபெக் நகரத்தில் சில மாதங்களுக்குமுன் பல நாடுகள் பங்குகொண்ட பல்கலாச்சார நடைபவனியில் தமிழர் திருமண ஊர்வலம் ஒன்றினை அங்குள்ள ஒரு தமிழ் அமைப்பு இணைத்துச் சிறப்பித்திருந்தது. இதன் காணொளியினை ஒரு வலைத்தளம் செய்தியாக அதனை விளக்கமாகவே வெளியிட்டிருந்தது. ஆனால் ஊர்வலத்தின் முன்னே தாங்கி வரப்பட அவ்வமைப்பின் பெயர்தாங்கிய கொடியினை காணொளியிலிருந்து மறைத்து உண்மைக்குப் புறம்பாக அதனை ஐரோப்பிய, இலங்கை வாழ் தமிழரால் ஏனைய வலைத் தளங்களில் தலைப்புக்களை மாற்றி, மாற்றி 'கனடாவில் திருமணங்கள் இப்படித்தான் ஆடம்பரமாக இடம்பெறுகின்றன' என 'whatsup'லும், 'facebook'இலும் பல்லாயிரக்கணக்கானோர் பகிர்ந்து பரிகாசித்துக் கொண்டனர்.

அண்மையில் கொழும்பில் நடந்த குண்டுத் தாக்குதல்களை அடுத்து மேற்படி ஊடகங்கள் அரசினால் முடக்கி வைக்கப்பட்டன என்பதிலிருந்து அவை எவ்வாறு கையாளப்படுகிறது என்பது புலனாகிறது. ஏனெனில் அவை நல்ல பதிவுகளை மட்டுமல்ல பொய்யும், புழுகும் பகிர்ந்து கொள்ளுவதுடன், இனங்களுக்கிடையே, குடிகளுக்கிடையே பேதங்களை வளர்க்கும் ஊடகங்களாகவும் அவை உலகினை வலம் வருபவை என்பதே உண்மை. இப்படியான உண்மைக்குப் புறம்பான தகவல்களை இடுவோரும் மக்கள் மத்தியில் சந்தேகக் கண்கொண்டே கண்காணிக்கப்படுவர். ஏனெனில் உண்மைகள் உறங்கிக் கிடைப்பதில்லை.

விஞ்ஞானம் இதுவரையில் சாதித்தவை நன்மைகள் மட்டுமல்ல, தீமைகளும் தான். எனவே உங்கள் முகவரி, உங்கள் பெயரினைக் காப்பாற்றும் பொறுப்பு இன்று உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.




வாழும் திறன்

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.
வி. கணேஷ்: 416.816.2563 மகேன்: 416.893.1222
ஆறுமுகம் (AGR): 416.832.9467

# நிலாவிலும் உலாவி வருவோம்

## இதுவொரு அறிவியற் தொடர்

**அறிவியல் வெளியில் நிலாவில் உலாவி வரும்வேளையில் நிலாவில் துள்ளி உலாவிய மனிதரின் பின்னணி பற்றி முதலிற் தெரிந்துகொண்டு மதியில் மதி பற்றிய தெளிவுகளைக் கொண்டு வருவோம்.**



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

நாங்கள் அறிந்தபடியே செப்ரெம்பர் 01, 1939இல் ஆரம்பாமாகிய 2ஆம் உலகப் போர் செப்ரெம்பர் 02, 1945இல் முடிவுக்கு வருகின்றது. எங்களிற் பலர் அப்பொழுது பிறந்திராதிருந்தாலும், ஆறு நீண்ட வருடங்கள் நடந்த இப்போரினால் ஏற்பட்ட வடுக்கள், வரலாற்றுப் பக்கங்களினால், இன்னமும் மனதில் நிழலாடுகின்றன. இப்போரினை வல்லமை காட்டி முடிவுக்குக் கொண்டுவந்த நாடுகளில் சோவியத் யூனியனும் ஐக்கிய அமெரிக்கக் குடியரசும் முக்கியமானவை. இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தாலும், பொதுவாகவே இரசியா என்ற நாட்டின் பெயரிற் பெரிதும் அறிந்து கொள்ளப்பட்ட சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் யார் வல்லமையாளர் என்ற போட்டிப் போர் ஒன்று இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஆரம்பமாகியது. இரண்டாம் உலகப் போரின் முக்கிய சூத்திரதாரியான ஜேர்மனியின் அறிவியற் கருவூலங்கள், தொழில் நுட்பங்கள் போன்ற பலவற்றைத் தம்முட் பங்கிட்ட அமெரிக்கருக்கும் இரசியர்களுக்கும் இடையில் இந்தப் பனிப் போர் 1947இல் இருந்து 1991 வரையில் நடந்தது. இக்காலப் பகுதியில் இருபகுதியினரும் சகல துறைகளிலும் தத்தமது வல்லமைகளை உலக அரங்கிற் காட்டிக் கொண்டிருந்தனர். அதனை உங்களிற் பலர் அறிந்திருப்பீர்கள், இன்னமும் அதன் விளைவுகளைக் கூட அனுபவித்திருப்பீர்கள்.

இவர்கள் போட்டியிட்ட பகுதிகளில் விண்வெளி ஆய்வுகளும் தேடல்களும் குறிப்பிடப்படக் கூடியன. இரண்டாம் உலகப் போரின் முன்னர் மிக வல்லமையான நாடாக இருந்து, பின்னர் தோல்வியுற்ற ஜேர்மனியில் இருந்து எடுத்து வந்த அறிவியற் கருவூலங்கள், தொழில் நுட்பங்கள், இன்னமும் அறிவியலாளர்கள் என்போரது துணையுடன் இருபகுதியினரும் விண்வெளியில் ஆதிக்கம் செலுத்திய போதிலும் ஆரம்ப காலங்களில் இரசியர்களே (சோவியத் யூனியன்) முன்னனியில் நின்றனர். குறிப்பாக இரசியர்களின் லூனா (Luna) விண்கலங்களும் அமெரிக்கர்களின் அப்போலோ (Apollo) விண்கலங்களும் நிலவினை மும்மரமாக ஆய்வுகள் செய்த போதிலும் இரசியர்களின் பெயரே உலக மட்டத்தில் அதிக அளவிற் பேசப்பட்டுக் கொண்டிருந்தது. அதிலும் இரசியர்களின் லூனா 2 என்ற விண்கலம் முதன்முதலில் செப்ரெம்பர் 14, 1959இல் சந்திரத் தரையில் இறங்கிச் சாதனையும் செய்தது.




இரசியர்களின் லூனா திட்டத்தின் அமைப்பு அருகிற் காட்டப்பட்டுள்ளது.

இந்த லூனா 2 தான் முதன் முதலில் வேற்றுக் கிரகமொன்றில் இறங்கிய மனிதரின் விண்கலம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஒக்ரோபர் 27, 1961இல் அமெரிக்கர் ஆரம்பித்த அப்போலோ முயற்சிகள் எல்லாம் ஆரம்பத்தில் படுதோல்வியில் முடிந்தன. ஆயினும் மனம் சலியாத அமெரிக்கரின் முயற்சி 1969 யூலை 20ஆம் திகதியில் மனித வரலாற்றிலே பொன் எழுத்துகளாற் பொறிக்கப்பட வேண்டிய பெரு வெற்றியாக அமைந்தது. அப்போலோ 11 விண்கலத்திற் சென்ற 3 அமெரிக்கர்கள் சந்திரனை அடைய அதிலே சென்ற இருவர் சந்திரத் தரையில் இறங்கி, கால் தடம் பதித்து, அமெரிக்கக் கொடியியை நாட்டி மனித மூளையின் வலுவினைக் காட்டினர். நிலாவில் முதன் முதலில் 'நீல் ஆம்ஸ்ரோங்' கால் பதிக்கப் பின்னால் 'பஸ் அல்டின்' கால் பதித்து இருவரும் துள்ளி நடந்து உலாவிய பின்னர் சந்திர மண்ணையும் அள்ளிக் கொண்டு புவியிற்குத் திரும்பியது எல்லாம், இன்று விண்வெளி ஆய்வுகளின் மைல் கல்லாக இருக்கின்றன. (என்ன! முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்கிறீர்களா?)




அமெரிக்கரின் அப்போலோ விண்வெளித் திட்டத்திற்கான அடையாள அமைப்பு.

அப்போலோ 11இன் பின்னராக, அமெரிக்கர் 6 தடவை சந்திரத் தரைக்குச் சென்றுள்ளனர். 12 அமெரிக்கர் சந்திரனில் நடந்து மண்ணள்ளி, இன்னமும் விண்ணியல் ஆய்வுகள் பல நடத்தினர். இந்தப் பன்னிருவருள், இன்றுவரையில் (யூலை 2019) நால்வர் இன்னமும் உயிருடன் இருக்கின்றனர். இடையில் அமெரிக்கரின் அப்போலோ 13 முயற்சி தோல்வியில் முடிய, அதிலே சென்றோர் பத்திரமாகப் புவி திரும்பிய மயிர் கூச்செறியும் செய்தி ஒன்றும் உள்ளது. கடைசியாக, டிசெம்பர் 07, 1972இல், அப்போலோ 17 உடன் அப்போலோ விடயங்கள் முடிவுக்கு வந்திருந்தன. இது தற்காலிகமான முடிவுதான் என்கின்றனர் இப்பயணங்கள் வேறு பெயரில், வேறு வடிவமாக இன்னமும் சில காலத்திற் தொடரும் என்கின்றனர் அமெரிக்கர் சிலர்.

அமெரிக்கரின் சந்திரப் பயணம், நிலாவில் நடந்தது என்பவை பற்றிப் பல்வேறான கருத்துகள் நேர்த்தன்மையவையாகவும், எதிர்த்தன்மையவையாகவும் கூறப்படுவதை நீங்கள் அறிவீர்கள். இன்னமும் அமெரிக்கர் சந்திரப் பயணத்தைக் கூட வேற்றுக் கிரக மனிதரின் உதவியுடன்தான் வெற்றிகரமாகச் செய்து முடித்தனர் எனக் கூறுவோரும் நம்மிடையே உண்டு. இவ்வகைத் தார்ப்பரியங்களை, அறிவியல் வழியில் நின்றும் பார்க்கப் போகிறோம் என்பதால், மிகவும் அண்மைக்கால விடயமொன்றை இப்போதைக்குத் தவிர்த்துக் கொள்ளுகிறேன். அது என்னவென்று தெரியும் தானே! அது இந்தியரின் சந்திராயன் 2 பற்றிய விபரங்கள் ஆகும்.




சந்திராயன் 2இல் அடயங்கியிருப்பவை பற்றிய படத்தினை காண்கிறீர்கள்.

அண்மையில் சந்திரனுக்கு அனுப்பப்பட்ட சந்திராயன் 2 பற்றிய விபரங்களும் அது சந்திரனில் செய்யப் போகின்ற காரியங்கள் பற்றிய செய்திகளும் எல்லா ஊடகங்களிலும் சுடச்சுட வந்து கொண்டிருப்பதால், அதனை மீள்படுத்தாது, அதனைப் பற்றிய ஆய்வுக் கண்ணோட்டம் ஒன்றினை இன்னொரு தடவையில் விளம்பரம் பத்திரிகை ஊடாகப் பார்ப்போம் எனக் கூறி, இந்நாளின் விடயத்தை இத்துடன் நிறைவுக்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்த இதழில் இன்னமும் அதிக சந்திரச் சுவையுடன் மீண்டும் சந்திப்போம், சரிதானே!

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, • முதுகு நோவு
• வாகன விபத்து • மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்

Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM • TREAT WITH MASSAGETHERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems

HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கண்கள்: ஆத்மாவின் சாளரங்கள்!



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

கண்கள் ஆத்மாவின் சாளரங்கள் (The Eyes are the window to the soul) என்பது ஓர்அனுபவ வாக்கியம். ஒருவருடைய கண்களைப் பார்த்தால் அவர் என்ன நினைக்கிறார், என்ன உணர்கிறார் என்று கூறிவிட முடியும் என்பதே இதன் பொருளாகும். உளவியல் அடிப்படையிலும், மனஎழுச்சி, மகிழ்ச்சி, சோகம், துக்கம், காதல், அறிவு, கருணை, நம்பிக்கை என்பனவற்றையே கண்கள் பிரதிபலித்து விடும். ஒருவருடைய ஆத்மாவை மட்டுமல்ல மற்றவர்களது உணர்ச்சிகளையும் உணரக் கண்களே உதவுகின்றன. முகத்தில் உள்ள மிகவும் பெறுமதி வாய்ந்த உறுப்பு இக்கண்களாகும். எமது ஆத்மாவே எமது கண்களில்தான் உள்ளது.

எமது கண்கள் மிகவும் சிக்கல் வாய்ந்த ஆனால் மிகவும் அற்புதம் வாய்ந்த உறுப்பாகும். கண் நித்திரை கொள்ள வைக்கிறது. நித்திரையை விட்டு எழ வைக்கிறது. ஒரு கமரா செய்யும் வேலையை எமது கண்கள் செய்கின்றன. 500 மில்லியன் வருடங்களுக்கு முன்பேயே இக்கண்கள் விலங்குகளுக்கு தோன்றியிருக்கலாம். உடலில் மரபணுக்களுக்கு ஏற்ப உருவாகும் இக்கண்கள் சில நிறங்களில் காணப்படுபவை. மேலனின் (Melanin) என்ற நிறமியே இதற்கு காரணமாகும். உலகில் கறுப்பு மற்றும் பழுப்பு நிறக் கண்களே அதிகம் காணப்படுகின்றன. மெலனின் செறிவாகக் காணப்படுவதே அவற்றுக்குக் காரணம். அடுத்தபடியாக பச்சைக் கண்களும், இதனையடுத்துக் குறைவான நிறமிகளுடன் நீல நிறக் கண்களும் இடம் பிடிக்கின்றன. நிறமிகளின் பற்றாக் குறையுடன் உள்ள சாம்பல் நிறக் கண்கள் அரிதானவை. இவை மட்டுமல்லாது பல நிறங்களின் சேர்க்கையாகக் காணப்படும் கண்களை ஹேஸல் கண்கள் (Hazel) என்கின்றனர். இவை பெரும்பாலும் பச்சை மற்றும் பழுப்பு நிறங்களின் சேர்க்கையாக காணப்படுகின்றன

வயிற்றில் சிசு உண்டாகி 2 கிழமைகளில் கண்கள் உருவாகி விடுகின்றன. 1 அவுன்ஸ் நிறையுள்ள ஒரு கண் 1 அங்குல குறுக்களவு உள்ளது. எமது 80 வீதமான ஞாபகத்தினை ஏற்படுத்துவது இந்தக் கண்களே ஆகும். எமது விரல் அடையாளத்தில் 40 தனித்துவப் பண்பு இருக்கிறது. ஆனால் கதிராளி (Iris) 256 தனித்துவப் பண்பு கொண்டது. பாதுகாப்புகான பதிவுக்கு இது உதவுகிறது.


மூளைக்கு அடுத்ததான சிக்கல் வாய்ந்த உறுப்பு கண்ணாகும். இமை கண்ணை ஒரு நாளைக்கு 28,000 - 30,000 தடவை மூடிக்கொள்கின்றன.

50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாம்பல் (Gray) வடிவங்களை இனங்காண முடிந்த இக்கண்கள் இருட்டிலும் சிறிதளவு பார்வையை கொண்டுள்ளன. பிறக்கும் போதுள்ள விழி வெண்படலத்தில்(Cornea)



இரத்தக் குழாய்கள் இல்லாததால் இவை அதிகமாக வளர்ச்சியடைவதில்லை. ஆனால் பொதுவான கண்களின் அளவு முதல் 2 வயது வரையில் சற்றுக்கூடி பின்பு பூப்பு அடையும் நிலையில் நிலையாகி விடுகிறது. பிறந்த குழந்தையின் கண்ணின் நீளம் 16.5 மில்லிமீற்றர் எனினும் பின்னர் வளர்ச்சியடைந்து இது 24 மில்லிமீற்றராகி விடுகிறது.

சாதாரணமாக ஒருவரது கண்கள் நல்ல பார்வையுள்ளது என்று அறிய மருத்துவ நிபுணர்கள் உதவுகின்றனர். இவர்களையே கண் நிபுணர் (Ophthalmologist) என்கிறோம். பார்வைக் கூர்மை என்பது பார்வை செயலமைவின் பிரிதிறன் அள




வாகும். இது பொதுவாக ஸ்நெல்லன் வரைபடம் (Snellen chart) மூலமாக அளக்கப்படுகிறது. பொதுவான ஒரு ஸ்நெல்லன் வரைபடத்தில் ஏழு வரியில் கறுப்பு எழுத்துக்கள் அச்சிடப்பட்டிருக்கும். ஸ்நெல்லன் வரைபடம் மூலம் பார்வைக் கூர்மையை அளக்கும்போது வரைபடத்தில் இருந்து சோதிக்கப்படுபவர் 6 மீற்றர் தொலைவில் அமர்ந்திருப்பார். இந்த வரைபடத்தில் உள்ள எழுத்துக்கள் அளவில் குறைந்து வரும் வண்ணம் வரிவரியாக அமைந்திருக்கும். முதல் வரியில் இருக்கும் ஒரே எழுத்தை 60 மீற்றர் தொலைவில் இருந்து படிக்கலாம். 6ஐத் தொகுதியாகவும் (ஒருவர் அமர்ந்திருக்கும் தொலைவு) ஒருவரால் வாசிக்கக் கூடிய மிகக் குறைந்த அளவைப் பகுதியாகவும் கொண்ட விகிதமாகப் பார்வைக் கூர்மை பதிவு செய்யப்படும். உதாரணமாக, ஒரு பார்வைப் பதிவு 6/60ஆக இருந்தால் 6 மீற்றர் தொலைவில் இருக்கும் ஒருவரால் மேல் வரியை மட்டுமே படிக்க முடியும். பொதுவாக இதை 60 மீற்றர் தூரத்தில் இருந்து படிக்க முடியும். தூரத்தை அடியாகக் கூட அளக்கலாம். 6 மீற்றர் என்பது 20அடி ஆகவே பார்வை மீற்றரில் 6/6ஆக இருந்தால் அடி அளவில் அது 20/20 ஆகும். இதுபோலவே 6/60 மீற்றர் என்றால் 20/200 அடி என்று பொருள்.

நமக்கு எப்படி பார்வை கிடைக்கிறது என்பதே ஓர் அற்புதமான விடயம் தான். நாம் பார்க்கும் எல்லாப் பொருட்களிலும் வெளிச்சம் பரவுகிறது. இந்த வெளிச்சமானது எமது கண்ணில் உள்ள வழி வெண்படலம் ஊடாகச் செல்கிறது. இது ஒரு சாளரம் போல செயற்படும். இவ்வாறு நுழையும் வெளிச்சத்தை கண்மணி (Pupil) கட்டுப்படுத்துகிறது. இது கதிராளியால் சூழப்பட்டுள்ளது. எமது கண்ணில் முன்பகுதி வளைவுற்று இருப்பதால் விழித்திரை (Retina)யில் உருவம் தலைகீழாகவே விழும். ஆனால் எமது மூளையே இதனை சரி செய்கிறது.

விழித்திரை என்பது கண்ணின் சிக்கலான பகுதியாகும். இதுவே வெளிச்சத்தை சமிக்ஞை (Signal)களாக மாற்றி மூளைக்கு உதவுகிறது. ஒருவரின் விழித்திரை மிகவும் மென்மையானது, உணர்வுபூர்வமானது. விழித்திரையில் உள்ள Cones எனப்படும் கலங்கள் வெளிச்சம், சிவப்பு, பச்சை, நீலத்தை கண்டுபிடிப்பன. அதேவேளையில் Rods எனும் கலங்கள் இரவுப் பார்வைக்கு உதவுகின்றன. கண் வில்லை (Lens) என்பது மிகவும் தெளிவான தட்டாகும். இங்குவரும் வெளிச்சம் விழித்திரைக்கு செல்கிறது. இங்கு Ciliary muscle என்னும் தசைநார் எல்லாவற்றையும் சமாளித்துக் கொள்கிறது. இதன்மூலம் ஒரு பொருளானது கண் வில்லைக்குச் சென்று விட்டால் அங்கு எழுகின்ற மின் சமிக்ஞை (Electrical Signal) பின்பு விழித்திரைக்கு செல்கிறது. அங்குள்ள பார்வை நரம்புகள் (Optic Nerves) பொருள் விளக்கத்தினை மூளைக்கு உணர்த்துகின்றன. இதனை Visual Cortex எனலாம்.

Aqueous Humor எனப்படும் திரவம் விழி வெண்படலத்திற்குப் பின்புறமாகவும் Vitreous Humor என்ற திரவம் விழி வில்லைக்கும் விழித்திரைக்கும் இடையில் உள்ளது. இவை கண்களின் பாதுகாப்புக்கு உதவுகின்றன. கண்களின் வெளிப்படலமாக Sclera உள்ளது. Choroid படலம் விழித்திரைக்கும் Scleraவுக்கும் இடையில் உள்ளது. இவை எல்லாம் சேர்ந்து கண்களை பாதுகாக்கின்றன.

பார்வை மட்டும் கண்களின் தொழில்பாடு அல்ல. கண்ணீரை உருவாக்குவதும்

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்...)

SUNCITY
FAMILY MEDICAL CENTER
Now accepting
New patients and Walk -Ins!
• Walk-Ins welcome • Walk-Ins வரவேற்கப்படும்
• Lab on site • அலுவலகத்தின் உள்ளேயே ஆய்வகம்
• Open 7 days a week • வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்
• No wait times • காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை
CALL US TODAY (416) 292-9111
Located at the Suncity Plaza
C19 -2761 Markham Road.
Scarborough, ON. M1X 0A4
info@suncitymedicalcenter.com

Quick, quality medical care when you need it the most
உங்களுக்கு மிகவும் தேவைப்படும் போது
விரைவான, தரமான மருத்துவ பராமரிப்பு வழங்கப்படும்

# தேர்ந்த வாசகனால்தான் சிறந்த இயக்குநர் ஆக முடியும்

## நேர்காணல் - திரைப்பட இயக்குனர் சசி

**சந்திப்பு: கண்ணன்**

தமிழ் திரைத்துறையில் கதையம்சத்தோடு படம் இயக்குவோரில் குறிப்பிடத்தகுந்தவர், சசி. ‘சொல்லாமலே’ படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான சசி, கடந்த 21 ஆண்டுகளில் 7 படங்கள் மட்டுமே இயக்கியிருக்கிறார். தற்போது ‘சிவப்பு மஞ்சள் பச்சை’ எனும் படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்தின் இறுதிகட்டப் பணிகளில் மும்முரமாக இருந்தவரைச் சந்தித்தோம்.

**‘சிவப்பு மஞ்சள் பச்சை’ படத்தின் முன்னோட்டம் பார்த்தோம். இந்தப் படம் உண்மைச் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறதே?**

சென்னையில் அன்றாடமும் சாலைகளில் பேரிரைச்சலோடு, அதி வேகத்தில் பைக் ஓட்டிச் செல்லும் இளைஞர்களைப் பார்க்கிறோம். எதற்காக இவர்கள் இப்படிப் போகின்றனர்? பைக் பந்தயத்தில் கிடைக்கும் அந்தத் த்ரில்லுக்காகத்தான். இந்த பைக் பந்தயக்காரர்கள் பற்றித் தெரிந்துகொள்ள கள ஆய்வில் இறங்கினேன். பலரிடம் பேசினேன். அவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். அதை வைத்து எனது திரைக்கதையை கட்டமைத்துள்ளேன்.

பொதுவாகவே இளைஞருக்கு பைக் மீது மிகப்பெரிய ஈர்ப்பு இருக்கும். சைக்கிளில் கையை விட்டு ஓட்டும்போது ஒரு பரவசம் கிடைப்பது போல்தான் பைக்கில் அதி வேகத்தில் செல்லும்போதும் கிடைக்கிறது. சென்னையில், பணம் படைத்தோர் 5 லட்சத்துக்கும் அதிகமான விலையில் பைக் வாங்கி, பைக் பந்தயத்துக்கான மைதானங்களில் ஓட்டுகின்றனர். சோழாவரத்தில் உள்ள பைக் பந்தய தடத்தில் ஓட்டிப் பழகுவதற்கு ஒரு நாளைக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய்வரை வசூலிக்கப்படுகிறது. ஏழை, நடுத்தரவர்க்க இளைஞர்களுக்கு இது சாத்தியமில்லை என்பதால் இவர்கள் சாலையிலேயே ஓட்டுகின்றனர். அவர்களின் வயது வேகத்தில் அந்தப் பரவசத்தை மட்டும் விரும்புகின்றனரே தவிர இதன் பாதிப்பை உணர்வதில்லை. இதையெல்லாம் ‘சிவப்பு மஞ்சள் பச்சை’ பேசுகிறது.

இப்படி சாலையில் சட்ட விரோதமாகப் பைக் பந்தயம் நடத்துவோரை வைத்து மட்டும் 5 படங்கள் இயக்கலாம். பணம் அல்லது பைக்கை பந்தயமாக வைத்து பந்தயம் ஓட்டுகின்றனர். அதுவும் இல்லாதோர் பந்தயத்தில் தோற்றுவிட்டால் கடுஞ்சூட்டில் இருக்கும் சைலன்சர்க்கு முத்தம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் பந்தயம் கட்டுகின்றனர். இதுபோன்று எத்தனையோ தகவல்கள் இருக்கின்றன. ஆனால், என் படத்துக்கு எது தேவையோ அதனை மட்டும் எடுத்துக்கொண்டேன்.

பைக் பந்தயம் என்பதே கதையின் மையம் அல்ல. அதனை அடித்தளமாக வைத்து



மனித உறவுகளை, காதலைத்தான் பேசி இருக்கிறேன். 19 வயதான பைக் பந்தயக்காரர், 28 வயதான ட்ராஃபிக் போலீஸ் இந்த இரண்டு கதாப்பாத்திரங்களை மையப்படுத்தித்தான் திரைக்கதை அமைத்துள்ளேன்.

**இந்தப் படத்துக்கு இசையமைத்திருக்கும் சித்துகுமார் புதியவர். ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு இசையமைப்பாளருடன் பணிபுரிகிறீர்கள். சில இசையமைப்பாளர்களை அறிமுகப்படுத்தவும் செய்திருக்கிறீர்கள். புதிய இசையமைப்பாளர்கள்தான் உங்களது பணிச்சூழலுக்கு பொருத்தமானவர்களாக இருக்கிறார்களா?**

சித்துகுமார் நான் அறிமுகப்படுத்தும் 5ஆவது இசையமைப்பாளர். திரைக்கதை எழுதுவதற்கே நான் அதிக காலம் எடுத்துக்கொள்வேன். எனவே, எழுதி முடித்ததும் உடனே படப்பிடிப்புக்குச் செல்ல வேண்டிய சூழல். அப்போது முன்னணி இசையமைப்பாளரிடம் எனக்கான இசையை வாங்குவதில் கால தாமதம் ஏற்படும். அதனால்தான் புதியவர்களைப் பெரும்பாலும் பயன்படுத்துகிறேன். மேலும், புதியவர்களிடம், என்னுடைய கதைக்கு எப்படியான இசை தேவை என்பதை என்னால் கேட்டுப் பெற முடியும்.

**எழுத்தாளர் ச. தமிழ்ச்செல்வனின் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு ‘பூ’ படம் இயக்கினீர்கள். வேறு இலக்கியப் படைப்புகளை படமெடுக்கும் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?**

(தொடர்ச்சி 19ஆம் பக்கம்...)



# சுதந்திரத்திற்கான ஜனாதிபதிப் பதக்கம் வென்ற ரோனி மோரிசன்




## Toni Morrison

குளோயி அந்தோனி வோபோர்ட் 'ரோனி' மோரிசன் (Chloe Anthony Wofford 'Toni' Morrison) என்பவர் அமெரிக்க நாவலாசிரியர், ஆசிரியர், பேராசிரியர் மற்றும் ஒரு கட்டுரையாளராவார். அவர் 1931ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள லோரெய்ன், ஒஹாயோவில் (Lorain, Ohio) பிறந்தார். அவரது பெற்றோர் ராமா வோபோர்ட் மற்றும் ஜோர்ஜ் வோபோர்ட் (Ramah Wofford and George Wofford) ஆவர்.

மோரிசன் தனது குழந்தைப் பருவத்தில் இருந்தே பல பிரச்சனைகள் மத்தியில் வளர்ந்து வந்தார். மோரிசனுக்கு 2 வயதாக இருந்தபோது, அவர்களது வீட்டு உரிமையாளருக்குச் சரியான நேரத்தில் வாடகை செலுத்த முடியாமல் போனது. இதனால் அவர்களின் வீட்டிற்குத் தீ வைத்து எரிக்கப்பட்டது.

மோரிசன் தனது பெற்றோருடன் நாட்டுப்புறக் கதைகளையும் பாடல்களையும் பாடுவார். அவர் குழந்தைப் பருவத்திலிருந்தே புத்தகங்கள் வாசிப்பதை மிகவும் விரும்பினார். ஜேன் ஆஸ்ரென் (Jane Austen) மற்றும் லியோ ரோல்ஸ்ரோய் (Leo Tolstoy) ஆகியோர் அவருக்குப் பிடித்த நூல் ஆசிரியர்களாவர்.



12 வயதிற்குள், மோரிசன் ஒரு கத்தோலிக்கராகி, அந்தோனி என்ற பெயரைப் பெற்றார். அங்குதான் அவருக்கு ரோனி என்ற புனைபெயர் கிடைத்தது. அவர் வோஷிங்டன் டி.சி.யில் உள்ள ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் (Howard University) 1953ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். கார்னெல் பல்கலைக்கழகத்தில் (Cornell University Ithaca, New York) முதுநிலை பயின்றார்.

ஹூஸ்டனில் (Houston) உள்ள ரெக்சாஸ் தெற்கு பல்கலைக்கழகத்தில் (Texas Southern University) சுமார் இரண்டு ஆண்டுகள் கற்பிக்கத் தொடங்கினார். பின்னர் அவர் ஹாவர்ட் பல்கலைக் கழகத்தில் ஏழு ஆண்டுகள் கற்பித்தார். அவர் ஹாவர்டில் ஹரோல்ட் மோரிசனை (Harold Morrison) சந்தித்தார். அவரை 1958ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அவருக்கு 2 குழந்தைகள் பிறந்தனர். அவர் இரண்டாவது மகனைப் பெறக் கர்ப்பமாக இருந்தபோது, 1964ஆம் ஆண்டு ஹரோல்ட் இவரை விவாகரத்து செய்து கொண்டார். அதன்பிறகு, இவர் ஒரு பதிப்பாசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார்.

முறைசாராக் கவிஞர்களின் குழுவின் ஒரு பகுதியாக மோரிசன் புனைகதை எழுதத் தொடங்கினார். அவர் தனது முதல் புத்தகமான 'த ப்ளூவெஸ்ற் ஐ' ('The Bluest Eye') என்ற புத்தகத்தை எழுதி முடித்து வெளியிட்டார். இலக்கிய மற்றும் கலாச்சார விமர்சகர் ஜோன் லியோனார்ட்டால் (John Leonard Literary and cultural critic) பாராட்டப்பட்டார். ஜோன் லியோனார்ட் 'The Bluest Eye' என்ற புத்தகம் ஒரு வரலாறு, சமூகவியல், நாட்டுப்புறக் கதை, கனவு மற்றும் இசை எனக் குறிப்பிட்டார். இந்தப் புத்தகம் முதலில் நன்றாக விற்பனை செய்யப்படவில்லை. ஆனால் சில பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகள் அதனை முதன்மைப்படுத்திய பின்னர் புத்தகத்தின் விற்பனை அதிகரித்தது.

1975ஆம் ஆண்டில் அவர் தனது இரண்டாவது நாவலான 'சுலா' ('Sula')வை வெளியிட்டார். இரண்டு கறுப்பினப் பெண்களுக்கு இடையிலான நட்பைப் பற்றிய அந்தப் புத்தகம் தேசிய புத்தக விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. அவரது மூன்றாவது புத்தகம் 'சோங் ஒவ் சொலோமோன்' 'Song of Solomon'. இந்தப் புத்தகம் அவருக்குத் தேசிய புத்தக விமர்சகர்கள் வட்ட விருதையும் வென்று கொடுத்தது. 1987ஆம் ஆண்டில், அவர் 'பிலவ்ட்' ('Beloved') என்ற புத்தகத்தை வெளியிட்டார். அது அவரது முக்கிய நாவல்களில் ஒன்றாகும். அவரது மற்றைய பல புத்தகங்களும் அவருக்கு விருதுகளை வென்று கொடுத்தன.

1988ஆம் ஆண்டில் அவர் தனது 'பிலவ்ட்' என்ற நாவலுக்காக அமெரிக்கப் புத்தக விருதைப் பெற்றார். புனைகதைக்கான அனிஸ்பீல்ட்-வோல்வ் ('Anisfield-Wolf') புத்தக விருதையும் அவர் வென்றார். புனைகதைக்கான 'புலிஸ்சர்' (' Pulitzer') பரிசையும் வென்றார். 1988ஆம் ஆண்டில் இந்த விருதுகள் அனைத்தையும் அவர் பெற்றிருந்தார். ஆண்டுகள் செல்லச் செல்ல, அவர் மென்மேலும் விருதுகளை வென்றார்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான பராக் ஒபாமா மே 29, 2012 அன்று மோரிசனுக்கு 'சுதந்திரத்திற்கான ஜனாதிபதிப் பதக்கம்' (Presidential Medal of Freedom)ஐ வழங்கினார். 2016ஆம் ஆண்டில், அமெரிக்கப் புனைகதைகளில் சாதனைக்காக 'PEN /Saul Bellow' விருதைப் பெற்றார்.

இவை அவருடைய சில புத்தகங்கள்.
- ஜாஸ் ( Jazz) (1992)
- பரடைஸ் (Paradise)(1997)
- ரார் பேபி (Tar Baby) (1981)
- ஏ மெர்சி (A Mercy) (2008)
- ஹோம் (Home)(2012)
- த ஒர்ஜின் ஒப் அதர்ஸ் (The Origin of Others ) ( 2017)



மேலும் பல புத்தகங்கள் உள்ளன. 2019ஆம் ஆண்டில், 'மௌத் புல் ஒவ் பிளட்' 'Mouth Full of Blood' மற்றும் 'த சோர்ஸ் ஒவ் செல்வ்-றிகார்ட் 'The Source of Self-Regard' என்ற 2 புத்தகங்களை எழுதினார்.
ரோனி மோரிசன் 2019ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 9ஆம் திகதி அன்று காலமானார். அவர் எப்போதும் நினைவில் இருப்பார்.

அவர் கூறிய எழுச்சியூட்டும் தத்துவங்கள் சில ஆங்கிலத்தில்

' As you enter positions of trust and power, dream a little before you think'

' Love is or it ain't. Thin love ain't love at all '

' At some point in life the world's beauty becomes enough. You don't need to photograph, paint or even remember it. It is enough'.




**இளையோர் ஆக்கம்** இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

# தேர்ந்த...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

எழுத்தாளர் பூமணியின் 'வெக்கை' நாவலை படித்ததும் அதைப் படமாக்க வேண்டும் என விரும்பினேன். இதுபற்றி பூமணியிடம் கூட பேசியிருந்தேன். ஆனால், அன்றைய சூழலில் அந்நாவலுக்கான உரிமத்தை வாங்கும் நிலையில் நான் இல்லை. இப்போது இயக்குநர் வெற்றிமாறன் அந்நாவலைத் தழுவி 'அசுரன்' எனும் படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார். என்னால் இயக்க முடியாவிட்டாலும் வெற்றிமாறன் இயக்குவதில் எனக்கு பெரும் மகிழ்ச்சி. ஏனென்றால், இது அவர் இயக்க வேண்டிய படம். படமாக்கலாம் என்கிற எண்ணத்தில் வேறு சில இலக்கியப் படைப்புகளைத் தேர்வு செய்து வைத்திருக்கிறேன். கூடிய விரைவில் அதற்கான பணிகளில் இறங்குவேன். பொதுவாக, தமிழ் இலக்கியவாதிகள் திரைத்துறையை இரண்டாம் தரமாக நினைக்கின்றனர். என்னைக் கேட்டால் பாமர மக்களின் இலக்கியம் எனத் திரைப் படங்களைச் சொல்லலாம். பரந்துபட்ட மக்களைச் சென்றடையும் ஊடகமாக திரைப்படமே இருக்கிறது. அந்த ஊடகத்தை இலக்கியவாதிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு முதலில் அவர்கள் திரை மொழியை அறிவது அவசியம்.

**தமிழ் திரைப்படத்துறையில் இயக்குநரே திரைக்கதை ஆசிரியராகவும் இருப்பதற்கு என்ன காரணம்?**

உலக அளவில் திரைக்கதை ஆசிரியர் வேறு, இயக்குநர் வேறு என்பதாகத்தான் இருக்கிறது. தமிழ் திரைத்துறையில் அப்படியான சூழல் இல்லாததற்கான காரணம் இங்கே திரை மொழியை அறிந்த திரைக் கதை ஆசிரியர்கள் இல்லை என்பதே. மலையாளத்தில் பத்மநாபன், ஆர். உண்ணி, எம்.டி. வாசுதேவன் நாயர் போன்ற பல எழுத்தாளர்கள் நல்ல திரைக் கதை ஆசிரியர்களாகவும் இருக்கின்றனர். தமிழில் அப்படியானவர்கள் உருவாகி வருவது வரவேற்க வேண்டியதுதான். சிறந்த திரைக்கதை ஆசிரியர் கிடைத்தால் அப்பணியை அவருக்குக் கொடுத்துவிட்டு இயக்கத்தில் மட்டும் கவனம் செலுத்துவோம். அப்படியான சூழல் இல்லாததால்தான் இங்கே பலர் இயக்குநராக இருப்பதோடு, கதை சொல்லிகளாகவும் இருந்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர்.

**'சொல்லாமலே' படம் வெளியான கால காதலுக்கும் இன்றைய காதலுக்கும் மாற்றம் இருப்பதாக நினைக்கிறீர்களா?**

முன்பைக் காட்டிலும் இப்போதுதான் காதல் சரியாக அணுகப்படுவதாக நினைக்கிறேன். முன்பு ஆணின் உணர்வுகள் மட்டுமே முதன்மையாக இருந்தது. ஆணுக்கு ஏற்றாற்போல் பெண் தன்னை மாற்றிக் கொள்வதே காதலாகப் பார்க்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு ஆணுக்கு நிகராக பெண்ணுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டால்தான் அந்த உறவு நீடிக்கும் என்கிற நிலை உருவாகியிருக்கிறது. தற்காலத்தில் அதிக அளவில் பிரிவுகள் நடப்பதை வைத்து இன்று காதலே தோற்றுவிட்டது என நினைக்கின்றனர். உண்மையில் தனக்கான உரிமையை விட்டுக்கொடுக்காமல், இன்னொருவர் மீது ஆதிக்கம் செலுத்த நினைக்காமல் தொடரும் காதல்தான் சரியானது. அப்படி இல்லாத சூழலில் அந்த உறவிலிருந்து விலகுவதும் சரியானதுதான். தமிழ் சமூகத்தில் முன்பு பெண்களை அணுகுவதில் ஆணுக்கு பெரிய பதற்றம் இருந்தது. ஆணும் பெண்ணும் பேசிக்கொள்வதே ஒழுக்கக்கேடாகப் பார்க்கப்பட்ட நிலை இன்று மாறியிருக்கிறது.



**ஒவ்வொரு படத்துக்கும் இடையில் பெரிய இடைவெளி எடுத்துக் கொள்வதற்கான காரணம் என்ன?**

வாழ்க்கை மீதுள்ள பொறுப்பின்மைதான் முதற்காரணம். ஒரு படத்தை இயக்க வருகையில் அது சரியாக வருமா என்கிற பதற்றமும் முக்கியக் காரணம். நல்ல திரைப்படம் எடுப்பது சுலபம். எத்தனை பேர் பார்ப்பார்கள் என்பதைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் நமக்குப் பிடித்த மாதிரியான படத்தை இயக்கலாம். ஆனால், திரைப்படங்களுக்கு முதலீடு அவசியம். போட்ட முதலீட்டைவிட அதிகம் வசூல் செய்ய வேண்டும். அப்படியென்றால் நல்ல படத்தை அனைத்து மக்களையும் ஈர்க்கும் விதத்தில் கொடுக்க வேண்டும் என்பதுதான் பெரிய சவால். 'பரியேறும் பெருமாள்', 'காக்கா முட்டை' போன்று நல்ல படமாகவும் இருக்க வேண்டும், மக்களையும் கவர வேண்டும் என்கிற நோக்கத்தால் தாமதப்படுகிறது.

**இன்றைக்கு இயக்குநராவதற்கான முயற்சியில் இருப்பவர்களுக்கு உங்கள் ஆலோசனை?**

இயக்குநர் என்பவன் படைப்பாளியாக இருப்பது எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவு நிர்வாகத் திறன் கொண்டவனாகவும் இருக்க வேண்டும். படப்பிடிப்புத் தளத்தில் நூற்றுக்கும் மேற்பட்டவர்களிடம் வேலை வாங்கத் தெரிந்திருக்க வேண்டும். படைப்பாளியாக மட்டும் இருந்து நிர்வாகத் திறன் இல்லாதவனாக இருந்தால் அவனால் வெற்றி பெற முடியாது. படைப்பாற்றலை மேம்படுத்திக் கொள்ள நம்மைச் சுற்றி நடக்கும் விசயத்தை கவனித்து உள்வாங்கிக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு வாசிப்பு பெரிய வாசலாக இருக்கும். தேர்ந்த வாசகனால்தான் சிறந்த இயக்குனர் ஆக முடியும்.

**தமிழ் திரைத்துறையில் இன்றைய இளம் இயக்குநர்களிடம் உலக திரைப்படங்களின் தாக்கம் அதிக அளவில் இருக்கிறது. அந்தத் தாக்கத்தில் படம் இயக்க வருகையில் அத்திரைப்படம் நமது கலாச்சார சூழலோடு பொருந்தாமல் அந்நியப்பட்டு நிற்பதாக விமர்சனங்கள் வைக்கப்படுகிறதே?**

'வெயிலோடு போய்' சிறுகதையை திரைத்துறைக்கு வருவதற்கு முன்பே வாசித்திருந்தேன். இயக்குநராகி மூன்று படங்கள் எடுத்திருந்த போதுதான் 'the road home' எனும் சீனப் படத்தைப் பார்த்தேன். அது எனக்குள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அப்படத்தின் நாயகியைக் காட்டிலும் பல மடங்கு வலுவான கதாபாத்திரம் 'பூ' மாரியம்மாள். எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், அப்பழுக்கற்ற காதலை தன்னுள் கொண்டிருக்கும் அந்தப் பாத்திரத்தை வைத்து ஒரு படம் இயக்க வேண்டும் என அப்போது நினைத்தேன். அப்படித்தான் 'பூ' படம் உருவானது. அப்படம் விருதுநகர் மாவட்டத்தின் மண் மணத்தோடுதான் இருக்கும். உலக திரைப் படங்களைப் பார்த்து ஈர்க்கப்படுவதில் எந்தத் தவறுமில்லை. ஆனால், அதை நமது கலாச்சார சூழலுக்குப் பொருத்திக் கொள்வது அவசியம்.






### அரசியல் செயற்பாட்டாளர் சி. யோதிலிங்கம் அவர்களுடன்

## கலந்துரையாடல்

6:00 அறிமுக உரை - பேராசிரியர் சேரன்
6:15 சிறப்புரை - அரசியல் செயற்பாட்டாளர் ஆய்வாளர் சி.யோதிலிங்கம்
7:00 பேராசிரியர் கீதபொன்கலன் 7:15 கேள்வி பதில்
8:00 கலந்துரையாடல். 8:15 நன்றியுரை
இடம்: டெல்டா அக்கடமி, 1160 Birchmount Rd. Scarborough
(லோரன்ஸ் வீதிக்கும் எக்கிலின்டன் வீதிக்கும் இடையில்)
காலம்: ஓகஸ்ற் 17ஆம் திகதி சனிக்கிழமை நேரம் மாலை 5:30 மணி
அனைவரும் வருக. உரையாடுவோம். ஒழுங்கமைப்பு அனுசரணை தமிழர் மேம்பாட்டுப் பேரவை. இவர்களுடன் ரொறொன்ரோ ஈழத்தமிழ் செயற்பாட்டாளர்கள்.

# பாடசாலை..

09ஆம் பக்கத்தொடர்ச்சி

கின்றன. பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை குறைவடைகின்றன.

மனித நடத்தைகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றல், பாடசாலையின் இலக்கை அடைவதில் அக்கறை, சிறந்த தொடர்பாடல் திறன், பிறருக்கு முன்மாதிரியான நன்நடத்தை, தீர்மானம் எடுக்கும் திறன், நடுநிலைமை, செயலூக்கம், பேச்சாற்றல், தேவைக்கு ஏற்ற மாற்றங்களை நடைமுறைப்படுத்தல், நேரமுகாமைத்துவத் திறன், அவசரத் தீர்மானங்களைக் கைவிடுதல், நல்வார்த்தைப் பிரயோகம், முரண்பாட்டை முகாமை செய்யும் திறன் இவை ஒரு பாடசாலை அதிபரிடம் இல்லையாயின் அப்பாடசாலைக்கு ஆசிரியர்களோ, மாணவர்களோ விரும்பிச் செல்வது குறைவு.

மாணவப் பருவத்திலுள்ள பெண்பிள்ளைகளுடன் துர்நடத்தையில் ஈடுபடுபவோரின் அட்டகாசமும் பிள்ளைகளின் கல்வி ஆர்வத்தில் பாதிப்பை ஏற்படுத்தி இடைவிலகலுக்கு காரணமாக அமைந்து, பாடசாலையின் மாணவர் எண்ணிக்கையில் தாக்கத்தை செலுத்துகின்றது. முல்லைத் தீவில் எட்டு வயதுடைய சிறுமியுடன் தொடர்ச்சியாகப் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்ட 73 வயதுடைய முதியவர் முல்லைத்தீவுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவப் பரிசோத



னைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதுடன், வயோதிபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். மொனராகலைப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவியை வகுப்பாசிரியர் வன்புணர்ந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். பாதிக்கப்பட்ட மாணவி தனது தாயுடன் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதன் அடிப்படையிலேயே கைதுசெய்யப்பட்டார்.

வடமாகாணத்தில் கிட்டத்தட்ட 1010 பாடசாலைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. இந்தப் பாடசாலைகளில் 500 வரையானவை ஆரம்பப் பாடசாலைகளாகும். 120 பாடசாலைகள் 20க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்டு காணப்படுகின்றன. 1010 பாடசாலைகளும் கிட்டத்தட்ட 08 இலட்சம் முதல் 10 இலட்சம் வரையான மாணவர்களைக் கொள்ளக் கூடியதாக இருந்தும், இரண்டரை இலட்சம் மாணவர்கள்தான் பாடசாலைகளில் இருக்கின்றனர். முன்னைய காலத்தில் 35 மாணவருக்கு ஓர் ஆசிரியர், ஆனால் தற்போது 14 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர். இவற்றை வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

சீனர் இனத்தவர் பாடசாலைகளைப் பார்க்க முன்னர் இலவசக் கல்வியை பலப்படுத்திய நாடு எமது நாடு. இன்று நாம் எங்கு உள்ளோம், சீனா எங்கு உள்ளது? கடந்த வருடத்தில் நாடளாவிய ரீதியில் 101 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாகவும், 50 மாணவர்களுக்கும் குறைவான 1,458 பாடசாலைகள் இயங்குவதாகவும் புள்ளிவிபரம் உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.


ஏற்கனவே கூறிய பல காரணிகள் கற்றலுக்கு இடையூறாகவும், பாடசாலையை விரும்பிச் செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை குறைவாகவும் காணப்படக் காரணங்களாகும். காலத்துக்குக் காலம் இந்தக் குறைவு அதிகரிக்குமாயின் இறுதியில் இந்தப் பாடசாலை இந்தப் பிரதேசத்துக்கு அவசியமா? என்ற வினாவைத் தோற்றுவித்து இறுதியில் அந்தப் பாடசாலை மூடப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும், ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. வெறுமனே ஒரு பாடசாலை மட்டும் இல்லாமல் எங்களுடைய சமூகம் பற்றியும் எங்களுடைய எதிர்காலம் பற்றியும், எதிர்காலச் சமுதாயத்தில் இருப்போர் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டிய தேவை இருக்கின்றது. ஒரு பாடசாலை மூடப்படுவது ஒரு சிறைச்சாலை திறக்கப்படுவதற்குக் காரணமாக அமையக் கூடாது என்பதில் அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும்.

# ஜம்மு...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

புத்தகத்தை வெளியிட்டார். சென்னையில் கலைவாணர் அரங்கத்தில் இந்த புத்தகம் வெளியிடப்பட்டது. இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக நடிகர் ரஜினிகாந்த் அழைக்கப்பட்டு இருந்தார்.

இந்த விழாவில் பேசிய நடிகர் ரஜினிகாந்த் உள்துறை அமைச்சர் அமிர்த் ஷாவை புகழ்ந்து பேசினார். காஷ்மீர் விவகாரம் குறித்தும் ரஜினிகாந்த் பேசியது வைரலாகி உள்ளது . நடிகர் ரஜினிகாந்த் தனது பேச்சில், "காஷ்மீர் சிறப்பு அதிகாரம் நீக்கப்பட்டதற்கு வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். மிக முக்கியமாக உள்துறை அமைச்சர் அமிர்த் ஷாவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். அமிர்த் ஷாவும் மோடியும், கிருஷ்ணனும் அர்ஜுனனும் போன்றோர். ஆனால் யார் கிருஷ்ணன், யார் அர்ஜுனன் என்று நான் சொல்ல மாட்டேன். அது அவர்களுக்குத்தான் தெரியும். அமிர்த் ஷா லோக்சபாவில் மிக அழகாகப் பேசினார். காஷ்மீரை இரண்டாக பிரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை சிறப்பானது. அவரது பேச்சு என்னை மிகவும் கவர்ந்தது. காஷ்மீர் பிரச்சனையை அமிர்த் ஷா மிக நேர்த்தியாகக் கையாண்டார். மிகக் கடினமான பிரச்னையை அவர்கள் சிறப்பாக எதிர்கொண்டனர். எந்நேரமும் மக்கள் பற்றி நினைப்பவர் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு. மக்களுக்காகத் தொடர்ந்து அவர் உழைத்து வருகிறார். வெங்கையா நாயுடு முற்றிலுமாக ஆன்மிகவாதி. அவர் தவறுதலாக அரசியல்



தலைவரானது ஆச்சரியம். அவரின் இந்த புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொள்வது மகிழ்ச்சி" என்று, ரஜினிகாந்த் தனது பேச்சில் குறிப்பிட்டு இருக்கிறார்.

காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை வழங்கும் 370 சட்டப்பிரிவு நீக்கப்பட்டது. அதுபோல் ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டதால் அது மாநில அந்தஸ்தையும் இழந்தது. இதையடுத்து பாகிஸ்தான் பிரதமர் காஷ்மீரர்கள் அதிகம் வாழும் காஷ்மீரை அழித்துவிட்டு சிறுபான்மையினராக மாற்ற முயற்சிக்கிறது இந்தியா என இம்ரான்கான் குற்றம் சாட்டியிருந்தார். இதையடுத்து இந்தியாவுடன் தூதரக உறவுகளைத் துண்டித்துக் கொள்வது, இரு நாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் காஷ்மீர் விவகாரம் குறித்து பல்வேறு இடங்களில் பாகிஸ்தான் முறையீடுகள் வைப்பதும் அவமானப்படுவதுமாக இருக்கிறது.

ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் முறையிட்ட பாகிஸ்தானிடம் சிம்லா ஒப்பந்தத்தின படி காஷ்மீர் விவகாரத்தை இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளே தீர்வு காண வேண்டும். இதில் மூன்றாவது நபர் தலையிட முடியாது என ஐநா பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துவிட்டது. சவூதி அரேபியா, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என எந்த ஒரு இஸ்லாமிய நாடும் இம்ரான்கானின் அழைப்பிற்கு செவிசாய்க்கவில்லை என கூறப்படுகிறது. இந்த நிலையில் பாகிஸ்தான், சீனாவின் உதவியை நாடியது. சீன வெளியுறவுத் துறை அமைச்சர் வாங்க் ஈயை பாகிஸ்தான் வெளியுறவு துறை அமைச்சர் ஷா மமூத் குரேஷி சந்தித்தார். அப்போது வாங்க் ஈ கூறுகையில் காஷ்மீர் விவகாரம் என்பது நீண்ட நாள் பிரச்சினையாகும். காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா தன்னிச்சையான முடிவை எடுத்திருப்பது கவலையை அளித்துள்ளது. எனவே இந்த பிரச்சினை குறித்து ஐநா பாதுகாப்பு கவுன்சிலின் சாசனத்தின்படியும் இரு தரப்பு ஒப்பந்தத்தின்படியும் முடிவு முறையாக அமைதியாக தீர்வு காண வேண்டும். தன்னிச்சையான முடிவுகள் காஷ்மீர் விவகாரத்தை சிக்கலில் கொண்டு செல்லும் என்பது சீனாவின் கருத்தாகும். பாகிஸ்தானை சீனா ஆதரிக்கும். காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை நீக்குவது பதற்றத்தை அதிகரிப்பது உள்ளிட்ட வேலைகளை தன்னிச்சையாக செயல்படுவதை இந்தியா தவிர்ப்பதுதான் முதல் முக்கிய வேலையாகும் என சீனா கையை விரித்து விட்டது.


Math Tutoring
A. Puranthagan (Puran) BSc. Eng.
416.819.7923
Calculus, Vectors, Advanced Functions,
Trigonometry, Algebra, Geometry
Available for home visits and one-on-one sessions
"கற்க கணிதம் கசடற"
மாணவர்களின் வீட்டுக்கு வந்து தனித்தனியாக வகுப்புகள் எடுக்கப்படும்
1629 Winville Rd. Pickering ON. L1X 0C8


## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.

அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca

யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**- ச.பிரியா -**

### நகைச்சுவை...


ஒருமுறை திருமுருக கிருபானந்த வாரியார் ஆன்மிக சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். அப்போது, மேடைக்கு முன்பு அமர்ந்திருந்த சிறுவர்களை பார்த்து, "நமக்கெல்லாம் சுடுகாடு எங்கே இருக்குன்னு தெரியுமா?" என்று கேட்டார். அதற்கு அந்த சிறுவர், "ஊர் கோடியில் இருக்குது" என்று ஒட்டுமொத்தமாகப் பதில் கூறினர்.

உடனே, "ஆடு, மாடு, கோழிகளுக்கு எங்கே இருக்கிறது?" என்று அடுத்த கேள்வியைக் கேட்டார் வாரியார். குழந்தைகள் பதில் தெரியாமல் மிரட்சியுடன் அவரை பார்த்தனர்.



அப்போது வாரியார் சிரித்துக்கொண்டே, "இதோ இங்கே இருக்குது" என்று வயிற்றை தடவிக் காண்பிக்க, கூட்டத்தில் பலத்த சிரிப்பு.

**Highly Residential Prime Land- For Sale**
**Mount Lavinia - 11 perch**



Ideal for a Luxury residence in a quiet location.
3 minutes walking distance to Galle road,
12 minutes to St. Thomas College,
Banks, Post office and Supermarkets.
The land has two way roads access.
Corner Lot a great advantage.
Clear Title Deed.
PRICE 2,515,000.00 Million
Sri Lankan -Rupees per perch
You can pay in US dollars.

Contact: Mrs. Francis
Cell: 424-558-2035 US)




# தேசிய விருது பெற்றார் கீர்த்தி சுரேஷ்

தேசிய விருது பெறவேண்டும் என்று நினைத்த அம்மா மேனகாவின் கனவை நனவாக்கியுள்ளார் அவரது மகள் கீர்த்தி சுரேஷ். அம்மாவினால் சாதிக்க முடியா ததை மகள் சாதித்துக் காட்டி யுள்ளார்.



சினிமாத் துறைக்கு இந்திய அரசால் வழங்கப்படும் தேசிய விருதுகள் அறி விக்கப்பட்டுள்ளன. லோக்சபா தேர்தல் காரணமாக மூன்று மாதம் தள்ளிப்போன 66ஆவது தேசிய விருதுகள் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டன. சிறந்த நடிகையாக கீர்த்தி சுரேஷ் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த தமிழ் படமாகப் 'பாரம்' தேர் வானது. மறைந்த நடிகை சாவித்திரி யின் வாழ்க்கையை மையமாக வைத்துத் தெலுங்கில் வெளிவந்த 'மகாநடி' படத்தில் நடித்தமைக்காக அவருக்குத் தேசிய விருது அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழில் இப்படம் 'நடிகையர் திலகம்' என்ற பெயரில் மொழிமாற்றமாகி வெளியானது. இரு மொழிகளிலும் சக்கை போடு போட்ட படம் ரசிகர்களால் பாராட்டுக்களை அள்ளியது. சாவித்திரியாகவே வாழ்ந்திருந் தார் கீர்த்தி சுரேஷ். அப்போதே அவர் விருது பெற வாய்ப்பு உள்ளதாக சினிமா ரசிகர்கள் கணித்திருந்தனர். இந்த நிலையில்தான் அறிவிக்கப்பட்ட தேசிய விருதில் சிறந்த நடிகையாகத் தேர்வாகி உள்ளார் கீர்த்தி சுரேஷ்.

தமிழ் நடிகைகளில் ஸ்ரீதேவி, சரண்யா பொன்வண்ணன், பிரியாமணி, சுதா, சுகாசினி, ஷோபா, லக்ஷ்மி ஆகியோர் இதுவரை தேசிய விருது பெற்றுள்ளனர். இதில் மறைந்த நடிகை ஸ்ரீதேவி இந்தி படம் 'மாம்' படத்திற்காக அவர் மறை விற்குப் பிறகு கொடுக்கப்பட்டது. தற்போது கீர்த்தி சுரேஷ் பெற்றுள்ளார்.

இந்த விருதினைத் தனது அம்மாவுக்குச் சமர்ப்பணம் செய்வதாகக் கூறியுள்ளார் கீர்த்தி சுரேஷ். தேசிய விருது வாங்க வேண்டும் என்பது அம்மாவின் ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை. மகா நடிக்காக எனக்கு தேசிய விருது கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. இந்த விருது அறிவிக்கப்பட்ட உடன் முதலில் சந்தோசப்பட்டது என் அம்மாதான் என்று கூறியுள்ளார் கீர்த்தி.
நடிகை மேனகா கீர்த்தி சுரேசின் அம்மா மேனகாவும் நடிகைதான். எண்பதுகளில் தமிழ் சினிமாவில் அறிமுகமாகி, மலையாளத்தில் புகழ்க்கொடி நாட்டியவர். பின்னர் மலையாள சினிமாவிலேயே மையம் கொண்டவர், கேரளாவின் மருமகள் ஆனார். அம்பிகா, ராதா காலத்தில் சினிமாவிற்குள் நுழைந்த அவர் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார்.

சாதித்த மகள் கவர்ச்சி காட்டாத கதாநாயகி என்ற பெயர் பெற்ற மேனகா 'ஓப்போல்' படத்தில் நடித்து மலையாள ரசிகர்களின் மனதைக் கவர்ந்தவர். அந்தப் படத்திற்கு அவருக்கு தேசிய விருது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஆனால் பல விருதுகளைப் பெற்ற



அந்தப் படம் மேனகாவிற்கு விருது பெற்றுத்தரவில்லை. தேசிய விருது பெற வேண்டும் என்று ஆசைப்பட்ட மேனகாவின் கனவை அவரது மகள் கீர்த்தி சுரேஷ் நனவாக்கிவிட்டார். அம்மாவினால் திரைத்துறையில் சாதிக்க முடியாததை மகளாக கீர்த்தி சாதித்து விட்டார்.

# சத்குரு ஸ்ரீ சரவண பாபாவின் கனடா வருகை

## SADHGURU SRI SHARAVANA BABA IN CANADA



குன்றுதோறும் குடியிருக்கும் கலியுக வரதனாம் முருகப் பெருமானின் திரு வடிவமான ஸ்ரீ சரவண பாபா சுவாமி உலகளாவிய தனது ஆன்மீக பயணத்தின் ஒரு பகுதியாக தனது பக்தர்களை சந்திக்க மீண்டும் கனடா வருகை தரவுள்ளார்.

பின்வரும் அட்டவணையில் உள்ளபடி சத்குரு ஸ்ரீ சரவண பாபா தனது அடியார்களுக்கு தரிசனமும் ஆசியும் வழங்கவுள்ளார். அனைத்து முருக அடியார்களையும் இந்த பொது நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*As part Of His mission to meet his global devotees, Sadhguru Sri Sharavana Baba is coming to Canada*
*We cordially invite all devotees to the public events outlined below.*

## SWAMI'S CANADA VISIT - August 2019

### PUBLIC PROGRAMME



**Programme:1**
**City: Edmonton**
Date: August 11th
Time: 2:00 PM
Place: Shiridi Sai Baba Mandir
Address:
51076 Range Road
250 SW
EDMONTON,
ALBERTA, AB T9G 0B3



| Programme 2 | Programme 3 | Programme 4 |
|---|---|---|
| **City: Toronto** | **City: Toronto** | **City: Brampton** |
| Date: August 16th | Date: August 17th | Date: August 18th |
| Time: 6:30 PM | Time: 5:30 PM | Time: 3:00 PM |
| Place: Sri Ayyappan Hindu Temple | Place: Canada Kanthaswamy Temple | Place: Bavani Shankar Mandir |
| Address: 635 MIDDLEFIELD ROAD, TORONTO, ONTARIO, ON M1V 5B8 | Address: 733 Birchmount Road, TORONTO ONTARIO, ON M1K 1R5 | Address: 90 Nexus Avenue, BRAMPTON ONTARIO, ON L6P 3R6 |

| Programme 5 | Programme 6 | Programme 7 |
|---|---|---|
| **City: Ottawa** | **City: Montreal** | **City: Montreal** |
| Date: August 23rd | Date: August 24th | Date: August 24th |
| Time: 5:00 PM | Time: 9:00 AM | Time: 5:00 PM |
| Place: Ottawa Sivan Temple | Place: Ganesh Party Palace | Place: Thiru Murugan Temple |
| Address: 2104 Roger Stevens Dr, North Gower, OTTAWA, ONTARIO, ON K0A 2T0 | Address: 300 Boulevard Marcel-Laurin, Saint-Laurent, Montréal, Québec, QC H4M 2L4, | Address: 1611 St Regis Blvd, Dollard-Des Ormeaux, Montréal, Québec, QC H9B 3H7 |



மேலதிக தொடர்புகளுக்கு – *For further details:*
Telephone: (289) 900 2505 | 416.816.8641 | 647.983.6773
Website: www.omsharavanabhavamatham.ca
Facebook: www.facebook.com/canadaosb

ஓம் சரவணபவ சேவா அறக்கட்டளை – கனடா
*Om Sharavanabhava Seva Foundation of Canada (289) 900 2505*



# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN
FUNERAL HOMES
4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM

*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*

# தாவரங்கள் பேசுகின்றன!



சுந்தரம் இந்திராஜா
indrarajah@gmail.com

பூமியில் வாழும் சில உயிர்கள் உணர்தல் என்கின்ற ஓர் அறிவு மட்டுமே கொண்டவை. செடி, கொடி, புல், மரம் போன்ற உயிரினங்களைச் சொல்லலாம். இவற்றிற்கு தொடுதலால் உணரும் அறிவு என்ற ஓர் அறிவு மட்டுமே உண்டு. கடல் வாழ் பிராணிகளான சிப்பி, நத்தை, சங்கு போன்ற உயிரினங்களுக்குத் தொட்டால் உணரும் அறிவோடு நாக்கு என்ற சுவை அறிவுமாக இரண்டு அறிவுகள் உண்டு. இவ்விரண்டு அறிவுகளுடன் நுகரும் அறிவோடு மூன்று அறிவுமாக உடைய உயிரினங்கள் ஈசல், எறும்பு, கறையான், மின்மினிப்பூச்சி போன்றவைக்கு மூன்று அறிவுகள் உண்டு. இம்மூன்று அறிவுகளுடன் கண் என்ற பார்வை அறிவுமாகக் கொண்டவையான நண்டு, தும்பி, வண்டு போன்ற உயிரினங்கள் போன்றவைக்கு நான்கு அறிவுகள் உண்டு. இந்த நான்கறிவுகளுடன் கேட்கும் அறிவுமாக உடைய வௌவால், ஆமை மற்றும் பறவைகள், நான்கு கால் விலங்கினங்களுக்கு ஐந்து அறிவுகள் உண்டு. ஆறாவது அறிவான ஆராய்ந்தறியும், சிந்திக்கும் மனத்தைக் கொண்டவன் மனிதன் மட்டுமே. இவ்வாறுதான் எல்லோரும் அறிந்திருக்கின்றோம்.

தாவரங்கள் மனிதர் காட்டிய அதே ஐம்புலன்களை வெளிக்காட்டுகின்றன என்று கட்டுரை முடிவில் அறிவீர்! (Plants Exhibit the Same Senses as Humans and See, Touch, Smell, Hear and Even Taste).

ஓர் அறிவு மட்டுமே கொண்டதாக இது வரை காலமும் நாம் எண்ணியிருந்த தாவரங்கள் செடிகள் காற்றில் ஆடுவதைப் பார்த்திருப்பீர்கள். அவை அவ்வாறு ஆடுவதன் மூலம் ஒன்றுக்கொன்று பேசுகின்றன என்ற அதிசயத் தகவலைக் கூறுகின்றனர். தாவரங்கள் ஒலிக்கு செவி சாய்க்கின்றன. அதுமட்டுமல்ல, தாங்களே சில ஒலிகளை வெளியிடவும் செய்கின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள்.

இந்த ஆய்வை மேற்கொண்ட பிரிஸ்டல் பல்கலைக்கழக (University of Bristol UK) ஆய்வாளர்கள் அதிசக்தி வாய்ந்த ஸ்பீக்கர்களைப் பயன்படுத்தினர். அதன்மூலம் சோளப் பயிர்கள் தமது வேர்ப் பகுதியிலிருந்து வெளியிட்ட 'கிளிக்' ஓசையைக் கேட்டனர். காற்றில் செடிகள் தமது விருப்பம் ஏதுமில்லாமல் இயல்பாக ஆடுவது போலத் தோன்றினாலும், உண்மையில் அவை அப்போது தொடர்ந்து உரையாடிக் கொண்டு இருக்கின்றனவாம். தாவரங்கள் ஏற்படுத்தும் அதே அலை வரிசையிலான ஒலியைத் தொடந்து ஏற்படுத்தியபோது, தாவரங்கள் அதை நோக்கி வளரத் தொடங்கியிருக்கின்றன. ஒலியும் அவற்றை ஈர்க்கிறது என்பது தற்போது உறுதியாகியிருக்கிறது.

சமீபத்தில் சுவிஸ்சலாந்தில் வேர்ன் நகரில் விஞ்ஞானிகள் வறட்சிக் காலத்தில் பைன் மற்றும் ஒக் மரங்களிலிருந்து வெளிப்படும் மீயொலி அதிர்வுகளை (Ultrasonic Vibrations) பதிவு செய்து வறட்சி மற்றும் உலர் நிலையில் தாம் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று மற்றைய மரங்களுக்கும் தங்களுக்குள்ளும் சமிக்கைகள் காட்டிய தாகத் தகவல் வெளியிட்டுள்ளனர். சமிக்கைகள் கிடைத்ததும் அருகருகே உள்ள மரங்கள் வேர்களால் இணைந்து நீர் மற்றும் உணவைப் பகிர்ந்து உயிர் வாழ்கின்றனவாம். மனிதரின் காதுகளுக்குக் கேட்காத (ஒலி) மொழியில் செடிகள் பேசிக்கொள்கின்றன என்பதற்கும் உணவைக் கொடுத்து வாங்கிச் சுவைக்கின்றன என்பதற்கும் இவ்வாறு உறுதியான ஆதாரம் கிட்டியிருக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மொழி என்பது மனிதரின் கண்டுபிடிப்பு என்று இனியும் நாம் பெருமையடித்துக் கொள்ள முடியாது.

எக்ஸெட்டர் பல்கலைக்கழக (University of Exeter UK) ஆய்வாளர்கள் வெளியிடும் தகவல் இன்னும் வியப்பை ஏற்படுத்துகிறது. அதாவது, முட்டைக்கோவா (Cabbage) தாவரமானது ஒருவித வாயுவை வெளியிட்டு, வெட்டுக்கிளிகள், செடிகளை வெட்டும் தகவலைப் பிற தாவரங்களை எச்சரிக்கின்றனவாம். இதனை நுட்பமான கேமராவின் மூலம் ஆய்வு செய்து முதன் முறையாக விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

கூட்டுப்புழுக்கள் ஒரு மரத்தில் குடிகொண்டு இலை, கிளை முதலியவற்றைத் தின்று மரத்தை நோய்வாய்ப்படச் செய்தன. பாதிக்கப்பட்ட மரம் தனக்கேற்பட்ட கதியை அயலிலுள்ள மரங்களுக்கு வான்வழி வாசனை மூலம் செய்தி ஒன்றை (Airborne pheromonal message) அனுப்பித் தெரிவித்துள்ளது. அயலிலுள்ள ஆரோக்கியமான மரங்கள் நோய் தொற்றுப் பரவாமல் தடுப்பதற்கும் உடனடித் தாக்குதலுக்கான இரசாயனங்களை உற்பத்தி செய்து வைத்துத் தயார் நிலையில் இருந்ததையும், நோய்த் தொற்றிலிருந்து செயற்கையாகத் தனிமைப்படுத்தப்பட்ட மற்ற மரங்கள் இந்த இரசாயனங்களை உற்பத்தி செய்யவில்லை என்பதையும் 1980ஆம் ஆண்டளவில் நடத்திய ஆராய்ச்சியில் கண்டு கொண்டுள்ளனர். தாவரங்கள் நுகரும் அறிவும் கொண்டவை என நிரூபணமாகிறது.

தாவரத்திற்குப் பசி ஏற்பட்டால் சூரியக் கதிர்கள் கிடைக்கும் திசை நோக்கி வளைந்தும் நீண்டும் சூரியஒளியைப் பெற்று ஒளிச்சேர்க்கை மூலம் கார்பன்டை ஒக்சைட் மற்றும் நீரைச் சேர்த்துச் சீனியாக மாற்றி உணவாக்கிக் கொள்கின்றன. அதேவேளை பிராண வாயுவைத் தந்து காற்றின் தரத்தை மேம்படுத்தும் பண்புகளைக் கொண்டிருக்கின்றன. தாவரத்தின் நுனியில் ஒளியை உறுஞ்சும் ஒளி உணர்திறன் கொண்ட போட்டோரொப்பின்ஸ் (Phototropins) எனும் குருத்துப் பகுதி தேவையான ஒளியைபெற்றும் ஒளியால் செயலாக்கப்பட்ட சுவிச் (light-




activated switch) போலச் செயல்பட்டு ஒளி கிடைக்காதபோது செயலை நிறுத்திவிடுமாம். பகல் நேரங்களில், நீலம் மற்றும் அல்ட்ரா வயலட் ஒளி கண்டறிய சமிக்ஞைகள் பயன்படுத்தி இலை இயக்கங்கள் மற்றும் ஒளிச்சேர்க்கை உட்பட பல செயல்முறைகளை சீராக்குகிறது. தாவரங்களினது பார்வை கூடத் தாவரங்களுக்கு நேரம் சொல்ல உதவுகிறது. வெளிச்சத்தைக் காண எங்கள் கண்களில் புகைப்படவாங்கிகள் (photoreceptors) உள்ளது போலத் தாவரங்களில் அவற்றின் தண்டுகள் மற்றும் இலைகள் முழுவதும் புகைப்படவாங்கிகள் உள்ளது. தாவரங்கள் பார்வை என்ற அறிவும் கொண்டவை என நிரூபணமாகிறது.

தாவரங்களும் பிற உயிரினங்களைப் போன்றே வாழ்க்கை நடத்துவன என்றும் மற்ற உயிரினங்களைப் போன்று தாவரங்களும் துன்ப, துயரங்களுக்கும், அதிர்ச்சிக்கும் ஆளாகின்றன என்றும் சில போதைப் பொருள்களுக்கு உள்ளாகும் போது தாவரங்களும் தம் நினைவை இழந்து மயக்கமுறுகின்றன என்றும் டாக்டர் போஸ் ஆய்வு செய்து வெளியிட்டார். டாக்டர் போஸ் அவர்களின் மிகச் சிறந்த கண்டுபிடிப்புகளுள் ஒன்று என்னவெனில், போதைப் பொருள்களின் தாக்கத்தால் தாவரங்களும் மயக்க நிலையை அடைகின்றன என்பதாகும். இதற்கான சோதனையின் போது தாவரங்கள் மயக்க நிலை காரணமாக, ஆழ்துயில் கொள்வதையும், பின்னர் மெதுவாக மயக்க நிலை நீங்கி அவை இயல்பு நிலைக்குத் திரும்புவதையும் அவரால் கவனிக்க முடிந்தது.

தாவர உயிரினங்கள் பற்றிய தமது ஆய்வுகளையும், ஆய்வு முடிவுகளையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளாக ஒரு நூல் வடிவில் டாக்டர் ஜகதீஷ் சந்திரபோஸ் 1902ஆம் ஆண்டு வெளியிட்டார். அந்நூலின் பெயர் 'உயிருள்ளவை உயிரற்றவைகளின் உணர்வுகள்' (The Reaction of Living and Non-living) என்பதாகும்.

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)



# கண்கள்...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

இவை தான். கண்ணீரே கண்களை ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன. பொதுவாக கண்ணீரில் நீர், எண்ணெய், சளி (Mucous) என்பன உள்ளன. சுரப்பிகளே (Lacrimal Glans) கண்ணீரை உருவாக்குகிறது. இது இமைகளுக்கு மேல் உள்ள தசைப்பகுதியில் உள்ளது. கண்ணீரில் பலவகை உண்டு.

1. அடிப்படை கண்ணீர் (Basal Tears): கண்கள் பாதுகாப்பாகவும் வழுவழுப்பாகவும் இருக்கக் கண்ணீர் நாளங்கள் இந்தக் கண்ணீரை எப்போதும் உற்பத்தி செய்துகொண்டே இருக்கின்றன. தெளிவாகப் பார்க்கவும் இது உதவுகிறது. நாம் கண் சிமிட்டும்போது, இந்தக் கண்ணீர் நம் கண்கள் முழுவதும் பரவுகிறது.

2. எதிர்வினைக் கண்ணீர் (Reflex Tears): கண்களில் ஏதாவது தூசி விழுந்தால் அல்லது கண்களில் எரிச்சல் ஏற்பட்டால் வருவதுதான் இந்தக் கண்ணீர். நாம் கொட்டாவி விடும்போதும் சிரிக்கும் போதும்கூட இந்தக் கண்ணீர் வருகிறது.

3. உணர்ச்சி சார்ந்த கண்ணீர் (Emotional Tears): மனிதருடைய உணர்ச்சியின் வெளிப்பாடாக வருவதுதான் இந்தக் கண்ணீர். ஆழ்ந்த துக்கத்தையோ சந்தோஷத்தையோ நாம் வெளிக்காட்டும் போது இந்தக் கண்ணீர் வரும்.



எதிர்வினைக் கண்ணீரைவிட 24 சதவீதம் அதிக புரதம் இதில் இருக்கிறது. வெங்காயம் மற்றும் வாயுக்களால் ஏற்படுகிறது. இந்தவகை ஒவ்வொரு கண்ணீருக்கும் அதன் சுவை, தன்மை என்பவற்றில் வேறுபாடுகள் உள்ளன. இரசாயன மாறுதல்களும் உள்ளன. சில கண்ணீர் துவர்க்கும். அடக்க முடியாத துயரம் வந்தாலும் கண்ணீர் வரும். கோபத்தில் வருவது துவர்ப்பான கண்ணீர். இதனை 'Pitta tears' எனலாம். பயத்தில் வருவது Veta tears எனப்படும் கண்ணீராகும். கருணையில் வருவது Kapha tears எனப்படும். இதில் காதல், மகிழ்ச்சி என்பன அடங்கும். ஒருவர் அழுகின்றார் என்றால் வலது கண்ணிலேயே முதல் கண்ணீர் துளி வருகிறது என்பது ஆய்வாகும்.

கண்ணீர் வராமல் போய்விடுகின்ற சூழ்நிலை (Dry Eyes) சிலருக்கு ஏற்பட்டு விடுகிறது. இதனை 29 வீதமான கனடியர் அனுபவிக்கின்றனர். இதனையே மருத்துவ உலகம் Keratitis Sicca என அழைக்கிறது. பொதுவாக விழி வெண்படல நோய் காரணமாகவே இது ஏற்படலாம். Dry Eye Syndrome (DES) என்று கருதப்படும் இந்த நோய் உலகெங்கிலும் உள்ளது. கண்ணில் எரிவு, கண் கடி, பாரமான கண்கள், களைப்புற்ற கண்கள், சிவந்த கண்கள், மங்கல் பார்வை என்பனவே அறிகுறிகளாகும் கணினி பாவனை, தொடுவில்லை (Contact Lens), வயது, உள்சுற்றாடல், அடிக்கடி விமானப் பயணம், புகைத்தல், மருந்து பாவனை, கண் மடல் பிரசனைகளால் கண்களில் வரட்சி ஏற்படலாம்.

சிலருக்கு கண்களில் தொடர்ந்து கண்ணீர் வரும். இதனை watery eyes எனலாம் ஒவ்வாமை, கண்மடல் அழற்சி என்பனவற்றினால் சில பிரச்சினை எழுகிறது. கண்ணின் மேற்பரப்பில் ஏற்படும் அழற்சியுடன் (Inflammation) வழமையான கண்ணீர் குழாய்கள் (Tear ducts) அடைத்து விடுவதாலும் வேறுவழிகளில் இது வெளியேறுகிறது. இதனை Epiphora என அழைப்பர். பிறவியிலேயே சிலருக்கு கண்ணீர்க் கால்வாய் வளர்ச்சியின்றி இருக்கலாம். அவர்களுக்கும் போதிய கண்ணீர் வழிகிறது. சில இரசாயனங்கள் கூட கண்ணில் கண்ணீரை வரவழைக்கலாம். விழி வெண்படலத்தில் ஏற்படும் அழற்சி (Keratitis) நோய்த் தொற்று, காயம், முகவாதம் (Bell's palsy), காய்ச்சல், Meibomian சுரப்பிப் பிரச்சினை என்பனவற்றாலும் மேலதிகமாகக் கண்ணீர் ஏற்படலாம். இவர்களுக்குப் பார்வை குறைகிறது. கண்ணில் ஏதோ உள்ளதாக தோன்றுகிறது, தொடர்ந்து சிவக்கிறது.

கண்ணில் ஏற்படும் முக்கிய நோய்களுக்கும் (Diseases), கோளாறுகளுக்கும் (Disorder) வேறுபாடுகள் பல உள. பெரிய அளவில் முதியோரைப் பாதிக்கும் நோய் Age Related Macular Degeneration (ARMD) என்பதாகும். சராசரி 65 வயது உள்ளோருக்கு திசுக்கள் நலிவடைகின்றது. புகைப்பித்தல், அதிக வெளிச்சம் ஆகியவற்றாலும் பார்வை பாதிக்கப்படலாம். அடுத்து கண்புரை (Cataract) இதுவும் வயதுடன் சம்பந்தப்பட்டது. பார்வை மங்கும், இரவில் பிரயாணம் செய்வதில் கஷ்டமாகும். இதனையே எம்மவர் பூப்படர்தல் என்பர். இதற்கு சத்திர சிகிச்சையே ஒரே வழியாகும்.



கண்களைப் பார்த்துப் பயம் கொள்வோர் உள்ளனர். இதனை Ommatophobia என்பர். எமது வாழ்வில் 24 மில்லியன் வெவ்வேறு உருவங்களை நாம் பார்த்துவிடுகிறோம். இந்த சூழ்நிலையில் எதிர்கால பார்வையுலகம் பல பிரச்சினைகளை எதிர்கொள்கினறது. இன்று சராசரியாக 1.3 பில்லியன் மக்கள் ஏதோ ஒரு பார்வைப் பிரச்சினையுடனே வாழ்கின்றனர். இதில் 80 வீதமானது சரி செய்ய கூடியதாகும். பொதுவாக சிதறல் பார்வை, கண் புரை, கண் அழுத்தம், விழித்திரை நோய் போன்றவற்றால் பாதிப்புற்றுள்ளனர். WHO எனப்படும் உலக சுகாதார நிறுவனம் Universal Eye Health : A Global action plan 2014 – 2019 வரை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பல மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. படிப்படியாக கண் தெரியாதோர் பார்வையைப் பெறப் போகிறோமோ என்ற ஏக்கமும் உண்டு.

உலக சுகாதார நிறுவனம் (World Health Organization), கண் பார்வையின்மை மற்றும் பார்வைக்குறைபாடு பற்றி உலக அளவில் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் பார்வையிழப்பு பற்றிய விழிப்புணர்வினை மேம்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் இரண்டாவது வியாழக்கிழமை வரும் திகததியை உலக கண் இழப்பு தினமாக அறிவித்து, கண் நலம் பற்றிய செய்திகளை விழிப்புணர்வினை மேம்படுத்துமாறு கேட்டுக் கொண்டது. அதன்படி ஒக்ரோபர் 09, 2014 அன்று "உலக பார்வை தினம்" முதல்முதலில் கொண்டாடப்பட்டது.

# எடுங்கள் அல்லது விடுங்கள்

## Take it or Leave it.

## வேண்டுமா?

மெய்ஞானம் பெற்று அகப்பரிநாம மாற்றம் அடைந்து தன்னைத்தான் அறிந்தோர் தாம் அனுபவித்த ப்ரமானத்தை பலவிதமாக வெளிப்படுத்தினர். இன்று நமக்கு அவை நூல்களாகக் கிடைத்துள்ளன. இவற்றை படிப்பதால் தமிழ் அறிவு, இறைபக்தி கூடுகிறது. அதற்கு மேலாக இன்னொரு காரணத்திற்காகவே இன்நூல்களை எழுதியுள்ளனர்.

தான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களும் பெறவேண்டும், தனக்கு கிடைத்த இந்த மெய்ஞானத்தை மற்றவர்களும் பெற முயற்சி செய்யவேண்டும் என்பதே. இந்த நூல்கள் ஞானஅறிவை வேண்டிநிற்கத் தூண்டுகிறது. வாழ்க்கைக்கு ஞானம்தான் ஆதாரம்.

இந்த நோக்கத்தில்தான் கோயில்களில் முக்கியமாக சைவக்கோயில்களில் ஒவ்வொரு பூஜை நேரத்திலும் விளக்கு கின்றனர். இறைசக்தி எங்கும் முள்ளது, எம் முள்ளும் உள்ளது. பிறக்கும்போதும், குழந்தைப் பருவத்திலும், இறைசக்தியுடன் இணைந்துதான் இருந்தோம். பின் இவ் வுலகில் வாழவேண்டிய அறிவு புகட்டப்பட வேண்டும் என்ற நல்லநோக்கத்தில், புறத்தகவல்கள் எம்முள் திணிக் கப்பட, எமக்கும் இறைசக்திக்கும் இடையே ஒரு திரை ஏற்பட்டதால், முன்னிருந்த இணைப்பு மறைக்கப்பட்டது. ஆனால் அழிக்கப்படவில்லை.

திரை நீக்கப்படக்கூடியது. இந்தத் திரை மெய்ஞானம் பெறும்போது நீக்கப்படுகிறது. அப்போது, இறை நான்கு விதமாகப் பரிணமிக்கின்றது. - ஜோதி, நாதம், சப்தம், அமிர்தம்

பூஜை நேரம் எல்லோரும் ஒருமுகமாக ஆதிமூலத்தை நோக்க, பூசகர் திரையை நீக்க,


பஞ்சாலாத்தி காட்ட - (ஜோதி ப்ரம்மம்)



மணிகள் ஒலிக்க - (நாத ப்ரம்மம்)
மந்திரம் ஓதப்பட - (சப்த ப்ரம்மம்)
பஞ்சாமிர்தம் படைக்கப்பட்டிருக்க - (அமிர்த ப்ரம்மம்)
இவை எமக்கு விளக்கப்படுகிறது.

பின் சிறிது நேரம் சும்மா இருந்து எம்முள்ளே இவற்றை காணவேண்டும் என உணர வைப்பதற்கு, கோயில்கள் வழிகாட்டியாக, மனிதருக்காக, மனித உடம்பு வடிவத்திற்கு அமைய கட்டப்பட்டுள்ளன.

இவ்வுண்மையை உணர, அனுபவிக்க, நாமும் மெய்ஞானத்தைப் பெற்று ஆனந்தமாக, அமைதி நிறைந்த வாழ்வை அடையலாம். வேண்டுமா?

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நினைவில் நிற்பவை-23

## கிறிஸ்தவக் கல்லூரி



- துறையூரான் -

தொடர்ச்சி.....

நான் தூய தொமஸ் விடுதியில் தங்கி இருந்தபோது நடைபெற்ற சம்பவங்கள் பற்றி சென்ற கட்டுரையில் பார்த்தோம். மேலும் சிலவற்றைப்பற்றி இனிப் பார்ப்போம். விடுதியில் காலை உணவு 7 மணி முதல் 9 மணிவரை வழங்கப்படும். பெரும்பாலும் பட்டர், ஜாம் பூசிய பாணும், 3 பற்றிசும், தேனீரும் இருக்கும். பற்றிசை அங்கு பவ் (Puff) என்று கூறுவர். இதற்கு நல்ல வரவேற்பு மாணவர்களிடையே இருந்தது. வெகு அருமையாக சில நாட்களில் உப்புமா இருக்கும். மதிய உணவு சோறு, சாம்பார், துவையல் போன்றவை வழங்கப்படும். இரவில் சப்பாத்தி, குருமா, இட்லி, வடை போன்றவை வழங்கப்பட்டன. வெள்ளிக்கிழமைகளில் இரவில் மரக்கறிப் பிரியாணி, குருமா கொடுக்கப்பட்டன. அவ்வாறு அசைவ உணவுக்காரருக்கும் விசேட உணவுகள் வழங்கப்பட்டன. உணவுப் பட்டியல் தயாரிப்பது எமது ஆலோசனைக் குழுவின் வேலை. அப்போது உணவு ஒப்பந்தக்காரரும் இருப்பார். பெரும்பாலும் இவரும் சமையற்காரரும் மலையாளிகளே. அவர்களின் சமையல் சுவையாகவும் மணமாகவும் இருக்கும்.

காலையில் பெரும்பாலான விரிவுரைகள் 10 மணிக்கும் ஆரம்பமாகும். இடையில் 1 மணித்தியால இடைவெளியின் பின்னர் பின்னேர விரிவுரைகள் இருக்கும். நான் உயிரியல் பாடங்களையே முக்கிய பாடங்களாகக் கற்றேன். தாவரவியல், விலங்கியல் பகுதியில் பெரும்பாலும் இலங்கை மாணவர்கள் அதிகமாக இருந்தனர். எனது வகுப்பில் 30 மாணவர்களுள் 12 பேர் இலங்கை மாணவர்களாக இருந்தனர். அத்துடன் மலேசியா, மொரிசியஸ், தென்னாபிரிக்கா மாணவர்களும் படித்தனர். எமது விரிவரையாளர்களும் சிறப்பாகக் கற்பித்தனர். விரிவுரைகள் நடக்கும்போது நான் குறிப்புகள் எடுப்பது வழக்கம். பாட நூல்கள் சில பாடங்களுக்கு மட்டுமே இருந்தன. அந்நாட்களில் கணினி கிடையாது. எனவே நான் கல்லூரி நூல் நிலையத்திற்குச் சென்று குறிப்புகள் எடுப்பது வழக்கம். நான் படித்தபோது கலாநிதி வெங்கடசுப்பன் துணைத் தலைவராக இருந்தவர். இவர் சரளமாக ஆங்கிலத்தில் விரிவுரைகள் நடத்துவார். பெரும்பாலும் சூழலியல் (ecology) பற்றிய பாடங்கள் நடத்தினார். அத்துடன் புதிதாகப் பட்டம் பெற்று வருவோர் செய்து காட்டுனர்களாக (Demonstrator) நியமிக்கப்பட்டனர். இவர்கள் செயல் முறைப்பாடங்களில் பல்வேறு செயல் முறைகளைச் (Practical) செய்து காட்டி விளங்கப்படுத்துவர். அவ்வாறு சேர்ந்தவர் கலாநிதி கிறிஸ்பின் தேவதாஸ். இவர் எனது விடுதியின் உப காப்பாளராகவும் இருந்தார். இவர் ஒவ்வொரு சனிக்கிழமை காலையிலும் ஆர்வமுள்ள மாணவர் சிலரை வளாகத்திலுள்ள மரஞ்செடிகளை அடையாளமறிவதற்காகக் கூட்டிச் சென்று விளக்குவது வழக்கம். இது காலையில் நடை பயிற்சியாகவும் செயற்முறைப் பயிற்சியாகவும் இருந்தது. இவர் பின்னாளில் துறை முதல்வராகவும் இருந்தவர். கலாநிதிப் படிப்புக்காக அமெரிக்காவுக்கு புலமைப் பரிசில் பெற்று சென்று படித்தார். பின்னர் நான் நைஜீரியாவில் விரிவரையாளராக இருந்தபோது இரண்டு ஆண்டுகள் 'sabbatical' விடுமுறையில் எடுத்துவந்து அங்கு பணியாற்றினார். பின்னர் இளைப்பாறி அமெரிக்கா சென்று சிக்காக்கோவில் பகுதிநேர விரிவுரையாளராக பணியாற்றி இரு ஆண்டுகளுக்கு முன் மறைந்தார். இவர் 3,4 தடவை ரொறொன்ரோ வந்திருந்தார். அவர் மறையும்வரை நான் அவரோடு தொடர்பு வைத்திருந்தேன். ஆர்வமாகப் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் நல்ல உள்ளம் படைத்தவர். அவரது மனைவியும் பிள்ளைகளும் சிக்காகோவில் வாழ்கின்றனர்.

இக்கல்லூரியின் கற்பித்தல் முறை சிறப்பாக அமைந்திருந்தால் பலர் உயர் புள்ளிகள் பெற்று சித்தியடைந்து வாழ்க்கையிலும், உன்னத பதவிகளில் உலகின் பல பாகங்களில் வாழ்ந்தனர், வாழ்கின்றனர். கிறிஸ்தவக் கல்லூரி என்றாலே காரியாலங்கள், கல்விக் கூடங்கள், பொது இடங்கள் யாவற்றிலும் அங்கு படித்தவர்களுக்குத் தனியான மரியாதையும் விசேடமாக கவனிக்கப்படும் வாய்ப்பும் இருந்தது. பெரும்பாலும் நான் விடுமுறையில் இலங்கை செல்லும்போது ஒரு குழுவாகவே நாம் பிரயாணம் செய்வது வழக்கம். அப்போது குடிவரவு, சுங்கப்பரிசோதனை இடங்களில் கல்லூரியின் பழைய மாணவர்கள் பணியில் இருந்ததால் எமக்கு விசேட சலுகை கிடைத்தது. வரிசையில் நிற்காமலே எல்லோரையும் ஒன்றாக வரவழைத்து பரிசோதனை எதுவுமில்லாமல் அனுப்பி வைத்தனர். எங்கள்மீது அவர்களுக்கு இருந்த நம்பிக்கையும் பாடசாலைமீது அவர்கள் வைத்திருந்த நன்றியுணர்வும் இதிலிருந்து வெளிப்பட்டது. இலங்கையில் கூட நான் அதிபராக இருந்த போது உயிரியல் பகுதி விரிவுரையாளர்கள் சிலர் சுற்றுலாவில் யாழ்ப்பாணம் வந்திருந்தனர். அவர்களுக்கு திரு.ஆனந்தராசா அதிபராகப் பரியோவான் கல்லூரியில் பணியாற்றிய போது விருந்துபசாரம் கொடுக்கப்பட்டது. அதில் யாழ். கல்லூரிகளில் அப்போது அதிபர்களாக இருந்து 7 பேரும் பல ஆசிரியர்களும் அரசாங்க உயர் பதவியிலும் வைத்தியர்களாகவும் இருந்த பலரும் கலந்து கொண்டது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. யாழ். கல்லூரிகளிலிருந்து மருத்துவத் துறைக்கு ஆண்டுதோறும் பல மாணவர்கள் செல்வதற்கு காரணமாக இருந்த பெரும்பாலான உயிரியல் கற்பித்த ஆசிரியர்கள் கிறிஸ்தவக் கல்லூரிப் பழைய மாணவர்கள் என்பதில் பெருமையாக இருக்கிறது.



இவர்களில் சிலர் இங்கு ஒன்ராறியோவில் வாழ்கின்றனர். இவர்களுள் குறிப்பிடக்கூடிய ஒருவர் பரியோவான் கல்லூரியில் கற்பித்த திரு. M. C. பிரான்சிஸ். இவர் பாடநூல்கள் எழுதியவர். பல வைத்தியர்களை உருவாக்கியவர். தற்போது முதுமையிலும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு வோட்டாலுப் பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் வாழ்ந்து வருகிறார். இவரது மைத்துனர் இப்பல்கலைக்கழக இளைப்பாறிய பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நான் விடுதியில் சேர்ந்த இரண்டாம் வருடம் எமது விடுதிப் பாரதி மன்றச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். அப்போது பல பிரபல பேச்சாளர்களை அங்கு அழைத்து வந்து பேச வைத்தோம். இவர்களுள் கே.ஏ.மதியழகன், திருமதி விஜயலக்சுமி, அன்பழகன், எழுத்தாளர் சுந்தர ராமசாமி, புலவர் இளங்கீரன் போன்றோரை அழைத்து வந்தேன். மூன்றாம் ஆண்டு படிக்கும்போது எமது இயற்கை வரலாற்றுச் சங்கத்தின் இணைப்புச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டேன். பெரும்பாலும் இப்பதவிகள் யாவும் தேர்தல் அடிப்படையில் உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டன. சுற்றுலாக்கள் ஒழுங்கு செய்வது, உயிரியல் துறைப் பேராசிரியர்களை அழைத்து வந்து கூட்டங்கள் கூட்டுவது, மாணவர்களின் பட்டிமன்றங்கள், பேச்சுப் போட்டிகள் நடத்துவது போன்ற விடயங்களில் ஈடுபட்டேன். அப்போது கொழும்பு தேஸ்ரன் கல்லூரியில் இன்டமீடியட் (இங்கிலாந்து) படித்த ஆசிரியர் கனகரத்தினம் என்பவர் பட்டப்படிப்புக்காக அங்கு எமது விடுதியிலிருந்து படித்தவர். அவர் எனக்குப் பல துறைகளிலும் புத்திமதி கூறுவார். இறுதி ஆண்டு படிப்பில் கூடுதல் கவனம் செலுத்துவது முக்கியம். நீ இவ்வாறு விடுதியிலும் கல்லூரியிலும் பதவிகள் வகித்துக் கொண்டு பட்டத்தைக் கோட்டை விட வேண்டாம் எனக் கூறினார். இதனால் நான் ஒவ்வொரு நாளும் படிக்கும் பாடங்களை அன்றே படித்துக் குறிப்புகள் எடுத்துக் கொள்வேன். அதிகாலையில் 4 மணிக்கு எழுந்திருந்து படித்தேன். காலையில் படிப்பது யாவும் மூளையில் இலகுவாக பதிந்து கொள்ளும். தற்கால மாணவர்கள் இரவிரவாகப் படிக்கின்றனர். நல்ல தூக்கத்தின் பின்னர் எழுப்பிப் படிக்கும்போது சுற்றாடல் அமைதியாகவும் படிப்புக்கு ஏற்றதாகவும் இருக்கும். எனது இறுதிப் பரீட்சைக்கு ஒரு மாதத்துக்கு முன்னரே வெளி வேலைகள், சங்க வேலைகள் யாவையும் நிறுத்தி விட்டு படிப்பில் மட்டும் கவனம் செலுத்தினேன். அத்துடன் எனது விரிவுரையாளர்களும் கேள்விகள் வரக் கூடிய முக்கிய பகுதிகளைக் கூறி அதில் கவனம் செலுத்துமாறு கூறினர். பரீட்சையில் சிறப்பாகச் செய்வதற்கு இது உதவியாக இருந்தது. எமது வகுப்பில் என்னோடு இன்னும் இருவருக்கு முதலாம் வகுப்பில் சித்தி கிடைக்குமென விரிவுரையாளர் எதிர்பார்த்தனர். ஆனால் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. சொற்ப புள்ளிகளில் தவறியது எனப் பின்னால் அறிந்தேன். இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவில் - Upper 2nd class) கிடைத்தது.

நான் பரீட்சை எடுத்தபோது 103 இலங்கை மாணவர்கள் வெவ்வேறு பாடங்களில் பரீட்சை எழுதினர். அதில் 4 பேர் மட்டுமே எல்லாப் பாடங்களிலும் சித்தி பெற்றனர். பலர் தமிழிலிலும் ஆங்கிலத்திலும் சித்தி அடையவில்லை. இதனால் திரும்பவும் பரீட்சை அப்பாடங்களில் மட்டும் செப்டெம்பர் மாதத்தில் எடுத்து நிறைவு செய்தனர். அந்நாட்களில் ஏப்ரல், மே மாதங்களில் பரீட்சை தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் நடைபெற்றன. இன்றும் அவ்வாறு நடைபெறும் என நினைக்கிறேன். முதலில் எழுத்துப் பரீட்சை பின்னர் செயல்முறை பரீட்சை நடைபெறும். இவ்வேளையில் பெரும்பாலான மாணவர்கள் வீடு சென்று விடுவர். தங்கியுள்ள சில மாணவர்கள் வெளியிலுள்ள கடைகளில் தான் சாப்பிட வேண்டும். தாம்பரம் ரெயில் நிலையத்தில் ஒரு சாப்பாட்டுக் கடை இருந்தது. அங்கு சுவையான பலகாரங்கள் மலிவாகக் கிடைத்தன. வழக்கமான நாட்களில் எம்மில் சிலர் மாலை நேரத்தில் அங்கு சென்று கோப்பி, வடை, போண்டா முதலியன சாப்பிடுவது வழக்கம். கோடை காலத்தில் குடிநீரில் கல்சியம் கூடுதலாக இருக்கும். அவ்வேளை சலக்கடுப்பு ஏற்படும். இதனால் எலுமிச்சைச் சாறு தேநீர், கோப்பிக்குப் பதிலாக விடுதி உணவுச் சாலையில் தருவர். மாணவரின் உடல் நலத்தில் கல்லூரி கவனமாக இருந்தது. வளாகத்தில் ஒரு நிந்தர வைத்தியர் அமர்த்தப்பட்டிருந்தார். மாணவர் மருந்துக்கு மட்டும் பணம் செலுத்த வேண்டும். இவ்வாறு கல்லூரி வாழ்க்கை சிறப்பாக அமைந்திருந்தது.

தொடரும்..


யோகா சோதிடம்



● கிரகப்பொருத்தம் பார்த்தல் ● சுபமுகூர்த்தம் கணித்தல்
● பலன் பார்த்தல் ● சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# நேர்காணல் - எழுத்தாளர் கே.எஸ்.சுதாகர்

**சந்திப்பு: குரு அரவிந்தன்**

*எழுத்தாளர் கே. எஸ். சுதாகர் அவுஸ்ரேலியாவில் இருந்து சென்ற மாதம் கனடா வந்திருந்தார். அவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் 'எங்கே போகின்றோம்', 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' என்ற இரண்டு சிறுகதைத் தொகுப்புக்களை இதுவரை வெளியிட்டிருக்கின்றார். உதயன் பத்திரிகையில் தொடராகக் குறுநாவல் ஒன்றும் எழுதி இருக்கின்றார். அவருடனான நேர்காணலில் கலை, இலக்கியம் பற்றிக் கிடைத்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.*

*_ குரு அரவிந்தன்*

குரு அரவிந்தன்: வணக்கம் கே. எஸ். சுதாகர், அவுஸ்ரேலியாவில் இருந்து கனடா வந்திருக்கிறீர்கள். தமிழ் இலக்கியத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாக ஏதாவது இலக்கியச் சந்திப்புக்களை இங்கே ஏற்படுத்தி இருக்கிறீர்களா?

கே. எஸ். சுதாகர்: நண்பர்கள்: வ.ந.கிரிதரன், பாலமுரளி (கடல்புத்திரன்), எல்லாளன் ராஜசிங்கம், தேவகாந்தன் என்போரை கிரிதரனின் முயற்சியால் சந்தித்தேன். மற்றும் மூத்த எழுத்தாளர் கதிர்.பாலசுந்தரம், 'வெற்றிமணி' ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் (ஜேர்மனி), இன்று தங்களையும் சந்தித்திருக்கிறேன். ரொறன்ரோவில் பலரும் இருந்ததனால், போக்குவரத்துக் காரணமாக பிறம்ரனில் தங்கியிருந்த என்னால் சந்திக்க முடியவில்லை. பலரைச் சந்திக்கும் ஆர்வம் இருந்தும் முடியவில்லை. தொலைபேசி மூலம் நண்பர் அகில் நீண்ட நேரம் என்னுடன் உரையாடியிருந்தார்.

குரு அரவிந்தன்: அவுஸ்ரேலியாவில் இருந்து வெளிவரும் தமிழ் பத்திரிகைகள், இதழ்களின் பெயர்களைக் குறிப்பிட முடியுமா?

கே. எஸ். சுதாகர்: மெல்பேர்ணில் இருந்து 'எதிரொலி' என்ற பத்திரிகை, 'அக்கினிக் குஞ்சு' என்ற இணையமும் வெளிவருகின்றன. அதேபோல் சிட்னியில் இருந்து 'உதயசூரியன்', 'தமிழ் ஓசை', 'தென்றல்' என்ற சஞ்சிகைகளும், 'தமிழ் முரசு' என்ற இணையமும் வெளிவருகின்றன.

குரு அரவிந்தன்: ஏனைய புலம்பெயர் நாடுகளைப் போல வாசிப்புப் பழக்கம் தற்போது அங்கும் குறைந்து கொண்டு வருகிறதா?

கே. எஸ். சுதாகர்: வாசிப்புப் பழக்கம் இங்கும் குறைந்துகொண்டுதான் வருகின்றது. 'மெல்பேர்ண் வாசகர் வட்டம்' என்றொரு அமைப்பு கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றது. இதில் காலத்துக்குக் காலம் பலரும் இணைந்து கொண்டு வாசிப்புப் பழக்கத்தை ஊக்கி வருகின்றனர். சிட்னியில் 'தமிழ் அறிவகம்' என்னும் நூல் நிலையம் வாரத்தில் நான்கு நாட்கள் முழுநேரமாகத் தொழிற்படுகின்றது.

குரு அரவிந்தன்: கனடாவிலும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவுடன் தற்போது அடுத்த தலைமுறையினருக்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கின்றோம். அவுஸ்ரேலியாவில் உள்ள தமிழ் வானொலிகள், தொலைக்காட்சிகள் தமிழ் வளர்ப்பதில் கொண்டுள்ள ஈடுபாடு பற்றிச் சொல்லுங்கள்.

கே. எஸ். சுதாகர்: இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது பல மொழிகளில் இயங்கி வரும் SBS (Special Broadcasting Service) வானொலி. இது பிரதிவாரமும் ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் ஒரு மணித்தியால சேவையை வழங்கி வருகின்றது. கடுகு சிறிது காரம் பெரிது என்பதுபோல் பலவிதமான நிகழ்ச்சிகளை இவ்வானொலி தருகின்றது. தவிரவும் சிட்னியில் இருந்து 24 மணி நேரம் இயங்கும் ATBC (Australian Tamil Broad casting Corporation), இன்பத்தமிழ் வானொலி, தமிழ் முழக்கம், டிஜிட்டல் மூலம் இயங்கும் 'தாயகம்' என்பவற்றையும் குறிப்பிடலாம். இவற்றைத்தவிர ஒவ்வொரு மாநிலங்களிலும் பல தமிழ் வானொலிகள் இயங்கி வருகின்றன.

குரு அரவிந்தன்: தாய் மொழியாம் தமிழ் மொழி, அந்தத் தமிழ் மொழியைக் கற்பிப்பதில் அங்குள்ள பாடசாலைகளின் பங்களிப்புப் பற்றிக் குறிப்பிடுங்கள்.

கே. எஸ். சுதாகர்: கனடா போன்று அவுஸ்திரேலியாவும் ஒரு பல்கலாச்சார நாடாக இருப்பதால், அரசு பல்வேறு வழிகளில் பிற மொழிகளும் வளர உதவி புரிகின்றது. அவுஸ்திரேலியாவில் சிட்னி (நியூ சவுத் வேல்ஸ் மாநிலம்), மெல்பேர்ண் (விக்டோரியா மாநிலம்), பிறிஸ்பேர்ன் (குயீன்ஸ்லாந்து) பள்ளிகள் தமிழ் கற்பிப்பதில் முன்னணியில் நிற்கின்றன. முதல் தமிழ்ப்பள்ளியாக 1977ஆம் ஆண்டு 'பாலர் மலர் தமிழ்ப் பள்ளி' சிட்னியில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையிலிருந்து பலர் புலம்பெயர்ந்ததன் பின்னர், 1987 ஆம் ஆண்டு சிட்னியில் ஹோம்புஸ் என்ற இடத்தில் தமிழ்க்கல்வி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 12இற்கும் மேற்பட்ட தமிழ்ப்பள்ளிகள் அங்கே உள்ளன.

மெல்பேர்ணில் 1979ஆம் ஆண்டு ஈழம் தமிழ்க்கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்ப்பாடசாலை இன்று பல கிளைகளுடன் தமிழ் கற்பிப்பதில் உதவி புரிகின்றது. மற்றும் மாவை நித்தியானந்தனால் 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட 'பாரதி பள்ளி' இன்று பல கிளைகளுடன் விரிவடைந்திருக்கின்றது.



குயீன்ஸ்லாந்தில் 'பிறிஸ்பேர்ண் தாய்த் தமிழ்ப்பள்ளி', 'பிறிஸ்பேர்ண் தமிழ்ப் பாடசாலை' என்பனவும் மற்றும் தெற்கு அவுஸ்திரேலியாவில் அடிலையிட் என்னுமிடத்திலும், மேற்கு அவுஸ்திரேலியாவில் பேர்த் என்னுமிடத்திலும், வடக்கில் டார்வினிலும், தலைநகர் கன்பராவிலும் தமிழ்ப்பள்ளிகள் இயங்கி வருகின்றன.

குரு அரவிந்தன்: மெல்பேர்ணிலா அல்லது சிட்னியிலா தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட தமிழர் அதிகம் இருக்கின்றனர்?

கே. எஸ். சுதாகர்: அவுஸ்திரேலியாவில் ஏனைய மாநிலங்களைக் காட்டிலும் மெல்பேர்ணிலும் சிட்னியிலும் கூடுதலான தமிழர் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டுள்ளனர். குறிப்பிட்டுச் சொல்வதானால் மெல்பேர்ணில் சற்று அதிகம் என்பேன்.

குரு அரவிந்தன்: நூல் வடிவில் வெளிவந்த உங்களுடைய ஆக்கங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்.

கே. எஸ். சுதாகர்: இரண்டு சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. 'எங்கே போகின்றோம்' என்ற சிறுகதைத் தொகுதி அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்க வெளியீடாகவும், 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்' சிறுகதைத்தொகுதி 'அக்கினிக்குஞ்சு' வெளியீடாகவும் வந்திருக்கின்றன.

குரு அரவிந்தன்: உங்களுடைய சிறுகதைகளைப் 'பதிவுகள்' இணையத்திலும் வாசித்திருக்கின்றேன். ஆக்க இலக்கியத்தில் கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், அறிவியற்கட்டுரைகள் போன்றவற்றில் எதில் உங்களுக்கு ஆர்வம் அதிகம்? எதை விரும்பி எழுதுகிறீர்கள்?

கே. எஸ். சுதாகர்: சிறுகதை எழுதுவதில் தான் ஆர்வம் அதிகம். நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகள் எழுதியிருக்கின்றேன். தவிர மூன்று குறுநாவல்கள், பல கட்டுரைகள், சில புனைவிலக்கியக் கட்டுரைகள் எழுதியிருக்கின்றேன். கவிதை ஒன்றிரண்டு எழுதியிருந்தேன். ஆர்வம் இல்லை.

குரு அரவிந்தன்: கனடியத் தமிழருக்கும், அவுஸ்ரேலியத் தமிழருக்கும் இடையே என்ன ஒற்றுமையைக் காண்கிறீர்கள்?

கே. எஸ். சுதாகர்: பிரிந்து நின்று குழுக்களாகச் செயற்பட்டு தமிழ் வளர்ப்பதில், இரண்டு நாட்டிலும் உள்ளோர் சளைத்தவர்கள் அல்ல என்பதுதான் நான் கண்ட ஒற்றுமை.

குரு அரவிந்தன்: நல்லதொரு பதிலைத் தந்திருக்கிறீர்கள், ஒன்றுபடாமல் தமிழரால் எதையுமே சாதிக்க முடியாது என்பதைத் தாயகத்திற்குச் சென்றபோது அங்கேயும் அவதானித்தேன். அவுஸ்ரேலியாவில் உள்ள அடுத்த தலைமுறையினர் தமிழ் மொழியைத் தொடருவார்களா, அல்லது கைவிட்டு விடுவார்களா?

கே. எஸ். சுதாகர்: தொடர வேண்டும் என்பதில் தான் பலரும் அக்கறை காட்டி வருகின்றோம். தராசு ஒருபுறம் சரிந்திருப்பதைத்தான் காணக்கூடியதாக உள்ளது.


குரு அரவிந்தன்: இதே நிலைதான் கனடாவிலும் இருக்கிறது. எங்களால் முடிந்தளவு நாங்களும் தமிழ் வளர்ப்பதில் கடுமையாக ஈடுபட்டிருக்கின்றோம். அதுசரி, பிறந்த மண்ணுக்குச் சென்றீர்களா, அங்கே என்ன மாற்றங்களை அவதானித்தீர்கள்?

கே. எஸ். சுதாகர்: பிறந்த மண்ணை விட்டுப் புறப்பட்டு இருபத்தி நான்கு வருடங்களாகிவிட்டன. போக வேண்டிய நேரங்களிலெல்லாம் போக முடியாத மனக்கவலை. போய்ப் பார்க்க வேண்டும் என்ற ஆசை.

குரு அரவிந்தன்: தமிழ் மீது பற்றுக் கொண்ட ஒரு எழுத்தாளன் என்ற வகையில் கனடிய இலக்கிய ஆர்வலர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

கே. எஸ். சுதாகர்: கனடிய இலக்கிய ஆர்வலர்களுக்கு மட்டும் என்றல்ல, பலருக்கும் தான், நல்ல இலக்கியங்களைத் தூக்கிப் பிடியுங்கள். குழுக்களாகப் பிரிந்து நின்றாலும் மற்றவர்களது இலக்கியத்திற்கும் மதிப்புக் கொடுங்கள். நாம் எல்லோருமே மொழி வளர்க்கக் கடமைப்பட்டவர்கள்.

குரு அரவிந்தன்: உங்கள் பொன்னான நேரத்தை விளம்பரம் வாசகர்களுக்காகச் செலவிட்டுத் தங்களைப் பற்றியும், அவுஸ்ரேலியாவின் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றியும் அறியத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங்கள் இலக்கிய முயற்சியும், வளர்ச்சியும் மேலும் சிறப்படைய வாழ்த்துகின்றோம். நன்றி.




## BASEMENT FOR RENT

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.
**647.787.3784 / 905.294.4382**

**KINGSTON & MCCOWAN**
2 bedroom bsmt for rent. 1 Parking. laundry, cable, internet. Female students preferred. Avail. September 01, 2019
**647.702.7346 / 647.708.2300**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom walkout bsmt for rent. 1 parking laundry, cable, internet, utilities. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

**MIDLAND & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance. No Parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.835.2003**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, shop, hwy 401. Avail. August 15, 2019.
தொடர்புகளுக்கு: **416.917.7320**

**WESTNEY & ROSSLAND**
2 Bedroom bsmt for rent. Close to All facilities. Avail. immediately.
**416.455.0008 / 416.258.7156**

**EGLINTON & BELLAMY**
2 Bedroom basement with separate Hall, Kitchen and entrance available for rent. Close to all amenities. Avail. Sept. 01, 2019.
**416.671.0085/647.960.6427**

**MORNINGSIDE & NIGHT STAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, utilities. Single preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.686.8590**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmts போன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## BASEMENT FOR RENT

**MARKHAM & LAWRENCE**
2 bedroom furnished basement for rent. Near progress campus. Sep. entrance.
Suitable for family. No parking.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.731.6006**

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
2 Rooms for rent in a condo. parking, cable, internet, utilities. Close to Mall & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.449.6818**

**KENNEDY & ELLESMERE**
1 Room for rent. Female student Preferred. Close to all facilities. Available Immediately
**647.781.9127 / 647.906.8305**

**NEILSON & SHEPPARD**
1 Large room for rent. Couple or small family preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.529.7320**

**MORNINGSIDE & FINCH**
Bedroom room for rent. Women only. Close to all facilities.
**Contact : (416) 669-9254**
**Or email: vijitha14@hotmail.ca**

**WARDEN & FINCH**
1 Room for rent in a condo. Internet. female student only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

**BRIMLEY & ELLESMERE**
Room for rent. Girls only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.906.5013**

**KENNEDY & EGLINTON**
1 Room for rent in an apartment. Close to Kennedy subway, Yogas super market, new Kalyani Takeout. Avail. August 20, 2019.
தொடர்புகளுக்கு: **647.763.2760**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom room for rent. Parking, laundry. Males preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom room for rent (Upstairs). Male Preferred. No smoking /No Drinking; Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.417.2528**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD (Sewells)**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable.
பெண்கள் விரும்பத்தக்கது.
No parking. Close to all facilities.
Avail. immediately.
**416.688.8364 / 416.754.2002**

## BASEMENT FOR RENT

**9TH LINE & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.616.7840**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
House for rent. 3 & 2 bedroom 2 1/2 washroom Close to all facilities. Available Immediately
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**MARKHAM & DENISON**
4 bedroom full house for rent. Close to all facilities. Avail. September 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.294.1966**

**PHARMACY & FINCH**
3 bedroom full house for rent. Unlimited internet. Family preferred. Close to all facilities. Avail. August 15, 2019.
**416.201.1222 / 647.261.0216**

**TAUNTON RD & WHITES RD. N**
3 Bedrooms Townhouse for Rent in Pickering. 2 Parking & 21/2 wash rooms. Close to all facilities
**647. 893.1449 / 647. 404 .2586**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & STEELES**
1 bedroom for rent. Sep. entrance, parking, laundry, cable, internet, Close to TTC, YRT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.727.4545**

## ROOM FOR RENT

**MCCOWAN & DENISON**
1 Room to share with one indian male. Sep. entrance, parking. Single preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.961.2355**

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
4 bedrooms house for rent. Close to all facilities. Avail. September 01, 2019.

## ROOM FOR RENT

**MCCOWAN & 14TH AVENUE**
1 Room for rent. Share. Ladies only. Close to all facilities. Avail. September 01, 2019
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## CONDO FOR RENT

**DUNDAS ET & RIVER STREET**
1 bedroom plus den brand new condo for rent. No parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2019.
தொடர்புகளுக்கு: **416.993.4951**

மேலும் பக்கங்கள்
29, 30, 31, 32, 33

## APARTMENT FOR RENT

**MARKHAM & EGLINTON**
2 Bedrooms apartment இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**647.272.3704 / 647.367.7057**

## ROOM FOR RENT

**TOWNLINE & CONLIN (OSHAWA)**
3 Rooms available for rent in main floor. parking, laundry, cable, internet, utilities. Single only. Close to oshawa university & all facilities. Avail. September 01, 2019.
**647.448.3836 / 416.876.9630**

## ROOM FOR RENT

***WARDEN & FINCH***
1 Bedroom for rent in a condo apartment. Laundry, cable, utilities. Ladies / Female student only. Close to Mall, TTC, Hospital, DRS Office. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.499.3353**
***Please call 08:00am - 07:00pm***

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**
Master bedroom with washroom for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.544.6105**

## ROOM FOR RENT

**MARKHAM & HWY 7**
2 Rooms for rent in main floor. parking, laundry, internet. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.6044**

## HOUSE FOR RENT

**MARKHAM & 14TH AVE**
3 bedrooms & 2 1/2 washroom house for rent. Rent + utilities. Parking, laundry. Family preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **(416) 884-4629**

## HOUSE FOR RENT

**ELLESMERE & ORTON PARK**
3 Bedroom house for rent. Parking, laundry, utilities. Close to all facilities. Avail. September 01, 2019.
**647.998.0181 / 905.471.2444**

## HOUSE FOR RENT

**MORNINGVIEW & NIGHTSTAR**
3 bedrooms house for rent.
Rent+ utilities 60%. Parking, laundry. Family preferred.
Close to all facilities.
Avail. September 01, 2019.
தொடர்புகளுக்கு: **647.763.0491**

## HOUSE FOR SALE

**TORONTO**
**MIDLAND & LAWRENCE**
2 Bedroom condo apartment with one parking for sale $299,000.00

**AJAX**
**SALEM & BAYLY**
12 year old, 2 storey, 3 Bedroom bricktown house with finished basement & attached garage for sale $499, 900.00

**416.917.0557**
**Rajah Masillamany**
**(HomeLife / Future Realty Inc.)**

மேலும் பக்கங்கள்
28, 30, 31, 32, 33

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**
**House, Condo, Basement**
**வாடகைக்கு உள்ளது**
**அழையுங்கள்.**
**647.861.8240**

**உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு**

வீடுகள், கொண்டோக்கள்
விற்க, வாங்க,
வாடகைக்கு விட,
வாடகைக்கு பெற்றுக்கொள்ள
அழையுங்கள்
**Jey 416-816-9011**

## SALE / RENT

Houses Available for **Sale & Rent.**
Please contact
Kannan Kankesu:
**416.834.4200**

## RENT / LEASE

***ROOM RENT, BASEMENT RENT, HOUSE RENT.***
***Visit to :***
**www.vlambaram.com**
Classified section Page 28 and up

## இலவச திருமணசேவை

இலவச திருமண சேவைக்கு
தொடர்பு கொள்ளவும்
**905.607.3896**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**GTA Square** இல் அமைந்துள்ள Fancy Storeஇல் Saleஇல் அனுபவமுள்ள பெண்கள் வேலைக்கு தேவை.
Full Time / Part Time
தொடர்புகளுக்கு: **647.331.3131**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
Avail. immediately.
தொடர்புகளுக்கு:
**647.296.7932**

## மணமகன் தேவை

91ஆம் ஆண்டு பிறந்த (5' 5")
Business Systems Analyst ஆக பணிபுரியும், Registration முறிவடைந்த கத்தோலிக்க, கனடாவில் பட்டம் பெற்ற மணமகளுக்கு கனடாவில் மணமகன் தேவை.
தொடர்புகளுக்கு:
**647.456.1943** (After 6:00pm)

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.
**416.890.6497**
**srisai2912@hotmail.com**

## BASEMENT FOR RENT

**FINCH & TAPSCOTT**
3 Bedrooms & 2 new full washrooms bsmt for rent. 1 car parking.
Rent $1600+40% utilities. No smoke, Alcohol & pets. Avail. immediately.
**MARKHAM & DENISON**
2 brand new Bedroom & 1 washroom bsmt for rent. Sep. entrance. No parking. laundry. Rent $1200+40% utilities. No smoke, Alcohol & pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.2148 / 647.985.6101**

## HOUSE FOR RENT

**BROCK & KINGSTON**
4 Bedroom & 3 washroom house for rent. Parking. laundry, internet. Rent +40% utilities. Close to All facilities.
Avail.September 01, 2019
தொடர்புகளுக்கு: **647.344.1198**

## HOUSE / BASEMENT FOR RENT

ஒரு வீட்டில் 3 அறைகள் கொண்ட மேல் மாடியும், 2 அறைகள் கொண்ட Basement ம் தனித்தனியாக வாடகைக்கு உண்டு.
Couple or Family perferred. Avail. immediately.
**647.773.7086 / 647.570.5867**

## MEDICAL OFFICE SPACE FOR LEASE

**KENNEDY & EGLINTON** (Scarborough)
- Approx. 1000 sq. ft of medical office space.
- Lease per month : $ 2,500 plus HST and hydro .
- 2 Months free rent. • Free parking. • Pharmacy on site.
- 5 Minutes walk to Kennedy subway station.

For more details please contact :
***laleta @ 416. 399 .8417 or email: girlie_021@hotmail.com***

## AZ DRIVER WANTED

Great opportunity come home everyday. 2 years experience. Start In the evening at Ajax Ontario. You Will get **TOP PAY**
தொடர்புகளுக்கு: **416.825.5440**

## வேலைக்கு ஆட்கள் தேவை

NIKKO FOODS INC. (**MARKHAM & MCNICOLL)**
இறைச்சி, மீன் வெட்டும் வேலைக்கு ஆள் தேவை.
Full Time / Part Time
தொடர்புகளுக்கு: **416.574.7370**
**83 Dynamic Drive, Unite (1-6) Scarborough, ON, M1V 4C8**

## DISHWASHER / CLEANING

**Thai Restaurant in Richmond Hill**
Full time permanent ( **Bayview & Major Mac** )
Working 11:00am to 3:00pm & 5:00pm to 10:00pm
Please call: **Ken at 647-298-0939** or
**email resume to : info@thaibasil.ca**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

I am working with a group of students who are looking to rent rooms , house or basement apartments in Scarborough and surrounding area.
உங்களது rooms , house or basement இனை சட்டரீதியாக University / College Students இற்கு உடனடியாக வாடகைக்கு கொடுத்திட
***HARI SANTHIRARAJAH - 647.262.8490***
HomeLife Future Realty Inc. Brokerage Inc.

## வாகன போக்குவரத்து

**Western** பல்கலைக்கழகம், விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி சுற்றாடல், மற்றும் குறுகிய தூரம்.

தொடர்புகளுக்கு: **416.880.5952**

## தீராத மூட்டுவலியா?

தீராத மூட்டுவலி, முழங்கால் வலி, எலும்பு தேய்மானம் போன்ற பிரச்சனையில் இருந்து விடுபட தொடர்பு கொள்ளவும்.

சேர்ந்து பயன் பெறுவோம்.

SAAMY: **647.708.3444**

## வேலைக்கு ஆள் தேவை

கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபத்தில் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:

ஆலயம்: **416.321.6104** - காலை

காந்தி: **647.892.3551** - மாலை

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.

Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .

For more info call : **647.274.0300**

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.

பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.

Junk Removal

Call Rajan: **647.524.1320**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு:

பிறேம் - **647.835.5244**

## பராமரிப்பாளர் தேவை

**SCARBOROUGH**வில் வாழும் Wheelchair இல் இருக்கும் வயதான பெண்மணி ஒருவரை பராமரிக்க முழு நேர (Full Time) பெண் பராமரிப்பாளர் தேவை. PSW தகுதி அவசியமில்லை.

தொடர்புகளுக்கு:

**437.223.7767**

## HELP WANTED

**MIDDLEFIELD & FINCH**

பகுதியில் உணவகம் ஒன்றிற்கு Cashier & Kitchen helper தேவை.

நேரில் வந்து Apply செய்யவும்.

தொடர்புகளுக்கு:

**416.318.9866**

## விடுமுறையை கழிக்க

யாழ்ப்பாணம் செல்லும் உங்களுக்கு புத்தம் புதிய அழகிய மகால்.

தொடர்புகளுக்கு: **416.994.7776**

**Jaffna: 94(76)2499979**

## TAILORING

**SCARBOROUGH**இல் Saree Blouses $29க்கு தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

**வசதியாக வாழ வேண்டும் என்று உழைப்பதை விட வறுமை இல்லாமல் வாழ வேண்டும் என்று உழைப்பதே சிறந்தது.**

## HOME DAY CARE

9 வருட Day care அனுபவம் கொண்ட பராமரிப்பாளரால் நடத்தப்படும் Home daycare இல் 2 வயது தொடக்கம் 4 வயது வரையான பிள்ளைகளை விட விரும்பும் பெற்றோர் தொடர்புகொள்ள:

**647.807.1368**

## கொழும்பில் வீடு வாடகைக்கு உண்டு

கொழும்பில் மூன்று மாடிகளைக் கொண்ட சொகுசான வீடு வெளிநாட்டில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளிற்கு மட்டும் அனைத்து வசதிகளையும் கொண்ட (ஏசி, சமையலறை, சொகுசான குளியலறை மற்றும் படுக்கையறை) அழகிய வீடு வாடகைக்கு விடப்படும். இங்கு உங்களின் பாதுகாப்பிற்கு ஏற்ற வகையில் CCTV Camera 24 hours அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது அருகாமையில் கடை வசதி மற்றும் போக்குவரத்து வசதிகளும் அமையப்பெற்ற அழகிய இடம்.

வாடகைக் கட்டணங்கள் : நாள் வாடகை அல்லது மாதாந்த வாடகைகளில் விடப்படும்

**Contact Maha:- 0041.77.960.6650**

## வேலைக்கு ஆட்கள் தேவை

Scarboroughவில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cook & Kitchen Helper போன்ற வேலைகளுக்கு ஆட்கள் தேவை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **647.895.3350**

## BUS SERVICE

**RAINBOW CHARTER SERVICE INC.**

**(SCARBOROUGH)**

உங்கள் பயண தேவைகள் எதுவானாலும் அழையுங்கள்.

Please call or text me : **416.451.0055**

**info@rainbowcharterservice.ca**

**வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**

**Pay top dollars.**

**Contact: 416.835.3475**

## ARE YOU LOOKING FOR WORK ?

- Machine Operator/Brake press, Spray Gun Painter • Accountant AP/AR , Office Admin ,
- General Laborers / window assemblers/Food,
- Forklift Operator, Chemical Lab Technician
- Driver (G, AZ, DZ), • Mechanic, , Electrician
- Sewing machine (male/female), Construction
- All in Mississauga, Toronto, Vaughan, Brampton, Markham Area

**416.514.0733-Manjit Or Email manjitglobalteam@gmail.com**

## வேலை வாய்ப்பு / HELP WANTED

**தமிழ் உணவகம்** ( MCCOWAN & 16TH AVE )

**CUSTOMER SERVICE & KITCHEN HELP**

FULL TIME & PART TIME. TRAINING PROVIDED

Call: **647.802.7021**

## KITCHEN HELPER WANTED

**YOUNG & LAWRENCE**இல் அமைந்துள்ள இத்தாலியன் உணவகத்திற்கு சமயல் உதவியாளர் தேவை. அனுபவமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**416.835.2943**

# PTR DOORS & WINDOWS

OVER 14 YEARS EXPERIENCE

RESIDENTIAL & COMMERCIAL




- Custom Doors & Windows
- Front & Patio Door
- Replacement (Doors & Windows)
- California Shutters & Blinds
- Separate Entrance Door for Basement
- Replace Caulking
- Painting
- Pot Lights Installation

FREE ESTIMATE! Call Today

24 hours Emergency Service

We Fix Broken Glass Windows & Doors

RAVI : 416-825-9482   KANNA : 647-297-7815


email : ptrrenovation@gmail.com



# சொர்க்கம் திருமணசேவை



- US வாழும் 26 வயதுடைய Engineer ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- 39 வயதுடைய அவுஸ்ரேலியாவில் வாழும் மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் தேடுகின்றனர்.
- 31 வயதுடைய கனடாவில் வாழும் DR ஆக பணிபுரியும் மணமகளுக்கு கனடாவில் அல்லது US இல் தகுந்த மணமகனை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 34 வயதுடைய Engineer ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 31 வயதுடைய Lawyerஆகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 28 வயதுடைய மணமகனுக்கு யாழ்ப்பாணத்தில் வாழும் தகுந்த மணமகளை தேடுகின்றோம்.



**இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்தும் நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்**

**416.666.1855 / 437.772.8129**

**www.sorkhammatrimony.com**



# THILLAI ENTERPRISE INC.

## GRINDING MILL

Grain & Spice Grinding mill

Grains, Spices & Dhal



**உங்கள் அனைத்து தேவைகளுக்கும் ஏற்ற விதத்தில் தானியங்கள் மாவாக்கி தரப்படும்**



**50 Weybright Ct unit 36, Scarborough, ON M1S 5A8**

**TEL: 647.763.2914**

**Store Open Hours:**
**Fri - Sun 9:00 am to 7:00pm**



# குழந்தைகள் பராமரிப்பாளர் தேவை

**HWY 7 & HWY 50**

**Need a Baby sitter**

**Monday to Friday**

**2:00 to 10:00pm**

Cooking, Laundry & Clening செய்ய வேண்டும்.

For more detail call :

**905.449.5859**

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

***Scarborough – McCowan / Lawrence – Detached-Bsmt**
(2Brm, 1Bath) 2 Brm Basement with Separate Entrance. 5 Mins Walk To Ttc Bus Takes To Warden Or Kennedy Subway. Rent Includes All Utilities! Close To Scarborough General Hospital & Town Centre. **[Asking $1650/m]**

***Scarborough – Ellesmere Rd / Morrish- Detached- Bsmt**
(1Brm, 1Bath) Room for Rent. Suitable for Students Or Professionals. 5 Mins Walk to U Of T Scarborough, Centennial College, Panam Centre, TTC, Hwy 401. **[Asking $600/m]**

***Stouffville – Hoover Park / York Durham Line– Detached**
(4 Brm, 3 Bath) Bright & Spacious Main Floor. 4 Parking Spaces. Double Garage. Mins To Go Stn & 407 **Asking $2500]**

***Markham – Markham / Steeles - Detached**
(4Brm, 3Bath) Location! Full House. 4 Bedroom Detached Home and 3 Washrooms. Bsmt Unfinished. Walks To Schools, Markham/Steels; Ttc, Ytc, No Frills, Banks, Walmart. 3 Car Parking. **[Asking $2400/m]**

*** Scarborough – Pharmacy / Lawrence – Detached**
(3Brm, 1Bath) A Unique Location! Upper Floor Only. Near Shopping Center. 5 Minutes To 401 & 2 Minutes To Bus Stop. **[Asking $2250/m]**

***Scarborough –Don Mills Rd / Finch Ave -Condo Apt**
(2Brm, 2Bath) An Incredible Views West, North & South From This 35th Floor Suite. All Inclusive Rent! **[Asking$2700/m]**

***Toronto – Yonge / Queen – Condo Apt**
(1Brm, 1Bath) Right At The Heart Of The City. Just Across From Eaton Centre! Never Lived In! Walking Distance Subway/Ttc. Mins To U Of T & Ryerson! **[Asking $2500]**

*** North York – Sheppard / Don Mills – Condo Apt**
(1+1Brm, 2Bath) Brand New Condo! Ready To Move In. Great Location! Close To Subway, Fairview Mall, Tim Horton's , Movie Theatre & Schools. Very Close To 404 & 401. **[Asking $2200/m]**

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீட்டுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புவர்கள்

தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: **416-284-5555**
watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

**Contact: Karu Kandiah: 416-616-7278**
watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# We make it easy for you to be a Landlord!

***OUR SERVICES INCLUDE:***
- *Marketing, listing and showing properties*
- *Answering lease enquiries*
- *Tenant screening, pre-qualifying, negotiating lease and finding the right tenant*
- *Property inspections before and after renting*
- *Handle tenant enquiries*
- *rent collection and deposit to Landlord*
- *Eviction of bad tenants*
- *Scheduling Maintenance and repairs of property*
- *Year end accounting*
- *Renewal of lease*
- *Market value update*

***You can relax while we take care of your investment property!***

**WATSON**
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
**WatsonPM1989@gmail.com**
111 Grangeway Ave. Suit #301
(RBC Building) Toronto, ON M1H 3E9

# தகுதி

## சிறுகதை

- கவி. முருகபாரதி -

கண்ணாடியில் முகம் பார்த்தான் மணி.

இன்று அவனுக்கு நேர்முகத் தேர்வு.

"கேடலோனியா எங்குள்ளது?" - முதல் கேள்வி.

"அது ஸ்பெயின் நாட்டின் வடகிழக்கில் உள்ள தன்னாட்சிப் பகுதி."

"குட்..! அமெரிக்காவைக் கண்டுபிடித்து யார்..?"

"இந்தியா என்று நினைத்து, அமெரிக்க கண்டத்தைக் கண்டுபிடித்தவர் - கொலம் பஸ். அது இந்தியா அல்ல. ஒரு புதிய கண்டம் எனக் கண்டறிந்தவர் - அமெ ரிக்கோ வெஸ்புகி. எனவே, அவர் பெய ரையே, இலத்தீன் மொழியில், பெண்பால் பெயராக்கி, வரைபடத்தில் முதலில் வெளி யிட்டவர் - மார்டின் வால்ட்சிமுல்லர்."

"அபாரம்! தொடர் பாராட்டுகளுக்குப் பின், எழுந்தது அந்தக் கேள்வி. "முத்தன் பள்ளம் எங்கிருக்கிறது?"

"தெரியவில்லை சார்!

"என்ன மணி சார்..? உங்க புதுக்கோட்டை மாவட்டத்தில்தான் இருக்கு. சமீபத்துல, அந்த ஊரைப்பத்தி ஒரு நாவல் கூட வந்ததே..! சரி. புதுக்கோட்டை-னு ஏன் பேர் வந்தது..?"

"சாரி சார். தெரியல."

"உலகத்தையே தெரிஞ்சு வச்சிருக்கீங்க.



ஆனால், உள்ளூர் பற்றித் தெரியல. நீங்க இந்தியப் பிரதமர் கூட ஆகலாம். ஆனால், துணை வட்டாட்சியர் ஆகும் தகுதி இல்லை."

மணிக்கு, தன் முகம் தெரிந்தது... கண் ணாடி இல்லாமலே..!

6-05-2018 தேதியிட்ட "குமுதம்" வார இதழில் வெளியான,

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.


# SIDDHA AYURVEDAM
# சித்த ஆயுர் வேதம்

SL Gvovt. No 10332

**Dr.R. Sivagurunathan**, D.S.M.,(M.Sc., Biophysics)

Siddha Physician, Yoga Therapist, Acutouch & Pranic Healer

No. 54, 3rd Lane, Wellawatte.

**+94.777.301.669** **vaithiyar@gmail.com**

**ONLY WITH APPOINTMENT**

மன அழுத்தம், பலவீனம், பயம், ஆன்மீக குழப்பம், கழுத்துவலி, விறைப்பு, இடுப்பு வலி, எலும்பு விலகல், முழங்கால் வலி, குதி வலி, கை, கால் விரல்களில் வாதவலி, மற்றும் பெண்களின் ஒழுங்கற்ற மாதப்போக்கு, கருக்கட்டாமை, நீண்டகால சிகிச்சைகளாலும் சுகமாகாமல் இருப்பதையிட்ட கவலைப்படாமல் என்னுடன் கலந்துரையாடவும்.

தற்போது வைத்தியர் TORONTOவில் உள்ளார்.

**Whatsapp : +94.777.301.669**

**Call: 647.885.1669**


# EDUCATION


## Review Questions19-16

➢ CHEMISTRY 12

**Show reagents and experimental conditions to synthesize the following compounds from 1-propanol.**

(i) Propene (ii) Propanal

(d) Name the following compound.



## Answer Key : 19-15

➢ ORGANIC CHEMISTRY 12

(a) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene

(b) 1- propanol + $H^+/Cr_2O_7^{2-}$ →Propanal (Distillation)

Or use PCC/ $CH_2Cl_2$ propanal will be only product

(c) 1- propanol + $H^+/Cr_2O_7^{2-}$ →Propanoic acid

(d) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene ;
Propene + $H^+/H_2O$ → 2-proponol

(e) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + HBr → 2-bromo propane

(f) 1- propanol + con. $H_2SO_4$ (160°C) → Propene
Propene + $H^+/H_2O$ → 2-propanol
2-propanol $H^+/Cr_2O_7^{2-}$ → Propanone

➢ DATA MANAGEMNENT

(i) Simplify

$$(2x+3y)^5+(2x-3y)^5$$

In the expansion of $(2x+3y)^5$ every second term is the opposite of every second term of $(2x-3y)^5$. Therefore, the answer will be twice of every odd terms.

$$2\left[(2x)^5+\binom{5}{2}(2x)^3y^2+\binom{5}{4}(2x)^1y^4\right]$$

(ii) Find the 6[th] term of $(3x^2+y)^8$

$$\binom{8}{5}(3x^2)^{8-5}(y^5)$$

(iii) (a) The number of Kevin chooses his friends, $^{12}C_7$

(b) number ways both together $^{12}C_6$

Number of ways without one attend $^{12}C_{11}$

Total number of ways both not attend together $= {}^{12}C_6 + {}^{12}C_{11}$

➢ BIOLOGY 11

Deletion, duplication, inversion and translocation.

Among the 4 types of chromosomal damages, translocation affect more than one chromosome. Translocation occurs when a piece of one chromosome breaks off and is transferred to a new location on another chromosome

➢ PHYSICS 11& 12

(i) For the 2[nd] one, $v_1 = 0$, $v_2 = 12.0$ m/s, $a = 9.8$ m/s$^2$

$$t = \frac{12 - 19.6}{9.8} = 2\,s$$

First ball, t = 4s

Therefore distance fall

$\Delta d = v_1t + \frac{1}{2}at^2$

$\Delta d_1 = 0 + \frac{1}{2} \times 9.8 \times 4^2 = 78.4$m

Second ball, t = 2s

Therefore distance fall $\Delta d = v_1t + \frac{1}{2}at^2$

$\Delta d_2 = 0 + \frac{1}{2} \times 9.8 \times 2^2 = 19.6$m

(ans=78.4m -19.6m = 58.8m)


Answer key 19- 16 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE

# தாவரங்கள்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

தாவரங்களின் செயற்பாடுகளுள் பல மனிதரின் மற்றும் விலங்குகளின் செயற்பாடுகளை ஒத்தனவே என்பதை நிரூபிக்கும் ஆய்வுகளை டாக்டர் போஸ் மேற்கொண்டார். நுரையீரல்கள் இல்லாவிட்டாலும், தாவரங்கள் சுவாசிக்கின்றன. வயிறு இல்லாவிடினும் தாவரங்கள் உணவைச் செரிக்கின்றன. தசைகள் இல்லாவிடினும் அவை பல செயல்களை மேற்கொள்ளுகின்றன. நரம்பு மண்டலம் இல்லாவிட்டாலும் தாவரங்கள் உணர்ச்சித் தூண்டல்களுக்கு உள்ளாகின்றன. இவற்றை நிரூபிப்பதற்கான சோதனைகள் பலவற்றை அவர் நடத்தினார். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஈரப்பதமான இடங்களில் வளரக் கூடிய தொட்டால் சிணுங்கி (Sleepy Plant) செடியினது உணர்ச்சியை நாங்கள் பலரும் கண்டிருக்கிறோம்.

டாக்டர் போஸ் பொதுவாகத் தாவரங்கள் சுருங்குவதைப் பதிவு செய்யும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்தார். அதற்கு 'ஒளியிழை நாடிப்பதிவி' (Optical Pulse Recorder) எனப் பெயர். இக்கருவியின் உதவியோடு தாவரங்களின் உள் செயற்பாடுகளைப் பதிவு செய்ததுடன், பல்லிகள், தவளைகள், ஆமைகள், பழங்கள், காய்கறிகள் தாவரங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைகளுக்கு இடையேயான ஒற்றுமைகளை அவர் விளக்கிக் காட்டினார். தாவரங்கள் மின் அலைகளை உற்பத்தி செய்கின்றன என்பதையும், பிற உயிரினங்களைப் போன்று அவையும் களைப்படைந்து போகின்றன என்பதையும் கண்டறிந்தார்.

அவர் தமது ஆய்வுகளுள் ஒன்றை மேற்கொண்டிருக்கும் போது, இறந்து போகும் தாவரம் ஒன்று வலிமை மிக்க மின்னோட்டத்தை வெளிப்படுத்துவதைக் கண்டறிந்தார். அளவுக்கு அதிகமான கரியமில வாயுவை உட்கொள்ளும்போது தாவரங்களும் மற்ற உயிரினங்களைப் போன்றே இறந்து விடுகின்றன எனப் போஸ் நிரூபித்தார். அதேவேளையில் உயிர்வளியின் உதவியுடன் அவை பிற உயிரினங்களைப் போன்று உயிர் பெற இயலும் என்பதையும் அவர் கண்டுபிடித்தார்.

தாவரங்களின் செயற்பாடுகள், அவற்றின் வளர்ச்சி முறை, அவற்றுள் உள்ள திரவம் மேல் நோக்கிப் பாய்தல் போன்ற பலவும், அவை சுற்றுச் சூழலில் இருந்து பெறும் ஆற்றலின் காரணமாகவே நிகழ்கின்றன என்றும், இந்த ஆற்றலை அவை தம்முள் சேமித்து வைத்துக் கொள்கின்றன என்றும் டாக்டர் போஸ் நிறுவினார். டாக்டர் போஸ் 1918ஆம் ஆண்டு 'கிரெஸ்கோகிராஃப்' (Crescograph) என்னும் கருவி ஒன்றை வடிவமைத்தார். இக்கருவியின் வாயிலாகத்




தாவரங்களின் இயக்கங்களைப் பல்லாயிரம் மடங்கு உருப்பெருக்கத்தில் காண முடிந்தது. மேலும் தாவரங்களில் ஒரு நிமிடத்திற்குள் நிகழும் மாற்றங்களையும் இக்கருவி பதிவு செய்யக்கூடியதாக விளங்கியது. ஒரு சில தாவரங்களைத் தொட்டாலே அவற்றின் வளர்ச்சி தடைப்படுவதாகவும் அவர் கண்டுபிடித்து வெளியிட்டார்.

டாக்டர் போஸ் அவர்களின் சிறப்பு வாய்ந்த ஆய்வுகளையும், கண்டுபிடிப்புகளையும் பற்றிப் புகழ் மிக்க பிரெஞ்சு சிந்தனையாளர் ஹென்றி பெர்க்சன் இவ்வாறு பாராட்டிக் கூறினார்: 'டாக்டர் போஸ் செய்த சோதனைகளும், கண்டுபிடித்த கருவிகளும் ஊமைத் தாவரங்களுக்குப் பேசும் ஆற்றலை வழங்கி உள்ளன.'

தாவரங்களின் விருப்பு வெறுப்புகள் என்ன, அவற்றின் துன்ப துயரங்கள் யாவை, அவை கூற விரும்புவது என்ன, அவற்றுக்கு இன்னலும், இடரும் விளைவிப்பன யாவை, அவற்றிற்கு மகிழ்ச்சி ஊட்டுவன எவை என்பன பற்றிய விவரங்களை எல்லாம் டாக்டர் ஜகதீஷ் சந்திர போஸின் கண்டுபிடிப்புகள் விளக்கிக் கூறின. தாவரங்களின் சுவாசிப்பையும், குரல் ஒலியையும் ஒரு கருவியால் உணரச் செய்யலாம் எனவும், தாவரங்கள் உயிர் வாழ்வன, சுவாசிப்பன எனவும் தமது கண்டுபிடிப்புகள் வாயிலாக டாக்டர் போஸ் அவர்கள் நிரூபித்தார். மலர் ஒன்றைப் பெண் ஒருத்தியின் மீது எறிந்தால், அதிக துன்பம் உண்டாவது பெண்ணுக்கா அல்லது மலருக்கா என ஓர் அறிவியல் அறிஞர் போஸின் ஆய்வுகள் குறித்துப் பேசும்போது வினவினார்.

உலக இயற்பியல் மாநாடு 1900ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்றது. அதில் டாக்டர் போஸ் 'பன்முகத்தன்மை கொண்ட இயற்கையில் அடிப்படை ஒருமைப்பாடு' என்ற தமது ஆய்வுக் கட்டுரையை வாசித்தார். அதனைச் செவிமடுத்த அறிஞர்கள் டாக்டர் போஸின் கருத்துகளைக் கேட்டுத் திகைத்து நின்றனர். 'இயற்பியல் நிகழ்ச்சிகள் ஒரு வரம்புக்குக் கட்டுப்படாதவை. குறிப்பிட்ட எல்லைக்குள் இயற்பியல் நிகழ்வுகளை அடக்க இயலாது. உயிருள்ளவைக்கும், உயிரற்றவைக்கும் இடையேயான வேறுபாடுகள் நாம் நினைப்பது போல் அதிகமல்ல, ஆய்வுக்கு அப்பாற்பட்டது மல்ல.' இது போன்ற கருத்துகள் அவரால் விளக்கப்பட்டன. 1900ஆம் ஆண்டு பாரிஸில் நடந்த ஒரு மகாநாட்டிலும் பிறகு இங்கிலாந்திலும் தனது சோதனைகளை அவர் நடத்திக் காட்டினார். செடிகள் வெட்டப்பட்டபோது அவை துடிதுடித்து அழுவதை அவர் காண்பித்த போது உலகமே அதிசயித்தது.

டாக்டர் போஸின் கருத்துகள் அக்கால மக்களால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவரது கருத்துகளைப் பொருளற்றவை எனக் கூறியோரும் உண்டு. ஆனால் தமது முடிவுகளை 1902ஆம் ஆண்டு டாக்டர் போஸ் வெளியிட்டு, செயல்முறை விளக்கம் செய்து காட்டிய போது மக்கள் பெரும் வியப்பில் ஆழ்ந்து போயினர்.

பிரிட்டிஷ் அரசு 1917ஆம் ஆண்டு 'சேர்' பட்டம் அளித்து அவரைப் பாராட்டியது. தமது 59ஆம் அகவையின் போது கல்கத்தாவில் ஓர் ஆய்வு நிறுவனத்தை டாக்டர் போஸ் நிறுவினார். டாக்டர் போஸின் கண்டுபிடிப்புகளைப் பற்றி ஜெர்மன், ஆஸ்திரிய விஞ்ஞானிகள் பாராட்டிப் பேசும் போது, இந்தியா அறிவியல் துறையில் பன்மடங்கு முன்னேறியுள்ளதாக ஒப்புக்கொண்டனர்.

இயற்கை முழுதும் உயிர்ப்பும், உணர்வும் நிரம்பி, கிளர்ச்சியுடன் துடித்துக் கொண்டு இருப்பதாக டாக்டர் ஜகதீஷ் சந்திரபோஸ் கூறி வந்தார். இயற்கை தன்னைப் பற்றிய பல புதிர்களை வெளியிட்டு வருவதாகவும், உரிய முறையில் அவற்றைப் புரிந்து கொண்டால் இயற்கையுடன் உறவாடுவதும், உரையாடுவதும் கடினமல்ல என்பதும் அவரது கருத்தாகும்.

டாக்டர் போஸ் காட்டிய வழியில் இப்போது அறிவியல் வெகுவாக வளர்ந்து விட்ட இன்றைய உலகில் பல்வேறு விதமான அதிசய சோதனைகளை இன்னொரு விஞ்ஞானி செய்து காட்டி வருகிறார். இவர் பெயர் க்ளீவ் பாக்ஸ்ரர். (Cleve Backster) இவர் அமெரிக்காவைச் சேர்ந்தவர்.

லை டிரெக்ரர் (Lie detector) என்ற பொய்யைக் கண்டுபிடிக்கும் கருவியைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். ஒரு நாள் இந்தப் பொய்யைக் கண்டுபிடிக்கும் கருவியை ட்ராகன் ட்ரீ (Dracaena or Dragon Tree) எனப்படும் அரக்க மரத்துடன் அவர் இணைத்துப் பார்த்தார். வேரில் தண்ணீர் ஊற்றப்படும் போது இலைகள் அதை எவ்வளவு நேரத்தில் உணர்கின்றன என்று கண்டுபிடிப்பதே அவர் ஆய்வின் நோக்கம்.


நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடாவின் கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டிகளும்

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை ஒகஸ்ட் 2019

390 Morningside Avenu Scarborough வில் அமைந்துள்ள Morningside park Lot- 4 என்ற முகவரியில். நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா வழங்கும் கோடைகால ஒன்று கூடலும் விளையாட்டுப் போட்டிகளும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது.

அதில் சிறப்பு நிகழ்ச்சியாக

நெடுந்தீவில் இருந்து வருகை தந்திருக்கும்

சிற்பக்கலாமணி

மகேசு பார்த்திபன் அவர்களின்

சவர்க்கார சிற்பம் மற்றும் சித்திரக்கலை பட்டறை

மற்றும் சிறுவர்கள் பெரியவர்களுக்கானமைதான விளையாட்டுப் போட்டிகள்.

காலை, மதிய உணவுகள் BBQ போன்றவை வழங்கப்படும் அனைவரும் குடும்ப சகிதம் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்குமாறு பேரன்பு கொண்டு அழைக்கிறோம்

நன்றி

தலைவர் :பரராஜசிங்கம்.சி, செயலாளர்: ரதன்.இ, பொருளாளர்:சர்வன்.கா

647-533-3455 416-727 4692 416-627 1111,

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா


## முடிவு

கானா சுருதியில்
தேவாரம்
தாரை தப்பட்டை
கூத்தாட்டம்

தலைவிரிகோலமாய்
குழுமி
நெற்றியிலும்
நெஞ்சிலுமடித்து
அழுது புலம்பும்
சோகம்

தயாராகும்

பனைஓலை
பாடையும்
பூமாலையும்



தெர்மாஸ்
பிளாஸ்கில்
சூடான காப்பி

வருவோர்கெல்லாம்
துக்கம்
விசாரிக்க
யதார்த்தமான
வரிகள்

என
எல்லாம்
ஒப்பந்தகாரரிடம்
ஒப்படைத்து

பணமானது
பாசமும்
முடிவும்.

இரா.சத்திக்கண்ணன்

# நேர்கொண்ட பார்வை - திரை விமர்சனம்



ஷ்ரத்தா ஸ்ரீநாத், அபிராமி, ஆண்ட்ரியா தாரியங் ஆகிய மூன்று பேரும் ஒரே அறையில் தங்கி வெவ்வேறு பணிகளை செய்து வருகின்றனர். இதில் ஷ்ரத்தா ஸ்ரீநாத் நட்சத்திர ஓட்டலில் நடனம் ஆடுபவராக இருக்கிறார். ஆதிக் ரவிச்சந்திரன், அர்ஜுன் சிதம்பரம் ஆகியோருடன் மூன்று பெண்களும்



விருந்துக்கு செல்கின்றனர். அப்போது அர்ஜுன் சிதம்பரம், ஷ்ரத்தா ஸ்ரீநாத்திடம் தவறாக நடக்க முயற்சி செய்ய, இதில் அர்ஜுன் சிதம்பரத்தை தாக்கிவிட்டு ஷ்ரத்தா ஸ்ரீநாத் தப்பித்து செல்கிறார். இந்த சம்பவத்திற்குப் பிறகு என்ன நடக்கும் என்ற பயத்தில் மூன்று பெண்களும் இருக்கின்றனர். நினைத்தபடி அர்ஜுன் சிதம்பரம், ஷ்ரத்தாவை பழிவாங்க நினைத்து அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்க ஆரம்பிக்கிறார். அர்ஜுனின் தொல்லையைப் பற்றி போலீசில் புகார் கொடுக்கிறார் ஷ்ரத்தா ஸ்ரீநாத். ஆனால் போலீஸ், அர்ஜுன் முதலில் புகார் கொடுத்ததாகக் கூறி ஷ்ரத்தா ஸ்ரீநாத்தை கைது செய்கின்றனர். இவை அனைத்தையும் எதிர் வீட்டில் குடியிருக்கும் வழக்கறிஞர் அஜித், ஷ்ரத்தா ஸ்ரீநாத்துக்கு ஆதரவாக வாதாட ஆரம்பிக்கிறார். இறுதியில் அஜித், தனது திறமையான வாதத்தால் எப்படி வழக்கை முடித்தார்? என்பதே படத்தின் மீதிக்கதை.

மேலே குறிப்பிட்ட கதையில் அஜித்தின் பெயர் சிறிதளவே வந்தாலும், படத்தின் முழு வலுவையும் அஜித்தே சுமந்து நிற்கிறார். இந்தியில் வெளியான பிங்க் படத்தில் அமித்தாப்பச்சன் ஏற்று நடித்த கதாபாத்திரத்தை அஜித் ஏற்று நடித்திருக்கிறார். இதனால், மிகுந்த சவாலாக இருந்த கதாபாத்திரத்தை அஜித் மிகவும் நேர்த்தியாகவும், தனக்கே உரிய பாணியில் திறம்பட நடித்து அனைவரையும் கவர்ந்திருக்கிறார். குறிப்பாக சண்டைக் காட்சி, பைக் ஓட்டும் காட்சிகளில் அவரது ரசிகர்களை திருப்தி அடைய வைத்திருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் வித்யாபாலன், குறைந்த நேரம் மட்டுமே வந்தாலும், மனதில் நிற்கிறார். அஜித்துடனான இவரின் கெமிஸ்ரி நன்றாக இருக்கிறது.



ஷ்ரத்தா ஸ்ரீநாத்திற்கு வலுவான கதா பாத்திரம். அதை உணர்ந்து சிறப்பாக நடித்திருக்கிறார். கடினமான காட்சிகளில் தனது முழுத் திறமையையும் வெளிப்படுத்தி இருக்கிறார். இப்படம் அவருக்குத் திருப்புமுனையை ஏற்படுத்தும் விதமாக அமைந்திருக்கிறது. இவரது தோழிகளாக வரும் பிக்பாஸ் அபிராமி, ஆண்ட்ரியா தாரியங் ஆகியோர், கோர்ட் விசாரணை காட்சிகளில் நடிப்பால் ஸ்கோர் செய்திருக்கின்றனர். அர்ஜுன் சிதம்பரம் பார்ப்பதற்கு அழகாகவும், கொடுத்த வேலையை சிறப்பாகவும் செய்திருக்கிறார். கோர்ட்டில் அஜித்துடன் விவாதம் செய்யும் காட்சியில் ரசிக்க வைத்திருக்கிறார். ஆதிக் ரவிச்சந்திரன், டெல்லி கணேஷ், ஜூனியர் பாலையா, அரசியல்வாதியாக வரும் ஜெயபிரகாஷ் ஆகியோரின் பங்களிப்பு திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறது.

தீரன் அதிகாரம் ஒன்று என்ற மாபெரும் வெற்றிப் படத்திற்குப் பின் இப்படத்தை இயக்கி இருக்கிறார் இயக்குனர் எச். வினோத். பிங்க் படத்தின் ரீமேக் என்றாலும், அஜித் ரசிகர்களுக்கு ஏற்றவாறு, அதேசமயம் பிங்க் படத்தின் கதையை எந்தவிதத்திலும் பாதிக்காத அளவிற்குப் படத்தை இயக்கி இருக்கிறார். குறிப்பாகப் பெண்களுக்கு உண்டான பாதுகாப்பு குறித்தும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள் பற்றியும் அஜித் பேசும் காட்சிகளில் உயிரோட்டமாக உருவாக்கி இருப்பது சிறப்பு. தற்போது பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நடந்துவரும் சூழ்நிலையில், இம்மாதிரியான படங்கள், பெண்கள் பாதுகாப்பு குறித்து பேசுவதும், அதில், முன்னணி நடிகர்கள் நடிப்பதும், சமூகத்திற்கு இதுவும் ஒருவழியில் உதவும் என்பதில் ஐயமில்லை.

யுவன் சங்கர் ராஜாவின் இசையில் பாடல்கள் அனைத்தும் கேட்கும் விதம் பின்னணி இசை படத்திற்குப் பக்கபலமாக அமைந்திருக்கிறார்.

## வியாபாரிமூலை நெல்லண்டை ஒன்றியம் நடத்தும்
## 20ஆவது கோடை கால வருடாந்த ஒன்றுகூடல்

காலம்: சனிக்கிழமை, ஆவணி மாதம் 17ஆம் திகதி (Saturday, August 17, 2019)
இடம்: நீல்சன் பார்க் - '1', Neilson Park – Area 1 (Neilson & Finch)
நேரம்: காலை 9:30மணி தொடக்கம் பி.ப. 7:00 மணிவரை

பல சுவையான உணவுவகைகள் பரிமாறப்படும்
பெரியோர் சிறுவருக்கான விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெறும்
வியாபாரிமூலை நெல்லண்டை மக்கள் நண்பர்கள் நலன்விரும்பிகள் யாவரையும்
கலந்து சிறப்பிக்கு மாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தொடர்புகளுக்கு: வா. சிவசங்கர்: 416-804-5147 இ. சுந்தரலிங்கம்: 416-454-6360
கி. ஆனந்தன்: 416-492-2097 ப. நாகநாதன்: 416-431-5181


MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management


All Classes available in Scarborough & Stouffville


Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228


## பெண்ணுக்கு விடுதலைக் கதவுகள் திறந்தன!

இறைவன் படைப்பில் ஆணென்ன? பெண்ணென்ன?
இருவரும் சமந்தான் இணைவதால் ஜெயந்தான்
குறைபல காணின் குதூகலம் குறையக் குடும்பவாழ்வு
குண்டடிபட்ட பறவைபோலக் குற்றுயிராகி விடும்
நிறைவுடன் குடும்பங்கள் மண்ணில் நிம்மதிகாண
நிச்சயம் பெண்ணுக்குச் சமத்துவம் வேண்டும்
கறையுடன் காணும் முழுமதிபோலப் பெண்கள்
காசினிமீது வாழுதுல் முறையோ சொல்வீர்?




மண்ணில் நாகரீகம் தோன்றாக் காலம்
மதிநலத்தோடு மனிதர் இங்கு வாழாக்காலம்
பெண்களைப் போகப் பொருளாய் மட்டும்
பேதமையோடு பார்த்த காலம் இன்றும்
திண்ணிய தேகம் கொண்ட ஆணினம்
திக்கெட்டும் சென்று உழைத்த காலம்
கண்ணியமாக வாழவைப்பதாய் எண்ணி பெண்ணை
கதவுக்குப் பின்னால் தள்ளிப் பூட்டியகாலம்!

வம்சத்தை விருத்தி செய்வதும் மூன்றுவேளையும்
வகைவகையாக உணவைச் சமையல் செய்வதும்
அம்சமாக மாடுமனை பேணிக் காப்பதும்
அன்போடு பிள்ளைகளை வளர்த் தெடுப்பதும்
தெம்போடு மூத்தோர் நலமாய்வாழ அவரின்
தேவைகண்டு பணிவிடைகள் பார்த்து முடிப்பதும்
நம்பிக்கையொடு வீடு வரும் கணவனை உபசரிப்பதும்
நாளாந்தக் கடமையெனக் கொண்டார் பெண்கள்!

பெண்ணை அடிமை கொள்ளல் தீதெனப்
பெற்ற அறிவினால் மனத்தெளிவு பிறந்திட
பெண்ணுக்கு விடுதலைக் கதவுகள் திறந்தன
பேதங்கள் மறைந்தன பெருமைகள் மலர்ந்தன.
கண்ணுக்கு நிகரானவள் பெண்ணை எங்கும்
கவினுறு கருத்துக்கள் ஓங்கி ஒலித்தன.
ஆண் அவனுக்குச் சமமாய் பெண்ணெனும்
அற்புதக் கருத்துக்கள் அவனியை நிறைத்தன!

ஆண் செய்யும் அத்தனை தொழில்களு மின்று
ஆரிவையர் செய்தலை அகிலமே அறியும்
விண்வெளியில் சாகசம் செய்தல், வீரம்மிக்க
விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்தல்
அண்டவெளி ஆராய்ச்சி தொல்பொருள் ஆராய்ச்சியென
அனைத்துத் துறைகளிலும் சமமாய்ப் பெண்கள்
ஆண்களுடன் இணைந்து ஆற்றிடும் பணிகள்
ஆயிரமுண்டு அதனால் சமநிலை அடைந்தாரே!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

# ஒற்றைத் தலைவலி

## *Migraine*

உலகில் 70 சதவீதமான பெண்கள் ஒற்றைத் தலைவலியால் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர். முறையான வழிகாட்டுதல்களும் சிகிச்சைகளும் இல்லாததால் அல்லது இருந்தும் எடுத்துக் கொள்ளாததால் பலர் தலை வலியை முற்றவிட்டு, பக்கவாதம் உட்பட வேறு சில ஆபத்தான நோய்களுக்கும் ஆட்படுகின்றனர். சிலருக்குக் கண்பார்வை கூட மங்கிப் போகக்கூடும்.

அறிகுறிகள்: தலைவலி விட்டுவிட்டு ஒரே பக்கத்தில் வரும். வலி கடுமையாக இல்லாவிட்டாலும் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டிய வேலைகளை பாதிக்கும். தலையின் இரண்டு பக்கங்களில் அல்லது ஒரே பக்கத்தில் தோன்றி இன்னொரு பக்கத்திற்குப் பரவும். விண்விண் என அதிர்வோடு, பிசைவது போன்று, கண்ணையும் நெற்றியையும் அமுக்குவது போன்ற உணர்வுகளும், தலையில் ஏதோ ஒன்று கிளறுவது போன்ற உணர்வும் இருக்கும். வெளிச்சத்தை உற்றுப் பார்க்க முடியாது. சத்தம் கேட்டால் மிரட்சி உண்டாகும். திடுக்கிட வேண்டியிருக்கும். வாசனைகளை முகர்ந்தால் உடனடியாக அதிக உணர்ச்சி வசப்படும் நிலை. அதிகப்பசி, பசியின்மை, பார்வை மங்குதல், மூக்கடைப்பு, அடிவயிற்றில் வலி, சிறுநீர் அதிகரித்தல், மற்றும் முகச் சோகையால் தோலின் நிறம் மங்குதல் ஆகியவை காணப்படும். படிக்கட்டில் ஏறும்போது, வீட்டு வேலைகளைச் செய்யும்போது வலி கூடும். கூடவே குமட்டலும் வாந்தியும் வரும்.

**வகைகள்** - ஒற்றைத் தலைவலி இரண்டு முக்கிய வகைப்படும்.

1. கிளாசிக் மைக்ரேன் (Classic Migraine): -migraine with aura - தற்காலிகமான பார்வையில் கோளாறுடன் கூடிய ஒற்றைத் தலைவலி.

தலையில் நெற்றிப்பொட்டில், பொட்டெலும்பு, பின்பக்கத் தலை போன்ற இடங்களில் இதன் வலி தெரியும். கண்களிலும், தாடையிலும், முதுகிலும்கூட வலி தெரியலாம். பேச்சு குழறுதல், கவனமின்மை, மனநோய் போன்றவை இதனால் வர வாய்ப்புண்டு. தற்காலிகமாக பார்வையில் கோளாறு, உணர்வில் கோளாறு, கண்களுக்குள் மின்னல் போன்ற ஒளிக்கீற்று வந்து மறைதல் போன்றவை ஏற்படும். நெற்றிப் பொட்டிலும், கண்ணிலும் வலி ஏற்பட்டு, வலி அதிகரிப்பதால் சிலர் தாங்க முடியாமல் தவிப்பர். சிலர் எதிலாவது தலையை முட்டிக்கொண்டு அழுவது கூட உண்டு. கை, கால்களைப் பலவீனப்படுத்தும் இந்த வலி இரண்டு நாட்களுக்கு ஒருமுறைகூட வரலாம்.

2. பொதுவான மைக்ரேன்: (Common Migraine): migraine without aura - தற்காலிகமான பார்வையில் கோளாறுடன் இல்லாத ஒற்றைத் தலைவலி

மனநிலையில் பாதிப்பு, அடிக்கடி மனநிலை மாறுதல், சோர்வுறுதல், மனப்பதட்டம் ஆகியவற்றால் இத்தலைவலி ஏற்படும். இது தொடர்ந்து மூன்று, நான்கு நாட்களுக்கு இருந்தால் குமட்டல், வாந்தி, வயிற்றுப் போக்கு, சிறுநீர் அதிகரித்தல் ஆகியன உண்டாகும்.



ஒற்றைத் தலைவலி எதனால் வருகிறது?

மூளை இயங்குவதற்குத் தேவைப்படும் செரடோனின் (serotonin) என்ற வேதியியல் திரவத்தின் அளவு குறையும் போதுதான் இந்த ஒற்றைத் தலைவலிகள் ஏற்படுகின்றன. புதிய கண்டுபிடிப்புகளின் படி, மூளையைச் சேர்ந்த சில செல்களில் (cells) ஏற்பட்டுள்ள பரம்பரைக் குறைபாடுகள் (gentic disorders) தான் காரணம் என்று கண்டுபிடித்திருக்கின்றனர். மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய்கள் திடீரென சுருங்குவதால் இரத்தக்குழாய் சுவர்களில் உண்டாகும் அழுத்தம் காரணமாக சுரக்கும் இரசாயனங்களால் (chemicals) மூளை வலியை உணர்கிறது.

சிலர் ஒற்றைத் தலைவலி வரப்போவதை முன்பே எதிர்வு கூறுவர், இதற்கு முன்னறிகுறியாக பார்வைப்புலன் தளத்தில் பளிச்சென்ற ஒளிக்கீற்றுக்கள், ஒளிவட்டம், குறுக்கு மறுக்கான ஒளிக்கோடுகள் அல்லது தற்காலிகமான பார்வையிழப்பு போன்றன தோன்றுவதாகக் கூறுவர். பலருக்கு இந்த ஒளிக்கீற்றுகள் தோன்றாமலே தலைவலி தோன்றுகின்றது. இத்தலையிடி வருவோருக்கு இது திரும்ப திரும்ப வருவதாக காணப்படுகிறது. அத்துடன் போதியளவு உணவு, உறக்கமின்மை, சில உணவுகளில் ஒவ்வாமை, ஏற்றுக்கொள்ளாமை, ஒளியின் அளவு, ஹோர்மோன்களினால் ஏற்படும் ஒழுங்கீனங்கள் (பெண்களில் மட்டும்) போன்றவையும் சில காரணங்களாகும். மேலும் மனவெழுச்சி (anxiety), மனவழுத்தம் (stress) ஆகியனவும் காரணமாகலாம்.

அதிக சூரியவெம்பம், வானிலை அழுத்த மாற்றங்கள், காற்றோட்ட மற்ற புழுக்கமான அறைகளில் தங்குதல், அடிக்கடி உறங்கும் முறையை மாற்றிக் கொள்ளுதல், வேலையிலும் ஓய்விலும் மாறுதல்களை உண்டாக்கிக் கொள்ளுதல், ஏதாவது ஓரிடத்திற்கு சென்றிருந்த போது தலைவலி வந்திருந்தால், அதே இடத்தில் வேறு ஒரு சூழ்நிலையில் செல்ல நேர்ந்தாலும் தலைவலி வருதல், மது வகைகள், சில கீரைகள், பாலாடைக் கட்டி, தயிர், vinegar, chocolate, ஆடு மற்றும் கோழி போன்றவற்றின் ஈரல், இறைச்சி, மிக அதிகமான உறக்கம், உறக்கமின்மை, மிகைபசி, தலையில் அடிபடுதல், உடலின் உட்புற உறுப்புகளில் உண்டாகும் நோய்கள், அதிக மருந்து சாப்பிடுதல், மாதவிலக்கு, கர்ப்பம், கவலை, மனஇறுக்கம், அசதி, வாய்வழி சாப்பிடும் கருத்தடை மாத்திரைகள் ஆகியவை ஒற்றைத் தலைவலியை உண்டாக்குகின்றன.

ஒற்றைத்தலைவலி பரம்பரை நோயா?

ஒற்றைத் தலைவலி பரம்பரையாக வரக் கூடியது என்று சொல்லப்படுகிறது. என்றாலும், இது மரபில் உள்ள கோளாறால் தான் என்று திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. மற்றபடி, கட்டாயம் வரும் என்றும் சொல்லமுடியாது. தாக்குண்டவர் துன்பத்தில் துடிக்க, சூழ இருப்பவரின் நோய் நீக்க முடியாத கையாலாகாத நிலை இன்னும் துன்பமானதாகும். சந்தோசமாக இணைந்து வாழும் இருவரில் ஒருவருக்கு இது வந்துவிட்டால், அவ்வுறவே பிரியுமளவுக்கு இந்நோய் பாதிக்கும். பெற்றோர்க்கு தலைவலி வந்துவிட்டால் சிறு பிள்ளைகள் குழப்பமடைந்து கவலைகொள்கின்றனர்.

உணவு வாழ்க்கை முறை மாற்றங்கள்: தாக்குதல் ஏற்பட்டபோதான விபரங்கள் - நாள், நேரம், தாக்கத்தின் அளவு, கடந்த 24 மணி நேரத்தில் உட்கொண்ட உணவு போன்றவற்றை குறித்து வைத்துக் கொண்டால், தாக்குதலுக்கான தனிப்பட்டவருக்குரிய காரணிகளைக் கண்டுகொள்ளலாம். பின்னர் தெரிந்த காரணிகளைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

வராமல் காக்கும் வழிகள்: அறிகுறிகளை வைத்தே ஒற்றைத் தலைவலியை நெருங்க விடாமல் செய்ய முடியும். உங்களுக்கு உதவ சிலவழிகள்.

1. உணவுமுறையில் மாற்றம்: சரியாக உணவு உண்ணாததும், ஒத்துக்கொள்ளாத சில உணவுவகைகளை உண்பதும், அளவுக்கு அதிகமாக உண்பதும் ஒற்றைத்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி? 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

## நோயும் அதற்குரிய குடிநீர் வகையும் சூரணமும்



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9796

கடந்த இதழ் தொடர்ச்சி...
அடுத்த ஒருவருக்கு சீதபேதி நிலை ஏற்பட்டிருந்தால் அதன் காரணம் கண்டு தகுந்த வெந்நீர் கொடுக்க வேண்டும். ஆரம்பத்தில் இதனைக் கையாள வேண்டும் பெரும்பாலும் நாம் அருந்தும் தண்ணீர் மூலம் தான் ஏற்படுகின்றது. நாம் அருந்தும் நீருடன் விஷக் கிருமிகள் கலந்து செல்வதினாலும் மற்றும் பழைய பதம் கெட்ட உணவுகளான பழைய புதிய, மீன் இறைச்சி வகை, குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் இவை மூலமும் நச்சுப் பொருட்கள் சென்று சீதபேதி ஏற்படலாம் மற்றும் கடை, தெருக்களில் விற்கப்படும் பழவர்க்கம் போன்றவற்றில் இருக்கும் ஈக்கள் மூலமுமம், வைரஸ் கிருமிகளினாலும் ஏற்படலாம்.

மேலும் மலக்கட்டு தொடர்ந்து இருந்தாலும், அதன் முலமும் ஏற்பட இடம் உண்டு. எனவே சுத்தமும் சுத்திகரிப்பும் மிக முக்கியமாகும். சிலர் மலக்கட்டைத் தடுக்கலாம் எனக் கருதி அளவுக்கு மிஞ்சி கீரை வகைகளை அதிகம் உண்பதினாலும் ஏற்படலாம். எனவே வெந்நீர் அருந்துவதினால் நற்பயன் உண்டு. இரவு படுகைக்குச் செல்லுமுன் வெந்நீர் ஆற வைத்துக் குடிக்க வேண்டும். காலையில் இலகுவாக மலம் கழியும்.

புதிய உணவுகளை உண்ண வேண்டும். நேரம் தவறாது உண்ணும் பழக்கத்தை கையாள வேண்டும். குழந்தைகளுக்கு உணவுப் பொருட்களைக் கொடுக்கும் போது அவதானம் வேண்டும். கண்ட கண்ட இடங்களில் விலைப்படும் உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுக்க கூடாது.

உணவுப் பொருட்களில் பழுது ஏற்பட்டு விஷக்கிருமிகள் உருவாகிவிடும் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்கவும். தவறின் பேதிநிலை ஏற்பட்டு குழந்தையின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டு விடும். இந் நிலை ஏற்பட்டோர் உடன் வைத்திய சாலைக்கு செல்ல வேண்டும். செல்லத் தாமதமானால் தற்பாதுகாப்பாகக் கீழ் வருபனவற்றைக் கொடுக்கவும்.

கசகசா 10கிராம், மாதுளை தோல் 10கிராம், இஞ்சிச்சாறு 2 தேக்கரண்டி, எலுமிச்சைச்சாறு 2 தேக்கரண்டி, தண்ணீர் அரை கிளாஸ். கசகசாவை ஒரு சட்டியில் இட்டு தண்ணீரில் ஊறவிட்டு மாதுளைத் தோலை நன்கு சுத்தம் செய்து சட்டியில் இட்டு ஊறவைத்த கசகசாவையும் எடுத்து இத்துடன் சேர்த்து நன்றாகக் கொதிக்க வைக்க வேண்டும். பின்பு இஞ்சிச் சாறையும் சேர்த்து சூடாக்கி இறக்கி ஆறிய பின்பு எலுமிச்சம் பழச்சாற்றை விட வேண்டும். பாவிக்கும்போது தேன் சேர்த்து கொடுக்கவும். ஒரு வேளை 2 தேக்கரண்டி வீதம் 4 வேளை கொடுக்கவும். காலை மாலை மத்தியானம் இரவு படுக்கும் போதும் கொடுத்துவர சுக நிலை தென்படும். எவ்வளவு விரைவில் வைத்தியரிடமோ அல்லது வைத்தியசாலைக்கோ செல்வது மிக சிறந்ததாகும்.

இன்னும் ஒரு கடாயம் உண்டு. மாதுளை தோல் 40கிராம், வெந்தயம் 20 கிராம், நெல்லி 20 கிராம், எலுமிச்சை பழச்சாறு 25 மில்லி லீற்றர், இஞ்சிச்சாறு 5 தேக்கரண்டி. மேலும் மாதுளை தோலை எடுத்து நன்கு சுத்தம்செய்து வெந்தயத்தை துப்பரவு செய்து சட்டியில் இட்டு பாலும் ஓரளவு சேர்த்து 5 மணி நேரம் ஊற வைத்து எடுத்து அரைக்கவும். நெல்லியை விதை நீக்கி எடுக்கவும். மாதுளை தோல், வெந்தயம், அரை நெல்லி ஆகியவற்றை சட்டியில் இட்டு ஓரளவு தண்ணீர் இட்டு மூடி அடுப்பில் வைத்து சூடாக்கி ஆற வைத்து ஆறிய பின் தேவைப்படும்போது இஞ்சிச் சாறும் தேசிப் புளியும் சேர்த்துக் கொடுக்கவும். மேலும் தேவைப்படும் போது 4 தேக்கரண்டி கசாயத்துடன் ஓரளவு தேன் கூட்டிக் கொடுக்கலாம். 2 மணித்தியாலத்திற்கு ஒரு முறை கொடுக்கலாம். காலை மாலை கொடுக்கலாம்.



இரத்த பேதி - இவ்வியாதி எமக்கு மனத்தாக்கதை ஏற்படுத்தும். எதற்கும் அதிகம் சிந்திக்காமல் சடுதியாக வைத்தியசாலைக்கு செல்வதே மிக நன்று. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நினைத்தபடி நடப்பது கஷ்டம். அதாவது ஆள் உதவி, வாகனம் யாவும் தயாராக இருக்க வேண்டும். சகல வசதியும் அற்ற இடத்தில் இருப்போருக்குத்தான் இக்குடிநீர் வகை சிறந்ததாக இருக்கும். உடன் தகுந்த பொருட்களை எடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எனவே இந்த இரத்தபேதிக்கு கடுக்காய் தோல் 10 கிராம், கசகசா 10 கிராம். இவற்றை எடுத்து தனியாகத் தூள் செய்து பின்பு சேர்த்து இடித்து தூள் ஆக்கி இரண்டு தேக்கரண்டி எடுத்து தேன் விட்டு கொடுக்க குணம் கிடைக்கும். (ஒரு நாளில் இரண்டு வேளை காலை _ மாலை)

சளி சுரத்திற்கு திப்பிலி 10 கிராம், தான்றிக்காய் 20 கிராம், இலவங்கப் பட்டை 20 கிராம், ஏலரிசி 10 கிராம், கருஞ்சீரகம் 10 கிராம், வால் மிளகு 10 கிராம், ஓமம் 10 கிராம், அதிமதுரம் 10 கிராம் என்பனவற்றை எடுத்தல் வேண்டும். முதலில் திப்பலியை நன்கு கழுவி உலர்த்தி அடித்து சட்டியில் இட்டு 10 மில்லிமீற்றர் தேசிப்பழச் சாறு விட்டுச் சூடாக்கி ஓரளவு வற்றிய பின்பு இறக்கி ஆறவிட்டு நீரை ஊற்றிச் சக்கையை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும். தாண்றிக் காயை எடுத்து நன்றாக இள வறுப்பாக வறுத்து எடுத்து இடித்துக் கொள்ள வேண்டும். இலவங்கப்பட்டையை எடுத்து இடித்துக் கொள்ளவும். ஏலரிசியை நன்கு கழுவிக் காய வைத்து இடித்துக் கொள்ளவும். கருஞ்சீரகத்தை பலமுறை பிசைந்து கழுவி சட்டியில் இட்டு நீரை ஊற்றி ஓரளவு வற்றும்வரை காய்ச்சி நீரை நீக்கி கருஞ்சீரகத்தை உலர விட்டு இடித்துக் கொள்ளவும். வால் மிளகு, ஓமம் இரண்டையும் ஒன்றாக இடித்துக் கொள்ளவும் அதிமதுரத்தை நன்றாக இடித்து சட்டியில் இட்டுப் பால் விட்டு சூடாக்கி ஓரளவு வற்றிய பின் எடுத்து பாலை நீக்கி அதிமதுரத்தை எடுத்தல் வேண்டும். பின்பு எல்லா சரக்குகளையும் பொடியாக்கி எல்லா சரக்கு பொடியையும் கலந்து இடித்து அரித்து வைத்திருக்க வேண்டும். பின்பு அவற்றை எடுத்து காற்றுப் புகாதபடி பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். 3 நாட்களின்பின் பாவனைக்கு எடுக்கலாம். வெந்நீருடன் காலை, மாலை, மத்தியானம் ஒரு தேக்கரண்டி வீதம் பாவிக்கலாம்.

குளிந்த பானங்கள், தயிர், தண்ணீர், வாழைத்தண்டு, பூசணி, முள்ளங்கி பாவிப்பதை தவிர்த்தல் நன்று. சூடான உணவு வகையை பாவிக்கலாம். இரவில் சோறு உண்பதை தவிர்த்தல் வேண்டும். இட்டலி போன்ற மென்மையான உணவு சிறந்ததாகும். மேற்கூறிய ரோக நிலையில் தகுந்தவற்றை பாவித்து வந்தால் எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம் என்பதை அறியத் தருகிறது.

பக்கவிளைவுகளற்ற தகுந்த மூலிகை மருந்துகள் சிறியோர் முதல் முதியோர் வரை இதுவரை தீராத வியாதிகளினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்போருக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிசைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும், சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள் பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும், விபத்தினால் ஏற்பட்ட அடி காயங்களுக்கும், நோவிற்கும் ஏற்ற அனுபவரீதியாகக் கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை இலவசமாக வழங்கப்படும். என்னைத் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## உலவுகின்ற நிலவோ

உலவுகின்ற நிலவோ
அருகினில் வருமோ
என்னில் ஆசை கொண்டு விடுமோ
காதில் காதல் சொல்ல வருமோ

மின்னுகின்ற கண்கள்
கொள்ளை கொள்ளுகின்ற அழகு
அவள் சுவாசம் இன்னும் அழகு
அதை கண்டு கொள்ளும் உலகு
(உலவுகின்ற நிலவோ)

மென்மையான பேச்சு என்னை
மெய் சிலிர்க்க வைக்கும்
அவள் சின்ன புன்னகை எந்தன்
நெஞ்சில் பதிஞ்சு போச்சு
(உலவுகின்ற நிலவோ)

தங்க கைகள் வீசும் அழகில் அதனை
வருடி பார்க்க எண்ணும்
இடையும் இல்லை போலும் அதனை
கடையில் வாங்க கூடும்
(உலவுகின்ற நிலவோ)

நடையும் நடனமாடும் பார்த்தால்
கதகளியும் புரியும் உள்ளம்
விண்ணில் உலகை மறந்து போகும்



ஆடை உடுத்தி மெல்ல அடி எடுத்து
வைத்தால் என் இதயம் நழுவி கீழே
விழுந்து போகும் மெல்ல
(உலவுகின்ற நிலவோ)

மேனி நோகுமென்று தென்றல்
மெல்ல விலகி போகும் நானும்
கண்ணாடி பொம்மை போல உனை
உள்ளங் கையில் தாங்கி காப்பேன்
(உலவுகின்ற நிலவோ)

- இனியா -

# ரோஜர்ஸ் கிண்ணத்திற்கான போட்டியில் பியனங்கா ஆண்ட்ரெஸ்கு சாதனை!

## விளையாட்டுத் தகவல்கள்

கனடாவில் ஆண்டுதோறும் நடைபெறும் 138 ஆண்டுகள் பழமையான ரோஜர்ஸ் கிண்ணத்திற்கான பெண்கள் பிரிவுக்கான போட்டிகள் Aviva Centre -York University in North York, Torontoவிலும் ஆண்கள் பிரிவுக்கான போட்டிகள் IGA Stadium, Montreal இலும் கடந்த ஒகஸ்ற் 3ஆம் திகதி ஆரம்பமாகிய இத்தொடர், ஒகஸ்ற் 11ஆம் திகதி முடிவுக்கு வந்தது. கடின தரையில் நடைபெற்ற இப் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு, ஆண்கள் இரட்டையர் பிரிவு, பெண்கள் ஒற்றையர் பிரிவு, பெண்கள் இரட்டையர் பிரிவு என நான்கு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.



பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டி: ஒகஸ்ற் 10ஆம் திகதி நடைபெற்ற காலிறுதிப் போட்டியொன்றில், கனடாவின் 19 வயது வீராங்கனையான பியான்கா ஆண்ட்ரெஸ்கு (Bianca Andreescu), செக் குடியரசின் முன்னணி வீராங்கனையான கரோலினா பிளிஸ் கோவாவுடன் (Kristýna Plíšková) (19 வயது) மோதினார். இரசிகர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை 6-0 என பியான்கா ஆண்ட்ரெஸ்கு, எளிதாகக் கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், திறமையாக விளையாடி கரோலினா பிளிஸ்கோவா, 6-2 என செற்றைக் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார். இதனால் வெற்றியை தீர்மானிக்கும் மூன்றாவது செற் பரபரப்படைந்தது. இதில் விட்டுக் கொடுக்காமல் விளையாடிய பியான்கா ஆண்ட்ரெஸ்கு, 6-4 என செற்றைக் போராடிக் கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார். 1969ஆம் ஆண்டுக்கு பிறகு ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் வரலாற்றில், அரையிறுதிக்கு முன்னேறிய கனேடிய வீராங்கனையாகப் பியான்கா ஆண்ட்ரெஸ்கு, தனது பெயரை முத்திரை பதித்துக் கொண்டார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறிய பியான்கா ஆண்ட்ரெஸ்கு, அமெரிக்காவின் சோபியா கெனின்னுடன் (Sofia Kenin) மோதினார். இப்போட்டியில், முதல் செற்றை 6-4 என பியான்கா ஆண்ட்ரெஸ்கு, எளிதாகக் கைப்பற்றினார். இதனையடுத்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், சிறப்பாக விளையாடி சோபியா கெனின், கடும் நெருக்கடி கொடுக்க குறித்த செற் 6-6 என்ற சமமான புள்ளிகளுடன் ஆட்டம் மேலும் விறுவிறுப்படைந்தது. இருப்பினும் சிறப்பாக விளையாடிய பியான்கா ஆண்ட்ரெஸ்கு 7-6 என செற்றை போராடி கைப்பற்றி இறுதிப் போட்டிக்கு முன்னேறி னார். ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டிக்கு கனேடிய வீராங்கனை ஒருவர் நுழைவது 50 வருடங்களில் இதுவே முதன்முறையாகும்.

பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி: ஒகஸ்ற் 11ஆம் திகதி இரசிகர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் ஆரம்பமான இப்போட்டியில், கனடாவின் இளம் வீராங்கனையான பியான்கா ஆண்ட்ரெஸ்குவும், அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையுமான செரீனா வில்லியம்சும் (Serena Williams) (37 வயது) போட்டியிட்டனர். வரலாற்று சாதனையுடன் இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்த பியான்கா ஆண்ட்ரெஸ்கு, 3-1 முன்னிலைப் பெற்ற போது செரீனா வில்லியம்ஸ், உபாதை காரணமாக போட்டியிலிருந்து வெளியேற நேரிட்டது. இதனால் கனடாவின் வீராங் கனையான பியான்கா ஆண்ட்ரெஸ்கு சம்பியனாக அறிவிக்கப்பட்டார். 50 ஆண்டுக்கால வரலாற்றில் இத்தொடரில், கனேடிய வீராங்கனையொருவர் சம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதல் முறையாகும். அமெரிக்காவின் முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ், இத்தொடரில் மூன்று முறை (2001, 2011, 2013) சம்பியன் பட்டம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



தற்போது ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியின் முடிவினை பார்க்கலாம்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், ஸ்பெயினின் முன்னணி வீரரான ரபேல் நடாலும், ரஷ்யாவின் டானி யல் மெட்வெடேவ்வும் பலப்பரீட்சை நடத்தினர்.

இரசிகர்களின் உச்சக்கட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை 6-3 என நடால் கைப்பற்றினார்.

இதனையடுத்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், நடாலுக்கு, மெட்வெடேவ் சவாலாகத் திகழ்ந்து நெருக்கடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் அந்த எதிர்பார்ப்புக்களை தவிடு பொடியாக்கிய அனுபவ முன்னணி வீரர் நடால், செற்றை எவ்வித அழுத்தமும் போட்டியும் இல்லாமல் 6-0 என எளிதாகக் கைப்பற்றி சம்பியன் பட்டம் வென்றார்.

நடாலுக்கு இது ஐந்தாவது சம்பியன் பட்டமாகும். இதற்கு முன்னதாக நடால், 2005ஆம், 2008ஆம், 2013ஆம், 2018ஆம் ஆண்டுகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.




## அன்பே கடவுள்...



ஐயமில்லை தெய்வமுண்டு
 அடித்துச் சொன்னார் நாமக்கல்லார்
விண்டவரெல்லாம் கண்டிலராம்
 கண்டவரெல்லாம் விண்டிலராம்
எல்லா மாக்கும் மகா சக்தி
 இருப்பதென்பது உண்மையதாம்
பாரொடு விண்ணாய்ப்பரந்துள பரம்பொருள்
 எல்லாரும் ஏத்த இறையொளி காட்டும்

அல்லா இயேசு சிவன் புத்தர்
 அனைவர்க்கும் அவனியில் தெய்வமுண்டு
தம் தம் வழியில் வணங்கி வந்தால்
 தரணியில் சண்டைபகையுமில்லை
மக்கள் மனங்களை மகிழ்வித்து
 தொண்டு செய்து வாழ்ந்திட்டால்
தூய்மை விளங்கும் துயர் விலகும்
 காணும் சுவர்க்கம் இங்குளதாம்

உள்ளம் கோயில் ஊனுடம்பாலயம்
 கள்ளமின்றி கடமையாற்றினால்
வெள்ளம் போல அன்பு பெருகிடும்
 விளையும் நன்மை அதிகமாகும்
சொல்லும் சுகமும் நமக்காகும்
 துரித கெதியில் நலம் கிட்டும்
எல்லோரும் ஒரு தாய் மக்களாய்
 இயைந்து வாழ வழி பிறக்கும்

சாதி சமய சண்டையின்றி
 சமரச நெறிபிறழாது வாழுங்கள்
பாதி வழியில் பிரிந்து நின்று
 பான்மைகெட்டு உழலாதீர்

நீதி நெறி பிறழாது நித்தமும்
 நேர்மை தவறாது வாழுங்கள்
ஆதி சிவனின் கருணையினால்
 அருள் நிலை கிட்டும் மறவாதீர்

ஒன்பது வாசல் கோட்டை என்பார்
 உருக்குலைந்தொரு நாள் அழிந்துவிடும்
நன்கிதை நாளும் பேணி வந்தால்
 நலிவேயின்றி நாள் பல வாழ்ந்திடலாம்
மன்பதை இருப்பிற்கு வாழ்நாள் வரையுண்டு
மரித்தலின்றி நெடிலை வாழ்ந்தவர் எவருமில்லை
என்பதை மனதில் இருத்திக் கொண்டு
 அன்பகலாது வாழுங்கள் அகிலமுனை
 துதிபாடும்.


நா. க. சிவராமலிங்கம்

# ஒற்றைத்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

தலைவலிக்கு முக்கியக் காரணங்களாகும். இதனால் நல்ல ஆரோக்கியமான உணவை, வேளை தவறாமல் எடுத்துக் கொள்ள வேண்டும். பால், காய்கறி வகைகள் நல்லது. இறைச்சி வகைகளைத் தவிர்த்தல் மிக நல்லது. சீனியளவு கூடிய உணவுகளைத் தவிர்ப்பதோடு குருதி



வெல்லத்தின் அளவு (blood sugar level) அதிகம் மாறுபடாமல் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். போதியளவு நீர் குடிக்கவேண்டும்.

2. முறையான தூக்கம்: தூக்கமில்லாமல் அவதிப்படுவோர் காலையில் எழுந்ததும் தலைவலிப்பதாகச் சொல்வது வாடிக்கை யாகிவிட்டது. அதனால் நல்ல தூக்கம் வரச்செய்யும் வழி முறைகளைத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும். உதாரண மாக தூக்கம் வரும்வரை படிப்பது.

3. உடற்பயிற்சி: உடற்பயிற்சி உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கச் செய்வதால் மூளை நன்கு செயல்படத் தொடங்கும். முறையான தொடர் உடற் பயிற்சி இருந்தாலே ஒற்றைத் தலைவலி வராமல் தவிர்க்கலாம். மன, உடல் அமைதிக்கான தியானப்பயிற்சியும் செய்ய வேண்டும். தொடர்ச்சியான, திரும்பத் திரும்ப ஒன்றையே செய்யும் வேலை களிலின்போது ஒழுங்கான சிறு ஓய்வுகள் எடுக்கவேண்டும்

4. சுற்றுச்சூழலில் கவனம்: அதிக சூரிய வெப்பம் படுதல், வானிலை மாற்றங்கள், காற்றோட்டமில்லாத புழுக்கமான சூழலில் வாழ்தல் ஆகிய சுற்றுச்சுழல்களாலும் சிலருக்கு தலைவலி வரும். அதனால் இவற்றைத் தவிர்த்தல் வேண்டும். காற்றோட்டமுள்ள இடத்தில் தூங்குவதும், மலச்சிக்கல் வராமல் பார்த்துக் கொள்வதும் மிக அவசியம்.


5. மது, புகை, கோப்பி என்பவற்றை தவிர்த்தல்: மது அருந்துதல், புகை பிடித்தல், கோப்பி குடித்தல் சிலருக்கு தலைவலியை உண்டாக்கும். இவை முற்றிலும் நிறுத்தப்படல் வேண்டும். சிலருக்குக் கோப்பி குடித்தால் தலைவலி நிற்பதுபோல் தெரியும். ஆனால் அது நிரந்தரமற்றதாகும்.

6. கவலை, சோர்வு, மனஅழுத்தம் வேண்டாம். அதிகமாகக் கவலைப்படு வோர், அடிக்கடி சோர்வு அடைவோர், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அடிக்கடி ஒற்றைத் தலைவலி வரும். இவற்றில் இருந்து விடுபட, மற்றவர்களு டன் நட்பாகப் பேசிப் பழக வேண்டும். மனம் விட்டுப் பேசி குறைகளைத் தீர்க்க வேண்டும்.

7. தடுப்புமுறைகள்: ஒற்றைத்தலைவலி எதனால் வந்தது என்பதை அறிந்து கொண்டு அவற்றைத் தவிர்த்தலே மிக நல்லது. உதாரணமாக, ஒரு நிகழ்ச்சிக்குப் போனால் தலைவலி வந்திருக்கும். திரும்பவும் அந்த நிகழ்ச்சியைக் காணாது தவிர்த்தல். சில பொருட்களின் ஒவ்வாமை தலைவலி கொடுத்திருக்கும். அவற்றைத் தவிர்த்து முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளலாம்.

8. மருந்துகள்: அதிக அளவில் மருந்து எடுத்துக் கொள்வதும் சிலருக்குத் தலை வலி வரக் காரணமாக இருக்கும். இதனால் மருத்துவர் ஆலோசனைப்படி மட்டுமே மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். நோயின் தன்மை, நோயின் தீவிரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உடனடி சிகிச்சை தேவைப்படும் நோயாளிக்கு சிகிச்சையளிக்க வேண்டும். நரம்பியல் நிபுணரை ஆலோசிப்பது நல்லது.

தகவல்: http://sathik-ali.blogspot.com/2009/01/blog-post_06.html






## கருணைக் கடலே கதிர்வேலா

யாழ் நகரின் நற்பதியாம் நல்லூரில்
யாவருமுனைப் போற்றி வணங்கிட
வாழ்வாங்குவாழ வழிகாட்டிக் கோயில்கொண்ட
வைகுந்த வாசனின் திருக்குமரா
தாழ்வொன்றும் வாராமல் தமிழினத்தின்
தன்மானம் காத்தருளும் தமிழழகா
ஊழ்வினையால் துன்புறும் அடியவர்கள்
உற்றதுயர் நீக்கி வைக்கும் உமைபாலா!



நல்லூருறை கந்தா கதிர்வேலா
நயந்துணை வேண்டுதல் செய்வோரின்
சொல்லும் செயலும் ஒன்றிடத்தினம்
சோதனை புரிந்தே சுகம் தருவாய்
எல்லோர் வாழ்வும் நலம் பெறவே
ஏறிநீ வருவாய் மயில்மீதே
நல்லோர் அல்லோர் பேதமின்றி
நல்லருள் தந்தே காத்திடுவாய்!

நல்லூரில் குடிகொண்ட நாயகனே
நாமணக்க நின்புகழ் நாமிசைக்க
சொல்லுவாய் செந்தமிழில் சொல்லெடுத்து
சொல்லுவோம் நின்புகழைக் காலமெல்லாம்
வெல்லுவாய் அரக்ககுணம் கொண்டோரை
வேதனைகள் தீர்த்திடுவாய் வெகுண்டெழுந்து
கொல்லுவாய் ஆணவத்தை அடியோடு
கொடியோரை வதம் செய்ய நீ வருவாய்!

நின்னருள் வேண்டியடியார் நித்தமும்
நினைந்து மனதுருகித் துதிப்பர்
பொன்னால் பூவால் உனை அலங்கரித்தே
பொறுப்புடன் பூசைகள் செய்வர்
அன்னம்தண்ணி அருந்தாமல் கோயில் வீதியில்
அங்கப் பிரதட்சணம் செய்வர்
தன்னை வருத்தி தீச்சட்டி, காவடிகள்
தடையறச் செய்தே தொழுவர்!



கந்தா கடம்பா கார்த்திகேயா
கருணைக் கடலே கதிர்வேலா
சிந்தா மணியே சிவபாலா
சினமுடன் குற்றமர்ந்த குமரா
வந்தாரை வாழவைக்கும் வடிவேலா
வாட்டம் போக்கிடும் வடிவழகா
நொந்தா லடியவர் நோகாமல்
நொடியினில் சுகந்தரும் சுப்ரமணியா!

எல்லையில்லாப் பரம்பொருளே எமைக்காக்க
எழிலான மயிலேறி வருவோனே
தொல்லைநீக்கி துயரினைத் துடைத்து
தொடராமல் துன்பங்கள் தீர்ப்போனே
தில்லையில் ஆடுகின்ற பெருமான்காதில்
தித்திக்க உபதேசம் செய்தோனே
நல்லையில் நின்று அருள் செய்யும்
நாயகா நின்தாள் போற்றி போற்றி!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்

நகைச்சுவைத் தொடர் 402

# ராசம்மா ராச்சியம்



"நந்தி...வழி மறைத்திருக்குதே......மலைபோல ஒரு மாடு படுத்திருக்குதே...கோவில் வர மாட்டேன்---என் ஐயே ஓரடி விலகினால் போதுமங்கே..."



உலகரும் முருகேசரும் நித்திரை விழித்து அடுத்தநாள் பள்ளிப் படிப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பார்த்த பக்த நந்தனார் பாடல்கள் காதில் ரீங்காரமிட... காட்சிகள் கண்முன் தோன்றி மறைந்தன.



அத்துடன் தாமோதரம் நல்லூர் திருவிழா சென்று அங்கு பட்ட அவஸ்தைகள் அமளி துமளி...பிறேக்கிங் நியூஸ்போல உலகரை குழப்பிக்கொண்டிருந்தது.



உலகண்ணை...முருகன் சாமியை பார்க்கமுதல் அட்டதிக்குப் பாலகர் போல் ஆங்காங்கே ஆமியை தரிசித்து விட்டுத்தான் போகவேண்டும். குளித்து ஆசாரமாகப் போகும்போது...பியரும் விஸ்கியும் குடித்துவிட்டு எங்களை ஆமிக்காரன் ஐ.டி., அரிச்சனைத் தட்டு... செக் பண்ணுறான். முடித்தேங்காயை முடி ஒட்டியதோ அல்லது ஒறிஜினலோ என சந்தேகமாகப் பாக்கிறான் என ஒரு நேர்முக வர்ணனை செய்ததை உலகர் எல்லோருக்கும் விளக்கமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்.




யு...நோ... என்ரை கிறான்ட்பாவோடை நான் ரூ...திறீ ரைம்ஸ் நல்லூர் போனனான் என... ஐபொட் அகிலாண்டேஸ்வரி ஆரம்பிக்க... செக்கண்ட் புளோர் செல்லம்மா மெதுவாக அரைகுறைத் தூக்கத்திலிருந்த ஆட்டிலறி அன்னம்மாவை தட்டி எழுப்பினா.



என்ரை கிறான்ட்பா... நல்லூரிலை ஒரு சைற்றிலை இருந்த முருகன்ரை சுவிம்மிங் பூலைக் கட்டினவர். ஆட்டிலறி அன்னம்மாவின் தூக்கம் தெளிவாகக் கலைந்து உசாராகி விட்டார். சிரித்துக்கொண்டு வட்ஸ்அப் வரதனைப்பார்த்தார். வட்!... முருகன்ரை சுவிம்மிங் பூல் என்று...கூகிள் கோகிலா கேட்க... அது தீத்தக்கேணி. சுவிமிங் பூல் இல்லையென்று தெளிவு படுத்தினார் வட்ஸ்அப் வரதன்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர் உல்லாசப்பிரயாணத்திற்கு சொந்த நாட்டிற்கு, சொந்த ஊருக்கு, சொந்த வீட்டிற்கு...அதாவது உறவினருக்கோ யாருக்கோ வீட்டை வாடகைக்குக் கொடுத்துவிட்டு வீட்டுக்கு அருகிலேயே லொட்ஜ் ஆகப் புனரமைத்த வீடுகளில் 2,3 வாரம் வாடகைக்கு இருந்துவிட்டு தமிழ் தெரியாத மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தரப்பட்ட மொழிபெயர்ப்புத்தான் கேணி-சுவிம்மிங் பூல். ஆமி, பொலிஸ் அதிரடிப்படை புடைசூழ நல்லூர் கந்தனை தரிசிக்க வந்தவர்கள்...



கந்தனைத தரிசிக்க வருபவர்களை முருகனுக்கு
காவலுக்கு வேலுண்டு... ஆடலுக்கு மயிலுண்டு...
காக்க காக்க ஆனால் சூரனை வென்ற ஆறுபடை
வீடுகொண்ட நல்லைக்கந்தனுக்கே
அரசபடை காவலா?
ஆடு நனைகிறதென்று அரசு (ஓநாய்கள்) அழுகின்றன.
சிவன் மைந்தனுக்கு சிங்கள அரசின் காவல் தேவையா?
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை இடும்பனை
அழித்தவேல் இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா!



அரசுக்கும் பாதுகாப்பு, ஆண்டவனுக்கும் பாதுகாப்பு. சேர்ச்சுக்கு செல்பவர்களை சேர்ச் பண்ணுகிறார்கள் (ஆராய்கிறார்கள்.. பரிசோதிக்கிறார்கள்) மசூதிக்குத் தொழச் செல்வோரை அழ வைக்குமளவிற்கு சோதனை செய்கின்றனர்.



சாதுவாக இருக்கவேண்டிய பௌத்த பிறவிகளை...அதாவது துறவிகளை கைது செய்கின்றனர். விசாரணை செய்கின்றனர்.



கையை உயர்த்தி சிரசுமேல் வைத்து கந்தனை வணங்குவோரும் வீதிகளில் ஆமிகளுக்குக் கையை உயர்த்த வேண்டியுள்ளது.
...காக்க காக்க...

காசும் பணமும் காவுடன் சோறும் ஓதுமஞ்சனமும் ஒருவழிப்போக்கும்
அடியனைக்கண்டால் அலைந்து குலைந்திட மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூள்தாளெனைக்கண்டால்
கலங்கிட அஞ்சி நடுங்கிட..
...காக்க காக்க...





உலகை உலுக்கும் பல பிரச்சினைகள்.
அமெரிக்காவில் ஆங்காங்கே துப்பாக்கிச்சூடு... அதர்மம் ஓர் இனத்தின்மீது கொண்ட வெறுப்பால் அவர்களை அழிக்கவேண்டும் என்று அவர்கள்மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு...
ஒரு வாரத்திற்குள் கிட்டத்தட்ட 30பேர் பலி. 50க்கு மேற்பட்டோர் காயம். இதனை காரணம் காட்டி... தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கிறது.

அமெரிக்காவின் 59ஆவது ஜனாதிபதித்தேர்தல்.
அமெரிக்காவின் 45ஆவது ஜனாதிபதியாக இன்று பதவி வகிக்கும் றொனால்ட் ட்றம்ப் 2ஆவது தடவையாக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகிறார். மெச்சிக்கோவிற்கு இரும்புத்திரை, பயங்கரவாத முறியடிப்புக்கள்... பல ஆதரவு... சில எதிர்ப்பு... இந்தியாவிலும் இலங்கையிலும் தமிழரின் சொத்துக்கள் வீடு நிலம் கோவில் நிலங்கள் அபகரிப்பதைப்போல அமெரிக்கா உலகின் பல நாடுகளை...கடல்வழி ஆகாய மார்க்கம் போன்றவற்றை அபகரித்துள்ளது. அபகரித்து வருகிறது.

இலங்கையில் 8ஆவது ஜனாதிபதித் தேர்தல் இவ்வருட இறுதியில் நடைபெற இருக்கிறது. நடந்த நடக்கின்ற நடக்கப்போகும் தில்லுமுல்லுகளை சொன்னால்... எண்ணிலடங்காது, எழுத்திலடங்காது.


ஞாபகம் இருக்கிறதா ஒகஸ்ற் 1..15



16. ராமகிருஸ்ண பரமஹம்சர் நினைவு தினம். (பெப்ரவரி 18.1836–ஒகஸ்ற் 16.1886) சுவாமி விவேகானந்தர் இவரிடம்தான் சீடராக இருந்தார். அனைத்த மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.



18. நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் நினைவுதினம் (1945)



19. உலக புகைப்படநாள்.

20. ஆவணி ஞாயிறு.




22. ஜாக் லெக்ரன் (Jack Jayton NDP ) நினைவு தினம் 2011.



22. டி.எஸ். பாலையா பிறந்த தினம். (ஒகஸ்ற் 22, 1941_டிசெம்பர் 21, 1972) ஆரம்பகாலத்தில் வில்லனாக நடித்தவர். பின்னர் நகைச்சுவைப்பாத்திரத்தில் முத்திரை பதித்தவர். (காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள், திருவிளையாடல் போன்ற படங்களில் பாலையாவை மறக்க முடியுமா?)

25. 'அருள்மொழி அரசு', 'திருப்புகழ் ஜோதி' திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறந்த தினம். (ஒகஸ்ற் 25, 1906 - நவம்பர் 07, 1993)



31. இளவரசி டயானா நினைவு தினம் (1997)

# மறக்க முடியவில்லை...



மாமரத்தில் ஊஞ்சலாடியதையும்
மருதாணி பூசி மகிழ்ந்ததையும்
மயிலறகுகள் சேகரித்ததையும்
மடியில் தலை வைத்துறங்கியதையும்

மறக்க முடியவில்லை தோழி!

கூட்டாஞ்சோறு ஆக்கியதையும்
கும்மியடித்துக் களித்ததையும்
கொலு பார்த்து மகிழ்ந்ததையும்
குயில்பாட்டுக் கேட்டதையும்

மறக்க முடியவில்லை தோழி!

வெண்ணைதிருடித் தின்றதையும்
அன்னையிடம் அடி வாங்கியதையும்
திண்ணைக்கதை பேசியதையும்
வண்ண மலர்கள் சூடியதையும்...

எவ்வாறு நான் மறப்பேன் தோழி?

மீண்டுமொருமுறை பிறக்க வேண்டும்
வேண்டும்படியெல்லாம் வாழ வேண்டும்
கண்டவர் கண்பட்டுப் போனாலும்
நீண்டு நிலைத்திருக்கும் அன்பே..
நம் நட்பு மட்டும்!

மறக்க முடியாத நினைவுகளுடன்...

காரைக்குடி பாத்திமா ஹமீத், ஷார்ஜா


TNEXT's
5th Annual
ஆண்டு
Tamil Fest
தமிழர் தெரு விழா
Powered By
iConnect Mortgages
AUGUST
24 & 25
Markham Road
Between McNicoll & Passmore
Tamil Fest
Largest Tamil Street Festival Outside of Asia
ஆசியக் கண்டத்துக்கு வெளியே மிகப்பெரும் தமிழர் தெரு விழா
Title Sponsor
TNEXT
Get Connected. Stay Connected.
Powered By
iConnect Mortgages
Proudly Hosted By
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
Silver Sponsors
Aalayaa
Blue Diamonds Group
Formula Honda
Where You're Treated like Family.
Koodo
NAVA WILSON
TD
WOW! WING
Media Sponsors
ATN
East FM 102.7 தமிழ்
LANKASRI
metrolandmedia toronto
Marketing Partner
PRINT FAST.ca
Refreshment Partner
Climex
tamilfest.ca
416.240.0078
/tamilfest













# GTA SQUARE

## 12ஆவது வருட கோடைகால கொண்டாட்டம்








# A New Medical & Professional Building

## ON MARKHAM ROAD - TORONTO




## UNITS AVAILABLE FOR SALE

**SUITABLE FOR:**

- Family Physicians
- Dentists
- Physiotherapists
- Insurance & Financial Services
- Pharmacists
- Medical Labs
- Chiropractors
- Mortgage Brokerages
- Lawyers
- Accountants
- Real Estate
- Other Professionals

**Retail not permitted**

## For More info. Call:

**Raja Mahendran**** **416.315.9397**

**Gulshan Sharma**** **416.407.5911**


## HomeLife / GTA Realty Inc. Brokerage*

**416.321.6969**

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated ** Broker



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)



வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East, Unit 222 Toronto ON M1S 0C2


DonMills Rd. & Eglinton Ave
Spadina & Front st. TISI PARA
647-296-0596 www.tisipara.com
Para Tisikulasingam
Sales Representative



வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Muthucumaraswamy
Broker
Direct: 416.567.6209
TEAM TITANS
Residential / Commercial / Purchase / Sale / Investment / Leasing


வீடு வாங்க, விற்க, வாடகைக்கு
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc.Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
*Independently Owned & Operated
INCOME TAX E' FILE 416-288-1548


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES


இல்லமே எல்லாமாகும்...
வீடு வாங்க, விற்க, வாடகைக்கு...
Uthaya Kathiravel
Sales Representative
Dir : 289.980.2159
Bus: 905.201.9977
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8


BUY - SELL - LEASE - RENT - INVEST
The Realtor for your Dream House
Amalraj Joseph
Sales Representative
416.300.8294
amalraj.joseph@gmail.com
HomeLife/GTA Realty Inc.


B.J TAXI SERVICE
NEED A RIDE?
SHORT TRIPS FROM $10
விமான நிலையம் சென்றுவர மற்றும் செல்ல
முதியோர் கோயில் மருத்துவ நிலையம்
கடைகள் சென்றுவர வாகன சேவை வழங்கப்படும்
RIDE FOR SENIORS, ODSP, WELFARE GROCERY SHOPPING & FOOD DELIVERY
FAMILY SHOPPING & PARTY PICK UP / DROP UPTEMPLES , DOCTOR APPOINMENTS
AIRPORT $45 By Appointment Only
PICK UP/ DROP UP
CALL:CHERAN 416-727-1484


HOMES & COTTAGES FOR SALE
BRAMPTON
2 years old
$799,000
2-Storey - Detached 4BR
OSHAWA
$699,900
2-Storey - Detached 4BR
Danforth & Vic. Park
0.5 Acres
Redevelopment
HAWARTHA LAKES
$299,990
Bungalow - 5BR
UXBRIDGE - ONTARIO
$1,389,000
Gas Station & Property
GEORGINA -KESWICK
$899,900
Restaurant&Property
Cottages Availabe for ( 20 People ) Rent starting from $149 Perday
1st & 2nd Mortgage available upto 1 Million
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110